Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 29 வெள்ளிக்கிழமை (12.06.2015) பக்கங்கள் 20 ஓசை – 255

## வெளிநாடுசெல்லும் பணிப்பெண்களுக்கு இனி கட்டுப்பாடு

வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்று வெளிநாடு செல்லும் பெண்கள், தங்களது குடும்ப பின்னணி தொடர்பான அறிக்கையொன்றை வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்களத்துக்கு வழங்கப்பட வேண்டும் எனும் நடைமுறை, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பணிப் பெண்களாக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுச் செல்லும் பெண்களுக்கே இந்த நடைமுறை கட்டாயமாக்கப்பட்டுள்ளது என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்தது. 5 வயதுக்கு குறைந்த குழந்தைகள் உள்ள பெண்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதைத் தவிர்ப்பதற்காகவே இந்த நடைமுறை கொண்டுவரப்படவுள்ளது என பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசின் நூறுநாள் திட்டத்தில் தெற்கிற்கு அதிக முக்கியத்துவம் ஏன்?

### நாடாளுமன்றில் சந்திரகுமார் எம்.பி. கேள்வி



ஆட்சி மாற்றத்தின் பின்னர் தெற்கிலே பல பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வுகாணப்பட்டிருக்கிறது. இந்த மாற்றத்தினால் சரத் பொன்சேகா அவருக்கெதிரான பல குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டு Field Marshal ஆக மிகப்பெரிய அதியுயர் அந்தஸ்த்தைப் பெற்றிருக்கின்றார். ஆனால், பாவம்! சிறையில் வாடும் எங்கள் இளைஞர்களுக்கான எந்த நிவாரணமும் எந்த நம்பிக்கையும் புதிய ஆட்சியினால் ஏற்படுத்த முடியவில்லை. முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க அவருக்கெதிரான குற்றசசாட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டுள்ளார். இவற்றை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால்,

(19) ஆம் பக்கம் பார்க்க

# சிறிய கட்சிகள் கடும் எதிர்ப்பு

## ஊசலாடுகிறது 20

(கொழும்பு)

புதிய தேர்தல் முறை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு வகை செய்யும் இருபதாவது அரசியல் திருத்தச்சட்த்துக்கு சிறுபான்மைக்கட்சிகள் ஒன்று திரண்டு எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

சிறிய கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்றுஅவசர ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடாத்தின. இதில் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் கட்சிகள் பங்கு பற்றின.

இக்கூட்டத்தின் இறுதியில் 20ஆவது அரசியல் திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக 18 சிறிய கட்சிகள் கூட்டாக தீர்மானம் நிறைவேற்றி யுள்ளன.

கொழும்பு வோட்டர்ஸ் எட்ஜில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் இறுதியில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க



## ஈரானிடம் எண்ணெய்; மறுக்கிறது அரசு

அமெரிக்காவின் தடையை மீறி பனாமா கப்பல் ஒன்றின் மூலம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒரு மில்லியன் பரல் ஈரானிய எண்ணெயைக் கொள்வனவு செய்துள்ளதாக வெளியான செய்திகளை வெளிவிவகார அமைச்சு நிராகரித்துள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடையை விதித்துள்ள நிலையில், ஈரானிடம் இருந்து வாங்கப்பட்ட 10 பில்லியன்

(19) ஆம் பக்கம் பார்க்க

## கைது செய்ய நீதிமன்றம் தடை

நாடாளுமன்ற உறுப்பினரான டிரான் அலஸை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை கைது செய்ய வேண்டாம் என்று நீதிமன்றம் தடை விதித்துள்ளது. தன்னைக் கைதுசெய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகக் குறிப்பிட்டு டிரான் அலஸ் அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணை இன்று உயர்நீதிமன்றத்தில் மூன்று நீதியரசர்கள் முன்னி

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்க விரைவான நடவடிக்கை

### விவகாரம் நிதி அமைச்சரின் கவனத்தில்

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்கிக்கொள்ள விரைவான நடவடிக்கை எடுக்கும்படி நிதி அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஓய்வவூதிய முரண்பாடுகளை நீக்குதல் சம்பந்தமாக வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு கடிதம் அனுப்பிவைத்துள்ளார். இதன் பிரதி உள்ளூராட்சி மற்றும் உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக ஆட்சிமுறை அமைச்சர் கரு ஜெயசூரியவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 30ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

01.01.2006 ஆம் திகதிக்கு முன்பு

(19) ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் பிரதமர்கள் மைத்திரியின் ஆலோசகர்கள்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மூத்த ஆலோசகர்களாக, முன்னாள் பிரதமர்களான ரட்ணசிறி விக்கிரமநாயக்க மற்றும் டி.எம்.ஜெயரட்ண ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் விவகாரங்களுக்கான மூத்த ஆலோசகர்களாக இவர்கள் செயற்படுவர் என்று ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்

(19) ஆம் பக்கம் பார்க்க

## இறுதி முடிவு இன்று



20ஆவது அரசியல் யாப்பு திருத்தம் குறித்து இன்று இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225ஆக இருக்க வேண்டும் என்பதை பல தரப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்று உரையாற்றியபோதே அவர்

(19) ஆம் பக்கம் பார்க்க

# முருங்கன் பகுதியில் முறைதவறிய மண் அகழ்வு

## பொலிஸாரால் ஐவர் கைது



சட்டவிரோதமாக கடத்தப் பட்ட ஐந்து டிப்பர் மண் நேற்று அதிகாலை முருங்கன் பொலிஸா ரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டுள் ளனர். முருங்கன் பிரதேசத்தில் சட்டவிரோத மண்கடத்தப்படுவது தொடர்பாக மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சக ரின் பணிப்புரைக்கு அமைவாக முருங்கன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் மேற்பார்வை யில் பொலிஸ் குழு நேற்று திடீர் சோதனையில் ஈடுபட்டது. இதன் போது முருங்கன் பகுதியில் சட்ட விரோதமாக மண் ஏற்றிச்சென்ற 4 டிப்பர்களும், அதேபோன்று நானாட்டான் பகுதியில் சட்டவி ரோதமாக மண் ஏற்றிச்சென்ற ஒரு டிப்பரும் நேற்று அதிகாலை பொலிஸாரினால் கைப்பற்றப்பட் டதுடன், அதனை ஓட்டிச்சென்ற சாரதிகள் ஐவரும் கைதுசெய்யப் பட்டுள்ளனர். இவர்களை மன் னார் மாவட்ட நீதிமன்றில் முற் படுத்தி ஐந்து டிப்பர்களையும் அதற்குள் உள்ள மண்ணையும் நீதிமன்றில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டுவரு கின்றனர்.

# குடத்தனையில் யுவதி சடலமாக மீட்பு

(கரணவாய்)

குடத்தனை கிழக்கில் வீடொன்றின் கிணற்றுக்குள் யுவதியொரு வர் நேற்றுக்காலை 10 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குடத்தனை கிழக்கைச் சேர்ந்த ஞானசிகாமணி பிரபாளினி (வயது 30) என்ற யுவதியே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த நபரின் வீட்டிலுள்ள அனைவரும் வெளியே சென்றிருந் ததாகவும், வெளியே சென்றிருந்த தாயார் வீட்டிற்கு வந்ததை யடுத்தே கிணற்றுக்குள் சடலம் இருந்ததை அறிந்து மீட்டுள்ளனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக மந்திகை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (18)

# அல் குர்ஆன் சிறப்புப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அல்பாக்கியாஷ் ஷாலிஹொத் பவுண்டேசன் ஆறாவது வருட மாக நடாத்தும் றம்ழான் மாத புனித அல் குர்ஆன் சிறப்புப்போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழில் மீள்குடியேறி வாழும் முஸ்லிம் மாணவ, மாணவிகள் அனைவரும் கலந்துகொள்ளலாம். மாணவச் செல்வங்களின் சன் மார்க்க சிந்தனையையும், அறிவையும் மேம்படுத்த அல்குர் ஆன் சிறப்புப்போட்டியில் கலந்துகொள்வது சிறந்ததென தலைவர் அஷ்ஷேய்க் எம்.எஸ்.ஏ.எம் முபாறக் மௌலவி கூறினார். (105)

# திருடர்கள் தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்)

திருடிய பொருட்களை இடை நடுவில் விட்டு தப்பிச்சென்ற சம் பவம் ஒன்று நெல்லியடி துன் னாலை மத்திய தாமரைக்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் கோவிலுக் குச் சென்ற வீட்டின் உரிமையா ளர் திரும்பி வருவதை அறிந்த திருடர்கள் தம்மால் திருடப்பட்ட பொருட்களை அப்படியே கை விட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

இவ்விடயத்தை வீட்டின் உரி மையாளர் நெல்லியடி பொலி ஸாரின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து மோப்ப நாய் கள் சகிதம் ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண் டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்கொண்ட விசாரணை களின் அடிப்படையில் சந்தேகத் தின்பேரில் ஒருவரை கைது செய்த முயற்சி மேற்கொண்டுள் ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். (18)

# இந்து மயானத்தை புனரமைக்க அச்சுவேலி மக்கள் கோரிக்கை

சடலங்களை தகனம் செய் வதற்கான அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் தமது பகுதி இந்து மயானத்தை பயன்படுத்துவதில் பெரும் சிர மங்களை எதிர்நோக்குவதாக அச்சுவேலி வடக்கு மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வலி. கிழக்கு பிரதேச சபை நிர்வாகத்தின் கீழ்வரும் இந்த மயானத்துக்கான எல்லைகள் இதுவரை நிர்ணயம் செய்யப் படாத நிலையில் இதற்கான பாதுகாப்பு வேலிகள் இல்லாத நிலையில் இம்மயானம் இருப் பதையும் பிரதேச மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சுமார் 800 குடும்பங்கள் இந்த மயானத்தை பயன்படுத்தி வரு கின்றன. மழைகாலங்களில் சட லங் களை தகனத்துக்காக இந்த மயானத்திற்கு எடுத்துச்செல்லும் போது முழங்கால் வரையான வெள்ள நீரில் நடந்தே சடலத் தினை எடுத்துச் செல்லவேண்டி யுள்ளதாக அவர்கள் தெரிவிக் கின்றனர்.

சடலம் தகனம் செய்யப்படும் இடம் கூரைகள் எதுவும் இல்லாத நிலையில் மழைகாலங்களில் பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்ள வேண்டியிருப்பதாக அச்சுவேலி வடக்கு கிராம அபி விருத்தி சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தமக்குத் தெரிந்தவரையில் சுமார் ஒரு வருடமாக எவ்வித அபிவிருத்தியும் இல்லாத நிலை யிலேயே இந்த மயானம் இருந்து வருவதால் பிரதேச சபை நிர்வா கம் இவ்விடயத்தில் உரிய நடவ டிக்கை எடுத்து மயானத்தை புன ரமைத்துத் தர வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நல்லூரில் கௌரவிப்பு நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசா லையின் ஒய்வுநிலைப் பிரதி அதிபர் பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு, எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய மேலாளர் அளிர்தகழியூர் டாக்டர் ஓ.கே. குண நாதன் ஆகியோரைக் கௌரவிக் கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை நல்லூரில் இடம்பெற்றது.

யாழ். இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் ஒய்வுநிலைப் பேராசி ரியர் சி.சிவலிங்கராஜா தலை மையில் நடைபெற்ற இந்நிகழ் வில் தகைசார் வாழ்நாள் பேராசி ரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி ஆறு.திருமுருகன், தென்னிந்தி யத் திருச்சபையின் முன்னாள் பேராயர் சு.ஜெபநேசன், அருட் கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை மூத்த எழுத்தாளர் தமிழ்மணி கலாநிதி அகளங்கன் ஆகியோர் நிகழ்வின் நாயகர்களை வாழ்த்தி யும் நயந்தும் உரையாற்றினர்.

யாழ். இலக்கிய வட்டத்தின் நினைவுப் பரிசினை எழுத்தாளர் ஓ.கே. குணநாதனுக்குக் கலாநிதி ஆறுதிருமுருகனும் பண்டிதர் செ. திருநாவுக்கரசுவுக்கு பேராசிரியர் அசண்முகதாசும் வழங்கிக் கௌர வித்தனர்.

தென்மராட்சி இலக்கிய அணியின் சார்பில் ஆசிரியர் சு. மார்க்கண்டு, அ.வாசுதேவா ஆகி யோர் வாழ்த்துப்பா வழங்கியும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை யின் சார்பில் அதிபர் வீ.கருண லிங்கம், பிரதி அதிபர் ச.லலீசன் ஆகியோர் பொன்னாடை போர்த் தியும் கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் அருட்பணியாளர் கள், எழுத்தாளர்கள் இலக்கிய ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டு நிகழ்வின் நாயகர்க ளுக்கு வாழ்த்துக் கூறினர்.

பண்டிதர் கலாநிதி செ. திரு நாவுக்கரசு மருத்துவப் பராமரிப் பில் வீட்டில் தங்கியிருக்கும் நிலை யில் நீண்ட இடைவெளியின் பின்னர் பங்குபற்றிய நிகழ்வாக இந்நிகழ்வு அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# இறுவட்டு வெளியீடு

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் காண்பிய ஊடகக் கழகத்தின ரால் இசையின் முகங்கள் இசைப்பாடல் இறுவட்டு வெளியீடு நேற்று இடம்பெற்றது

உயர்தர மாணவர் மன்றத் தலைவர் அ.ஜீசஸ் றொக்கின்சன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில், பாடசாலைகால வாழ்வினை நினைவுபடுத்துகின்ற வகையில் விடை பெறும் நேரம் என்னும் தொனிப்பொருளில் பாடல்கள் அடங்கிய இசையின் முகங்கள் இறுவட்டு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இவ் இறுவட்டிற்கான பாடல் வரிகளினை இணுவையூர் இனிய வன் இயற்றியுதுடன் வழிகாட்டல் ஆலோசனையினை காண்பிய ஊடகக் கழகப் பொறுப்பாசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கிய தோடு, பாடலுக்கு ரி.மதீசன இசையமைத்துள்ளதோடு ஒலிப்பதி வினை சப்தமி ஒலிப்பதிவுக்கூட கோ.சத்தியன் செய்துள்ளதோடு எஸ்.நிஜந்தன் ஜி.றொசான் ஆகியோர் தயாரித்துள்ளனர். பாட லினை ஜி.யோசுவா பிரசாந் ஜே.கிசாங்கன் ஜே.கலிங்டஸ் ஆகியோர் பாடியுள்ளார்கள்.

இறுவட்டினை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியர் ஜெ.ரஜீவன் வெளி யிட்டுவைக்க சிறப்பு விருந்தினர் சம்பத்வங்கி முகாமையாளர் ச.பரம நாதன் கல்லூரி அதிபர் எஸ்.சிவநேஸ்வரன் காண்பிய ஊடகக் கழக பொறுப்பாசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் காண்பிய ஊடகக் கழக மாணவர்கள் இணைந்து பெற்றுக்கொண்டார்கள் (63)

## ஞானச்சுடர் வெளியீடு

(வடமராட்சி)

வடமராட்சி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய மகிமை மற்றும் இந்து மதத்தின் சிறப் பினை எடுத்துக்கூறும் மாதாந்த சஞ்சிகையான ஞானச்சுடரின் வைகாசி மாத இதழ் வெளியாகி யுள்ளது.

# சண்டிலிப்பாயில் தலைமைத்துவ கருத்தரங்கு

(சண்டிலிப்பாய்)

மீள்குடியேறிய மக்களின் மீள்திறனை கட்டியெழுப்பல் என்னும் செயற்திட்டம் சேவாலங்கா அமைப்பினால் வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்துடன் இணைந்து இடம்பெற்று வருகின்றது.

இதன் முதல் அங்கமாக இடம்பெற்ற இரண்டு நாட்கள் கொண்ட தலைமைத்துவக் கருத்தரங்குகளில் பங்குகொண்ட இளைஞர் யுவதி களுக்கான சான்றிதழ்களும் ரீசேட்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 2 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற் றது. இதில் பயன்பெற்றிருந்த 11 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 600 பேருக்குச் இச் சான்றிதழ்களும், ரீசேட்களும் வழங்கப்பட்டன..

இந்நிகழ்வில் வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செய லர் திருமதி.யு.யசோதா, உதவிப் பிரதேச செயலர் திருமதி நே.செல்வ ரட்ணம் பிரதேச இளைஞர் கழக சம்மேளத் தலைவர் எஸ்.றொபின் ஷன், பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.ஷாந்தன், சேவாலங்கா நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் இளைஞர் கழகத் தின் அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (48)

# கலை அரங்கு திறந்துவைப்பு




(அல்வாய்)

அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலையத்தின் ஏற்பாட் டில் புதிதாகக் கலையரங்கொன்று நேற்று முன்தினம் திறந்துவைக் கப்பட்டுள்ளது.

அப்பகுதியை பிறப்பிடமாகக் கொண்ட சமூக சேவையாளர் வேலுப்பிள்ளை கனகம்மாவின் நினைவாக நிர்மாணிக்கப்பட்ட இக்கலையரங்கின் திறப்பு விழா சனசமூக நிலையத்தின் தலை வர் மா.மெய்யழகன் தலைமை யில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதி யாக வடக்கின் முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் கலந்துகொண் டார். (18)

# கிளிமூக்கு அரக்கன்

## (தமிழக தி.மு.க இதழின் கேள்வி பதிலில்)

**கேள்வி:-** கனிமொழி பேச்சைக்கேட்டு சரணடைந்தோம் என்று யாரோ ஓர் ஈழத்து அம்மணி குற்றச்சாட்டு வைத்திருக்கிறார்களே? இதற்கு என்ன பதில் சொல்கிறீர் அரக்கனே?

**பதில்:-** பதில் சொல்வதற்கு முன்னர் ஒரு பொறுப்புத்துறப்பு எச்சரிக்கை. லெமூரியா கண்டத்தை கண்டுபிடித்தவர்கள், ஈழம் சிட்பண்ட்ஸ் ஏஜென்சிகளில் முதலீடு செய்ப வர்கள், உலக பாவங்களுக்கெல்லாம் ஒரே காரணம் கருணாநிதி என்று நம்புபவர்கள், தமிழ் வரலாற்று அவியல் மையங்கள், தமிழ் நாஜிக்கள், பாரிஸ் லா சாப்பல், லண்டன் ஈஸ்ட் ஹாம் பாய்ஸ் இதைப் படிப்பதை தவிர்த்துவிடுங்கள். இந்த பதில் முழுக்க முழுக்க காமன்சென்ஸ் இருக்கும் சாமானிய தமிழ்நாட்டு மக்களுக்காக எழுதப்பட்டது.

நமது தமிழ்நாட்டு பொதுசனங்களுக்கு ஈழமென்றால் தமிழ், ஈழத்தவரென்றால் நேர்மையானவர்கள் என்ற ஓர் ஈழமாயை உண்டு. ஆனால் நமது நம்பிக்கைகளுக்கு மாறாக, தமிழ்நாட்டு அரசியல்வாதிகளுக்கு இரு க்கும் கயமைத்தனம், துரோகம் இவற்றைவிட ஏகத்துக்கும் அதிகம் ஈழத்த வருக்குண்டு. நம் அரசியல்வாதிகள் கருத்த றுப்பவர்கள் என்றால் ஈழத்துத் தலைவர்கள் கழுத்தறுப்பவர்கள். துரோகம், நயவஞ்சகம் இவை ஒப்பீட்டளவில் நம்மவர்களுக்கு அளவில் கொஞ்சம் குறைவே.

ஈழப்போராட்ட வரலாற்றை எடுத்துப் பாருங்கள், இவன் துரோகி, அவன் நயவஞ்சகன், இப்படி அடுத்தவரை குறைசொல்லியே ஒருவரை ஒருவர் போட்டுத்தள்ளிக் கொண்டிருப்பார்கள். எடுத்துக்காட்டு வேண்டுமென்றால், சபாரத்தினம், பத்மநாபா, மாத்தையா, நீலன் திருச்செல்வம், லக்ஷ்மன் கதிர்காமர் வரை பட்டியல் நீளும். கடை எண்பதுகளில் ஈழப்போராளிகள் தமிழ்நாட்டில் ஆடிய ஆட்டங்கள் கொஞ்சம் நஞ்சமல்ல, கட்டப்பஞ்சாயத்தை தமிழ்நாட்டில் மாபியத்தனமாக அறிமுகப்படுத்தியதே அவர்கள்தாம். போலிபாஸ்போர்ட்களை தமிழ்நாட்டுத்தமிழர் மூலம் பெற்றுக் கொண்டு, கனடா போய் இறங்கியதும், இந்திய பொலிஸிற்கு போட்டுக்கொடுத்த கதைகள் கூட உண்டு. நிற்க.

ஈழத்தவர், அதுவும் ஓர் அம்மணி குற்றஞ்சொல்லுகிறார், திமுக ஆளுமை குறை சொல்லப்படுகிறார், அதனால் குற்றஞ்சாட்டுபவர் நேர்மையானவராகத்தான் இருக்கமுடியும் என்ற ஈழமாயையில் இருந்து முதலில் வெளியே வாருங்கள்.

போரின் இறுதிக்கட்டம், இந்திய உளவுத்துறையும், இலங்கை இராணுவமும் உக்கிரத்தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கின்றன. (உலகப்போராளிகள் வரலாற்றில், ஊரில் இருக்கும் அனைவரையும் பகைத்துக் கொண்டவர்களென்றால் அது விடுதலைப்புலிகள்தான்) வல்லரசுகள் முடித்துவிடுங்கள் என்று சமிக்ஞை கொடுத்துவிட்டன. ஒரே உபாயம், சரண டைவதுதான். ஒருவேளை, வீரதீர சூராதி சூர, முப்படைகண்ட முப்பாட்டன் வழித்தோன்றல்கள், கனிமொழி யிடம் என்ன, யாரிடம் அறி வுரை கேட்டிருந்தாலும், சரணடைவது ஒன்றே வழி என்று சொல்லியி ருப்பார்கள். அந்த ஈழத்து அம்மணி, திமுக இளைஞர் அணி அல்லது தமிழக பொலிஸ் படையை அனுப்பி, சரணடைந் தவர்களை மீட்டிருக்க வேண்டும் என்று நினைத்திருப்பார் போல.



இறுதிப்போரின் ஒரு மாதத்திற்கு முன்னர், இதே புலிகள் வைகோவுடன் பேசியிருக்கின்றனர். பாஜக ஆட்சிக்கு வந்துவிடும், போரை எப்படியாவது இன்னும் நடத்துங்கள் என்று முட்டாள்த்தனமாக சொல்லியிருக்கிறார். போரை வெட்டியாக கடைசி குண்டு விழும் வரை நடத்தாமல் புத்திசாலித்தனமாக முன்னரே சமாதான கொடி பிடித்திருந்தால் முள்ளிவாய்க்கால் அவலத்தை தடுத்து நிறுத்தியிருக்கலாம். அரிவாளுடன் வீட்டு வாசலில் பெருங்கூட்டம் நிற்கும்பொழுது, சமாதானம் பேசுவதுதான் காமன்சென்ஸ்.

பருத்திவீரன் படம் பார்த்திருக்கிறீர்களா, "நீ பண்ண பாவத்தை எல்லாம் என் மேலே இறக்கிவச்சுட்டானுங்க" என்று ஒரு வசனம் வரும். விடுதலைப்புலிகள் 20 ஆண்டுகள் தெரிந்தோ தெரியாமலோ ஆடிய கொடூர ஆட்டங்களின் பாவம், கடைசியில் அப்பாவி சனங்களின் மேல் வந்திறங்கியது. எஞ்சியிருக்கும் புலிகளின் ஏஜெண்டுகள், தாங்கள் செய்த பாவங்களை திமுகவின் மேல் இறக்கி வைக்க முயல்கின்றனர்.

விடுதலைப்புலிகளின் மிகப்பெரிய பிரச்சினை, அவர்கள் இன்வின்சிபிள், அசைக்க முடியாதவர்கள் என நம்பிக்கொண்டிருந்தது. தெருச்சண்டைகளில் வென்ற ரவுடிகள், மாபியாக்களுடன் வெல்லமுடியும் என்று கற்பனைக்கோட்டை கட்டிக்கொண்டி ருந்ததைப்போல... புலம்பெயர்ந்தவர்களும், தங்களது விசாவிற்காக, புகலிடத்திற்காக, அடி குத்து வெட்டு, நீதான் கிங்கு ஏன்று புலிகளை ஏற்றிவிட டொமினோ அடுக்குகள் பலம் தாங்காமல் சரிந்து விழுந்தன. முள்ளிவாய்க்கால் என்பது, சொல்வதற்கு எனக்கே வருத்தமாகத்தான் இருக்கிறது, புலிகள் ஆண்டாண்டு காலமாய் செய்த குட்டி குட்டித் தவறுகளின் கூட்டுத்தொகையின் சமனித்தொகை.

சில மாதங்களுக்கு முன்னர், சங்கக்காராவை முன்வைத்து, ஈழத்தமிழர்கள், இந்தியத்தமிழர்களை ஆபாசமாக விமர்சித்ததை நீங்கள் வாசித்திருப்பீர்கள். அதில் குறிப் பிடத்தக்க ஒன்று, ஒரு ஈழத்தமிழர் மணிப் பிரவாளத்தமிழில் எழுதியிருந்ததை இங்கு நற்றமிழில் தருகின்றேன். "நான் ராஜபக்ஷவை மன்னித்தாலும் மன்னிப்பேன், கருணா நிதியை மன்னிக்கமாட்டேன்". இப்படி எப்பொழுதும் ஈழத்தமிழர்கள் துரோகி ஐடெண்டிபையிங் மூடிலேயே இருந்தால் ஈழமென்ன, முட்டுச்சந்தில் கூட ஒரு சதுர அடி வாங்க முடியாது.

காதல் மனைவி செய்த துரோகத்தை கவுரவத்திற்காக வெளியே சொல்லாத கணவனைப்போல, திமுக, ஈழப்போராளி களின் பாவத்தை தன் தலையின் மேல் சுமந்து கொண்டிருக்கிறது.

திமுகவின் மேலோ திமுகவின் ஆளுமைக–ளின். மேலோ குற்றச்சாட்டுகளை வைக்கும் முன்னர், கீழ்வரும் கேள்விகளை நீங்கள் கேட்டுப்பாருங்கள்:

1. அழிவின் தறுவாயில் இருக்கும் பொழுது, கடைசி துருப்புச்சீட்டு சரணடைவதுதான். சரணடையச்சொல்லியிருந்தால் அது தவறா? ஊரில் இருக்கும் குழந்தைப் புலிகளுக்கெல்லாம் சயனைட் கொடுத்து சாப்பிடச்சொன்ன தளபதிகள், தங்களுக்கு என்று வரும்பொழுது சயனைட் சரக்கு தீர்ந்துவிட்டதா என்ன?

2, சகோதரயுத்தம் போடாதீர்கள் என்று சொன்னபொழுது கேட்கவில்லை. நைச்சியமாக சர்வதேசம் சொல்வதைப் பெற்றுக்கொண்டு நிலைப்பெற்று அடுத்த நிலையில் வலுப்பெறுங்கள் என்று சொன்னதை விடுதலைப்புலிகள் கேட்கவில்லை. திமுக சொன்னதையெல்லாம் கேட்காமல், மக்கள் செல்வாக்கு இல்லாத தமிழகப்பிரமுகர்களை நம்பிக்கொண்டிருந்தது திமுகவின் தவறா? வைகோ மாதிரி ஆட்கள் மீட்பர்களாக வருவர் என்று நம்பிக்கொண்டிருந்தால் அது திமுகவின் தவறா?



3. குற்றஞ்சாட்டும் அம்மணி, இவ்வளவு நாட்கள் எதுவுமே பேசவில்லை?. அல்லது இப்பொழுதுதான் அம்மணியின் இலங்கை இந்திய கூட்டுஸ்தாபனத்திற்கு நிதி வழங்கப்படும் என்று சொல்லப் பட்டிருக்கிறதா?.

4. ஈழப்போராட்டத் தலைவர்கள் நேர்மையானவர்க ளாக இருந்திருந்தால் என்றோ ஈழம் குடியரசாகியிருக்கும். அடைந்தால் தன்னால் மட்டுமே ஈழம் அடையவேண்டும் என்ற நார்சிசம் கடைசியில் நாரா சமாகிப் போனது. இதற்கும் திமுகவா காரணம்.

5. துரோகங்களின் ஒட்டு மொத்த உருவ–மான ஈழப்போராட்டத் தலைவர்களின் எச்சங்களின் பேச்சுகளை நம்பமுடியுமா?

இனியும் ஈழத்தமிழர்கள் சொல்வதெல்லாம் உண்மை என்று நம்பிக்கொண்டு திமுகவின் மேல் பழிபோட்டுக் கொண்டிருந்தால் நமக்கு நாமே குழிவெட்டிக்கொண்டு படுத்துக்கொள்ள வேண்டியதுதான். சாதிக்கௌரவ யுத்தம் நடத்திக்கொண்டிருந்த சொற்ப யாழ்ப்பாணத் தமிழர்களுக்காக ஒட்டு மொத்த தமிழ்நாட்டு சமூகநீதியையும் அதற்கான வேர்களையும் பலிகொடுக்க முடியாது.

ஈழத்தவர்கள் வேறு,.. தமிழ்நாட்டுத் தமிழர்கள் வேறு என்று பார்க்க ஆரம்பி யுங்கள். திணித்துக்கொண்ட திமுக வெறுப்பை வெளிப்படுத்த வேண்டுமென்ப தற்காக ஈழமாயையில் உழன்று வாழ்க் கையைத் தொலைக் காதீர்கள். ஏற்கனவே தமிழ் என்றாலே பயங்கரவாதிகள் என்று புலிகளால் தமிழர்களுக்கு நல்ல பெயர் கிடைத் திருக்கிறது. அதை அழிக்கவே 7 கோடித் தமிழர்கள் இன்னும் பாடுபட வேண்டியிருக்கிறது.

தலைகீழாக நின்று தண்ணீர் குடித்தாலும் தமிழ்நாடு அமையாமல் ஈழம் அமையாது. ஒருவேளை நீங்கள் தமிழ்த்தேசியம் அமைக்க விரும்பினால் தமிழ்நாட்டிலிருந்து ஆரம்பியுங்கள். நீங்கள் சார்ந்திருக்கும் ஈழம் சிட்பண்ட்ஸ் கம்பெனிகளின் முதலாளிகளை தனித்தமிழ்நாடு பற்றி பேசச்சொல்லுங்கள்.

# வடக்கு முஸ்லிம்களின் குடியேற்றம் நிலையான ஏற்பாடுகள் தேவை

## டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்துள்ள முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றம் தொடர் பிலும் நிலையான ஏற்பாடுகள் அவசியமென ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சி(ஈ.பி.டி.பி.)யின் செய லாளர் நாயகம் டக்ளஸ் தேவா னந்தா வலியுறுத்தியுள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், வடக்கு மாகாணத்தில் பல் வேறு இடங்களிலிருந்து தமிழ் மக்களைப் போன்றே முஸ்லிம் மக்களும் இடம் பெயர்ந்துள்ளனர்.

அதுமட்டுமல்லாமல், யாழ். குடா. நாடு பயங்கரவாதச் செயற் பாடுகளில் இருந்து மீட்கப்பட்டது முதல், முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பில் தொடர்ந்தும் நாம் வலியுறுத்தி வந்துள்ளதுடன், அதற்கான ஏற் பாடுகளையும் முன்னெடுத்திருந் தோம் இது குறித்து எமது முஸ் லிம் மக்கள் நன்கறிவார்கள்.

எனவே, இவ்வாறான தடை-கள் அகற்றப்பட்டு, முஸ்லிம் மக் கள் தங்களது சொந்த இடங் களில் நிலையான மீள் குடியேற் றத்தையும், அதற்கான அடிப் படை வசதிகளையும் பெற நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற் பட வேண்டியது அவசியமென டக்ளஸ் தேவானந்தா தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கதா கும்.

# கிளிநொச்சியில் பெண் ஒருவரை மூன்று நாட்களாக காணவில்லை

கிளிநொச்சி திருநகரைச் சேர்ந்த பெண் ஒருவரை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் காணவில்லை என பொலிஸ் நிலை யத்தில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இல 126 திருநகர் வடக்கைச் சேர்ந்த கணேசமூர்த்தி சாந்திமலர் வயது 48 என்பவரே கடந்த செவ்வாய்க்கிழமை முதல் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பெண்ணின் வீட்டுக்கு காலையில் முச்சக்கர வண்டி ஒன்றில் வந்தவர்களால் வழக்கு விசாரணை ஒன்றுக்கு வரு மாறு அழைத்துச் செல்லப்பட்ட நிலையிலேயே காணமற் போயுள் ளார். இந்த நிலையில் கிளிநொச்சி பொலிஸ்நிலையத்தில் உறவினர் களால் CIB 128/100 வழக்கு இலக்கத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின் றனர். (29)

தெரியாததை தெரியாது என்று ஒப்புக்கொள்வதுதான் அறிவு.
-கன்.ஃ.ப்யூஷியஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## வீரவசனங்கள் போதுமா மக்களுக்கு?

"இலங்கையில் தற்போது இடம்பெறுகின்ற ஆட்சியானது எங்களின் ஆட்சி அல்ல. எங்களினால் ஆதரிக்கப்பட்ட ஆட்சியே. இதை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இன்றைய ஆட்சித் தலைவர்கள் தங்களது ஆட்சியில் மந்திரிப் பதவிகளை நாங்கள் ஏற்கவேண்டுமென கேட்டார்கள். நாம் பெற்று இருக்கலாம். அதனால் நன்மைகள் கிடைத்திருக்கலாம். ஆனால் நாங்கள் அந்த நிலைக்கு போகவிரும்பவில்லை. பதவிக்காகவும் மந்திரிப் பதவிகளுக்காகவும் நாம் உங்களை வாக்களிக்கச் சொல்லவில்லை. எமக்கு பதவிகள் முக்கியம் அல்ல. எமது இலக்கு வேறு. நீங்கள் எங்களுக்கு எதற்காக வாக்களித்தீர்களோ, அந்த நோக்கங்கள் கிடைக்கும்வரை நாம் பதவிகளை விரும்பமாட்டோம்."

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருக்கிறார்.

"பதவிகளை நாம் தூக்கியெறிந்தோம்" என்ற இந்த வீரவசனத்தால் தமிழ் மக்களுக்கு கிடைத்த லாபம் என்ன என்று ஆராய்வதற்கு முன்னால், "நீங்கள் எங்களுக்கு வாக்களித்த அந்த நோக்கங்கள்" என்று மாவையார் குறிப்பிடுவதைப் பார்த்துவிடலாம்.

கடைசியாக தமிழ் மக்களிடம் ஆணை கேட்டு தமிழரசுக் கட்சியால் வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனம், 2013 செப்ரெம்பரில் நடந்த வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்காக வைக்கப்பட்டதாகும்.

எரியும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே அதில் பிரதான விடயமாகும். "சமஷ்டி கட்டமைப்பொன்றை அடிப்படையாகக் கொண்டு இணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்கள் எனும் ஓர் அலகில் அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகள் நிறுவப்பட வேண்டும்." என அந்த விஞ்ஞாபனம் குறிப்பிடுகிறது.

தமிழ் மக்கள் ஆணை வழங்கிய இந்த பிரதான நோக்கம் நிறைவேறும் வரை அரசின் பதவிகளை விரும்ப மாட்டோம் என்பதையே சேனாதி அவர்களின் வீரஉரை தெரிவிக்கிறது.

உச்சநீதிமன்றம் மூலம் பிரிக்கப்பட்டிருக்கும் வடக்கு கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைப்பதற்கு இந்த இரண்டு வருடங்களில் தமிழரசுக்கட்சி கண்டுகொண்டிருக்கும் சாத்தியபூர்வமான வழிமுறையை இப்போது முன்வைக்க வேண்டும்.

அதேபோல, அந்த ஒன்றிணைந்த அலகில் வைக்கப்பட வேண்டிய அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகள் என்ன மாதிரியானவை என்பதையும் தமிழ்ரசுக்கட்சி தெளிவுபடுத்த வேண்டும். அது தெரியாமல் எப்ப்டி தமிழ் மக்களின் நோக்கம் நிறைவேறுமா நிறைவேறாதா என்பதைக் கணிப்பது?

தீர்வு விஷயத்தில், இணைந்த வடக்கு கிழக்கை இனிப் பெறுவது எப்படி என்பதையும், அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகள் எப்படி அமையவேண்டும் என்பதையும் இப்போதுங்கூட வரையறுத்துச் சொல்லாமலே, "தமிழ் மக்களின் நோக்கங்கள் நிறைவேறும் வரை" என்ற பொத்தாம்பொது வீரவசனத்திற்கு என்ன அர்த்தத்தைக் காண்பது?

அல்லாமல், இவர்கள் எப்போது அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொள்கிறார்களோ அப்போது தமிழ் மக்களின் அந்த நோக்கங்கள் நிறைவேறி விட்டதாக அர்த்தமாகும் என்பதால், அந்த நோக்கங்களைத் தெரிந்துகொள்வதற்கு அதுவரைக்கும் நாம் காத்திருக்க வேண்டுமா?

தமிழ் மக்கள் இன்றிருக்கும் நிலையில், மந்திரிப் பதவிகளைப் பெற்றுக்கொண்டு அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியுமென்றால், அப்படி முயற்சிப்பதில் விவேகம் உள்ளதா அல்லது சாத்தியங்களைத் தெளிவுபடுத்தாத இலக்குக்காக எம்பி பதவிகளுடன் காலவரையின்றிப் போய்க்கொண்டிருப்பதுதான் விவேகமா?

நீங்கள் ஆதரிக்கின்ற ஆட்சியைப் பயன்படுத்தியும் தீர்வைக் கொண்டுவர முடியாமல் இருப்பதற்கு, பதிலாக இத்தகைய வீரவசனங்களோடு மக்கள் திருப்தியடைய வேண்டியதுதானா?

- ஆசிரியர்

# கப்பல் கூட்டுத்தாபனத்திடம் கப்பல்கள் எதுவும் இல்லை

## அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கவலை

(கொழும்பு)

இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் முன்னைய காலத்தில் 20 இற்கும் மேற்பட்ட கப்பல்களை தம்மகத்தே வைத்திருந்தது. ஆனால் தற்போது கப்பல் கூட்டுத தாபனத்திடம் கப்பல்கள் எதுவும் இல்லை எனவும் அனைத்து கப்பல்களையும் கடந்த அரசாங்கம் விற்று விட்டது எனவும் துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

கப்பல் கூட்டுத்தாபனத்தின் 44 ஆவது பிறந்த தினத்தினை முன்னிட்டு நேற்றுமுன்தினம் கொழும்பு துறைமுகத்தில் உள்ள island wisdom கப்பலில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட கப்பல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சஷீ தனதுங்க கூட்டுத்தாபனத்தின் வருட திட்டங்கள் "2016 - 2020'' ஆண்டுகளுக்கான வருடத்திட்டங்கள் அடங்கிய புத்தகத்தினையும் அமைச்சரிடம் கையளித்தார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

தற்காலத்தில் போதுமான கபபல்கள் இல்லாத காரணத்தினால் நிலக்கரிகளை மட்டும் பரிமாற்றம் செய்து வியாபாரம் செய்து வந்தோம். இதன் மூலம் 70 சதவீதமான இலாபத்தினை அடைந்துள்ளோம். அத்துடன் இக் கூட்டுத்தாபனம் புதிதாக இரண்டு கப்பல்களை வாங்கத் திட்டமிட்டுள்ளது. அவற்றுள் ஒன்று எதிர்வரும் நவம்பர் மாதம் அளவிலும் மற்றையது எதிர்வரும் ஆண்டிலும் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்விரு கப்பல்களும் நிலக்கரிகளை பரிமாற்றம் செய்வதற்காக பயன்படுத்தப்படவுள்ளது.

மேலும் நிலக்கரிகளை கப்பலில் இருந்து கொண்டு வந்து பெரிய கொள்கலன் ஊடாக நாடளாவிய ரீதியில் பரிமாற்றத்தில் ஈடுபடுவதனால் கொழும்பில் பல பிரதேசங்களில் போக்குவரத்து நெரிசல்கள் மிகையாக ஏற்படுகின்றன. எனவே இதனையும் முடிந்தவரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஒருநாளில் 1000 கொள்கலன் பெட்டிகள் துறைமுகத்திலிருந்து வெளியே வருகின்றன. இதன் போது அவ்வாறே 1000 கொள்கலன் பெட்டிகள் துறைமுகத்திற்குள் செல்ல வேண்டும். இதன் மூலம் 2000 கொள்கலன் வாகனங்கள் வீதியில் நடமாடுவதால் போக்குவரத்து நெரிசல்கள் அதிகமாகின்றன. எனவேதான் இந்தப்போக்குவரத்து நெரிசல்களை தவிர்க்க நாம் வாகனங்கள் மூலம் பரிமாற்றம் செய்வதனை தடுத்து நாட்டில் பிரதேசங்களுக்கிடையில் கப்பல் வசதிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம் என்றார்.

# அர்த்தமற்ற செயல்களால் அரசாங்கத்தை முன்னெடுக்க முடியாது

(கொழும்பு)

நாடாளுமன்றத்தை கலைக்குமாறு விடுக்கப்படும் கோரிக்கை, நம்பிக்கையில்லாப் பிரேரணை மட்டுமல்லாது புதிதாக அமைச்சர்களை நியமிப்பது உட்பட அர்த்தமற்ற செயல்களுக்கு மத்தியில் அரசாங்கம் ஒன்றை முன்னெடுத்துச் செல்ல முடியாது என அஸ்கிரிய மாநாயக்கர் கலகம சிறி அத்ததஸ்சி தேரர் தெரிவித்துள்ளார்.

அஸ்கிரிய விகாரையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக்கூறியுள்ளார். 100 நாட்களின் மேற் கொள்வதாக வாக்குறுதி அளித்தாலும் இலங்கையில் உள்ள குறைபாடுகள் அனைத்தையும் 100 நாட்களில் செய்து விட முடியாது.

எனினும் செய்ய வேண்டிய வேலைகளையும் பிரதான பணிகள் சிலவற்றையும் செய்து முடித்துள்ளதால், மகிழ்ச்சியடையவும் முடிந்துள்ளது. ஒரு வேலை முடிந்ததும் நாடாளுமன்றத்தைக் கலைகுமாறு ஒரு அணி கூறுவதுடன் மற்றுமொரு அணி கலைக்க வேண்டாம் என்கிறது.

மீண்டும் இரண்டு மூன்று அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டன. அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டனர். இதற்கு மத்தியில் நம்பிக்கையில்லாப் பிரேரணையையும் கொண்டு வருகின்றனர். இது அரசாங்கமா?. இப்படி அரசாங்கம் ஒன்றை முன்னெடுக்க முடியாது. சிலர் அதிகார பேராசையால் நாங்கள் வழங்கும் ஆலோசனைகளை மீறிச் செயற்படுகின்றனர்.

# கொக்காவிலில் நவீன ஆயுதங்கள் செய்தியில் உண்மையில்லை

## இராணுவப் பேச்சாளர் மறுப்பு

(கொழும்பு)

கொக்காவில் இராணுவ முகாமுக்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட ஆயுதத்தொகை நவீனரகமானவை எனவும் புதிய திட்டமொன்றை ஆரம்பிக்கும் நோக்கில் அவை அங்கே புதைத்து வைககப்பட்டன என்றும் ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்தியில் எவ்விதமான உண்மையும் இல்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர ஜயனாத் ஜயவீர தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

செய்திகளை வெளியிடும் போது ஊடகங்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். தவறான தகவல்களை வெளியிடுவதனால் தேவையில்லா பிரச்சினைகள ஏற்படும். எமது முதலாவது நோக்கம் தேசிய பாதுகாப்பு அதன் பின்னர் தான் ஏனையவை. கொக்காவில் இராணுவ முகாமுக்கு அருகில் கிடைத்த ஆயுதங்கள் மிகவும் பழையவை. அதுவும் ஒரே இடத்தில் ஒரு தொகை மீட்கப்படவில்லை. ஆங்காங்கே சிறு ரவைகள் ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

வடக்கில் 5 பேருக்கு ஒரு இராணுவவீரர் உள்ளார் என்று கூறப்படுகிறது. ஆனால் அங்கு எத்தனை பேர் உள்ளனர் என்ற உண்மையான தகவலை கூறுவது சாத்தியமில்லை. இராணுவ இரகசியங்களை பேணவேண்டியது எமது கடமை. தெரிவிக்க வேண்டிய விடயங்களும் உள்ளன. மறைக்க வேண்டியவைகளும் உள்ளன. எத்தனை பேர் அங்கு பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர் என்ற தகவலை கூறமுடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# 10 இலட்சம் கப்பம் செலுத்தி கடத்தப்பட்ட சிறுமி மீட்பு

## விசாரணை நடத்த பொலிஸ் குழு நியமனம்

வவுனியாவில் கடத்தப்பட்ட 5 வயதுச் சிறுமியொருவரை 10 இலட்சம் ரூபாய் கப்பம் செலுத்தி, அவரது பெற்றோர் தங்களது பிள்ளையை காப்பாற்றியுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். வவுனியாவில் பிரபல வர்த்தகர் ஒருவரின் மகளான மேற்படி சிறுமி, பாலர் பாடசாலைக்குச்சென்று திரும்பிய போது இனந்தெரியாதோர் சிலரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இச்சிறுமியை விடுவிக்க வேண்டுமாயின் 30 இலட்சம் ரூபாவினை கப்பமாக வழங்குமாறு குறித்த சிறுமியின் தந்தையை மேற்படி குழுவினர் அச்சுறுத்தியுள்ளனர். இருப்பினும், தன்னிடம் அந்தளவு தொகைப் பணம் இல்லை என்று சிறுமியின் தந்தை கூறியதை அடுத்து, 10 இலட்சம் ரூபாவினை வழங்குமாறும் அப்பணத்தை, வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் குப்பைகள் கொட்டப்படும் இடத்தில் வைக்குமாறும் மேற்படி குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய, கொள்ளையர்கள் குறிப்பிட்ட இடத்தில் பணத்தை வைத்ததை அடுத்து, தங்களது மகள் விடுவிக்கப்பட்டதாக மேற்படி வர்த்தகர், வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார் என பொலிஸார் கூறினர்.

கப்பப் பணத்தை செலுத்துவதற்கு முன்னர், இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்திருந்தால், சந்தேகநபர்களை கைது செய்ய முடிந்திருக்கும் என்று தெரிவித்த பொலிஸார், எவ்வாறாயினும், இவ்விடயம் தொடர்பில் விசாரணை நடத்த பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.



# இலங்கை போரை எப்படி வெற்றி கண்டது - 1

**பீற்றர் லேயிற்றன்**

> **தொடர்ச்சியான தோல்விக்குப் பதிலாக அதன் வியூகத்தை மாற்ற முடிந்தால் வெற்றி பெறலாம் என்பதை அரசாங்கம் நிரூபித்தது. அதே நேரம் எல்.ரீ.ரீ.ஈ அதன் முந்தைய வெற்றிகரமான சூத்திரத்தில் விடாப்பிடியாக ஒட்டிக் கொண்டிருந்ததால் தோல்வி அடைந்தது.**

உலகமயமாக்கப்பட்ட இந்தப் பூமியில் வெகு திறமையாக கடல் வளங்களையும் பயன்படுத்தி கிளர்ச்சியாளர்கள் நடத்தும் ஒரு உள்நாட்டுப் போரை வெற்றி கொள்வது எப்படி? இப்போது போராக மாறியுள்ள அப்படியான மோதல்களைப் பொறுத்தவரை அநேகமான அரசாங்கங்கள் விடை காண முயற்சிக்கும் கேள்வி இது.

வெகு சிலவே இதில் வெற்றியடைந்துள்ளன, இதில் மிகப் பெரிய விதிவிலக்கு இலங்கை, அங்கு 25 வருட உள்நாட்டு யுத்தத்தில் அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளை (எல்.ரீ.ரீ.ஈ) தீர்க்கமாகத் தோற்கடித்து நீடித்ததாகத் தோன்றும் சமாதானத்தை உருவாக்கியுள்ளது. இந்த வெற்றியானது கடந்த தசாப்தங்களில் நல்ல நிதிவளமுள்ள மேற்கத்தைய படைகள் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் நடைபெறும் மோதல்களில் நடத்திய போராட்டங்களை விட முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது.

உலகத்திலேயே மிகவும் புதுமையானதும் ஆபத்தானதுமான கிளர்ச்சிப் படை எனக் கருதப்படும் ஒன்றுக்கு எதிராக இலங்கையால் எப்படி வெற்றி பெற முடிந்தது? இதில் மூன்று முக்கிய பகுதிகள் தனித்து நிற்கின்றன.

முதலாவது போராடும் எதிரிக்கு பொருத்தமான வகையில் மூலோபாய இலக்குகள் இருப்பது அவசியம். முதல் 22 வருடங்களும் உள்நாட்டுப் போரில் அரசாங்கத்தின் மூலோபாயம் இராணுவ நடவடிக்கை மூலம் எல்.ரீ.ரீ.ஈ யினை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து வருவதாகவே இருந்தது. உண்மையில் இதுதான் சிறந்ததும் மற்றும் உள்ள ஒரே தெரிவும் என்று வெளிநாட்டு நிபுணர்களால் வழங்கப்பட்ட ஆலோசனை ஆகும். 2006இல், மோதலின் இறுதிக்கட்டம் ஆரம்பிப்பதற்கு சற்று முன்னர், ஓய்வுபெற்ற இந்திய லெப்ரினட் ஜெனரல் ஏ.எஸ்.கல்கட் தெரிவித்தது "மோதலுக்கு ஆயுத தீர்வு வழியல்ல. இலங்கை இராணுவம் தமிழ் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான போரில் வெற்றி பெற முடியாது" என்று.

உண்மையில் எல்.ரீ.ரீ.ஈ பேச்சு வார்த்தைகளில் ஐந்து தடவைகள் ஈடுபட்டது, ஆனால் அரச தரப்பு படைகளை தோற்கடிக்கத் தக்க வலிமையான இடத்தில் அது இருப்பது வெளிப்படையாகத் தோன்றியதும் பேச்சுக்கள் எப்போதும் முறிவடைந்தன. 2006 நடுப்பகுதியில் வெற்றி தனது பிடியில் இருப்பதாக உணர்ந்ததும், எல்.ரீ.ரீ.ஈ நோர்வேயின் இடைத் தரகு முயற்சியால் மேற்கொள்ளப்பட்டிருந்த யுத்த நிறுத்தத்தை வேண்டுமென்றே முடித்துக் கொண்டு நான்காவது ஈழப் போர் என அழைக்கப்படும் யுத்தத்தை ஆரம்பித்தது. அதற்குப் பதிலடியாக இலங்கை அரசாங்கமும் இறுதியாக தனது மூலோபாய இலக்கான எல்.ரீ.ரீ.ஈ யினை பேச்சு வார்த்தைக்கு அழைப்பது என்பதை மாற்றி அதை நிர்மூலமாக்குவது என்று முடிவு செய்தது.

வெற்றி பெறுவதற்கு ஒரு மூலோபாயம், விரோதத்தை கணக்கில் கொள்ள வேண்டும் என்பது. இந்த விடயத்தில் எல்.ரீ.ரீ.ஈ யின் கிளர்ச்சியின் தன்மைக்கு அது பொருத்தமானதாக இருக்க வேண்டும். உள்நாட்டுப் போரின் முதல் 22 வருடங்களும் ஆட்சியில் இருந்த இலங்கை அரசாங்கங்களின் உத்திகள் இந்த அளவுகோலைப் பூர்த்தி செய்யவில்லை. இறுதியாக 2005இன் பிற்பகுதியில் ஒரு புதிய அரசாங்கம் தேர்ந்தெடுக்கப் பட்டதும் அது எல்.ரீ.ரீ.ஈயினைப் பலமிழக்கச் செய்த அதேவேளை அவர்களின் பிரதான பலவீனங்களுக்கு பொருந்தும் வித்தியாசமான மூலோபாய இலக்குகளை தேர்வு செய்தது.

எல்.ரீ.ரீ.ஈயின் முக்கியமான பிரச்சினை அதன் வரையறுக்கப்பட்ட மனிதவள அடித்தளம்தான். இலங்கையின் சனத்தொகையில் 12 விகிதமானவர்களே இலங்கைத் தமிழர்கள், இவர்களில் சுமார் 300,000 வரையான மக்கள் மட்டுமே எல்.ரீ.ரீ.ஈக்கு தீவிர ஆதரவு வழங்கினார்கள் என நம்பப்படுகிறது. அதற்கு மேலும் ஒரு அமைப்பு என்கிற வகையில் எல்.ரீ.ரீ.ஈயின் சட்டபூர்வ தன்மையும் சரிவடைந்து கொண்டிருந்தது. 2006ஆம் ஆண்டளவில் எல்.ரீ.ரீ.ஈ தனது படையணியை நிரப்ப கட்டாய ஆட்சேர்ப்பிலேயே தங்கியிருந்தது - தன்னார்வ தொண்டர்களில் அல்ல - இவர்களில் அநேகமானவர்கள் சிறுவர்கள். செயற்பாட்டு மட்டத்தில் அதன் திடமான கட்டளைக் கட்டமைப்பு, மரபுவழி தரைப் போருக்கான முன்னுரிமை மற்றும் சர்வதேச ஆதரவில் உள்ள ஆழமான நம்பக்த் தன்மை உட்பட அதன் பலமாகத் தோன்றுபவைகள் சிலதும்கூட எல்.ரீ.ரீ.ஈக்கு எதிராகத் திரும்பின.

இரண்டாவது, வெற்றிக்குத் தேவையானது பாரிய வியூகம். ஒரு பாரிய மூலோபாயம் இராஜதந்திரம், பொருளாதாரம், இராணுவ நடவடிக்கைகள், தகவல்கள் மற்றும் செயற்பாடுகள் என்பனவற்றை புத்திசாலித்தனமாக ஒருங்கிணைத்து சமாதானத்தை வரையறை செய்கிறது மற்றும் தேசம் வெற்றி பெறுவதற்குத் தேவையான தகைமைகளையும் முன்னேற்றுவதையும் கருத்தில் கொள்கிறது. புதிய அரசாங்கம், தனது முன்னோடிகளால் பின்பற்றப்பட்டு தோல்வியடைந்த குறுகிய கவனமுள்ள இராணுவ உத்திகளை பின்பற்றுவதில்லை என்று முடிவு செய்தது, மாறாக குறைந்த மட்ட செயற்பாடுகளை வழி நடத்தும் விரிவான முழு நாட்டுக்கும் பொருத்தமான பாரிய மூலோபாயத்தை பின்பற்றியது.

பொருளாதார கோளத்தில் புதிய அரசு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சத விகிதத்தை பாதுகாப்புக்கு ஒதுக்கி ஆயுதப்படைகளுக்கான வரவு செலவுத் திட்டத்தை சுமார் 40 விகிதமாக அதிகரித்தது. இது நாட்டின். மட்டுப்படுத்தப்பட்ட நிதி வளங்களையும் வருடாந்த மானியங்களையும் கணிசமான அளவு கஷ்டத்துக்கு உள்ளாக்கியது எனவே இந்த சுமையை தளர்த்துவதற்கு சுமார் 1 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடனுதவி சீனாவிடம் கோரப்பட்டது. எண்ணெய் மற்றும் ஆயுதக் கொள்வனவுக்கான கடன்கள் உட்பட வேறு அமைப்புகளிலான நிதி உதவிகள் ஈரான், லிபியா, ரஷ்யா மற்றும் பாகிஸ்தான் மூலமாக கடனாக வழங்கப்பட்டன.

இராஜதந்திர ரீதியாக அரசாங்கம் எல்.ரீ.ரீ.ஈயினை தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டது, எல்.ரீ.ரீ.ஈ தனது 60 விகிதமான நிதியுதவியையும் மற்றும் பெரும்பாலான இராணுவ உபகரணங்களையும் கடல் வழியாகவே பெற்று வந்தது. அரசாங்கத்தின் முயற்சி வெற்றி பெற்றது அதாவது காலப்போக்கில் எல்.ரீ.ரீ.ஈ கிட்டத்தட்ட 32 நாடுகளில் தடை செய்யப் பட்டது. முக்கியமாக புதிய அரசாங்கத்தின் பாரிய மூலோபாயத்துடன் அர்த்தமுள்ள வகையில் இடையீடு செய்யக்கூடிய நாடான இந்தியாவுடன் நெருக்கமாக வேலை செய்யும் உறவு உருவாக்கப்பட்டது. அமெரிக்காவின் 9/2011 பின்னான பயங்கரவாத எதிர்ப்பு காலகட்டமும் கூட உலகின் முதல் தற்கொலைக் குண்டு தாரிப் படையினை அழிக்கும் அரசாங்கத்தின் நோக்கம் வரவேற்கத் தக்கதாகியது.

எல்.ரீ.ரீ.ஈயின் கடல்வழி இராணுவ தளபாட கொள்வனவை தடை செய்யும் வகையில் உளவுத் தகவல்களை பகிர்ந்தும், கடலோர காவற் கப்பல்களை வழங்கியும் மற்றும் முக்கியமான ஒரு தேசிய கடற்படை கட்டளை அமைப்பை வழங்கியும் அமெரிக்கா உதவி செய்தது. கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றவையும் முன்வந்து தங்கள் நாடுகளில் எல்.ரீ.ரீ.ஈ யின் நிதி சேகரிக்கும் வலையமைப்பை சட்டவிரோதமாக்கி தடை செய்ததின் மூலம் அந்தக் குழுவின் நிதி அஸ்திவாரத்தை கடுமையான தாக்கத்துக்கு உள்ளாக்கின. உள்நாட்டு ரீதியில் அரசாங்கம் பொது மக்களின் தீவிரமான ஆதரவைப் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டது. 2006ஆம் ஆண்டளவில் அநேக இலங்கையர்கள் யுத்தத்தால் களைப்படைந்திருந்தனர் மற்றும் யாராலும் பெற முடியாத வெற்றியை புதிய அரசாங்கத்தின் திறமை சாதிக்குமா என்கிற சந்தேகமும் அவர்களிடம் இருந்தது. மக்களின் ஆதரவை பெறுவதற்கு போர் நடைபெறும் அதேவேளை அபிவிருத்தி வேலைகளையும் நிறுத்தாமல் தொடரவேண்டியது அவசியம் என அரசாங்கம் உணர்ந்தது. மேலும் வறுமை ஒழிப்புக்கான பல்வேறு தேசிய திட்டங்களும் அவசியம் எனக் கருதியது, அதற்கு ஒரு முக்கிய உதாரணம் ஏழை விவசாயிகளுக்கான உர மானியத் திட்டம். அதேசமயம் போராடுவதால் பெறுமதியான சமாதானம் கிடைக்கும் என மக்களை நம்ப வைப்பதும் அவசியமாக இருந்தது.

இந்த நடவடிக்கைகள் வேலை செய்ய ஆரம்பித்தன. 2005க்கு முன்பு வருடாந்தம் 3,000 படை வீரர்களை ஆட்சேர்ப்பு செய்வது இராணுவத்துக்கு கடினமாக இருந்தது, 2008இன் பிற்பகுதியில் இராணுவத்தால் ஒரு மாதத்துக்கு 3,000 வீரர்களை ஆட்சேர்ப்பு செய்ய முடிந்தது. இராணுவம் விரிவாக்கப்பட்டது,2005இல் 120,0௦0 ஆக இருந்து வீரர்களின் எண்ணிக்கை 2009ஆம் ஆண்டளவில் 200,000 க்கும் அதிகமாக உயர்ந்தது.


மூன்றாவதாக முடிவுகளைச் சந்திப்பதற்கு பாரிய மூலோபாயம் தேடுவது, எதிரியின் பலத்துக்கு எதிராகப் போராடும் அதேவேளை எதிரியின் பலவீனங்களை சுரண்டுவதற்கு அவசியமான கீழ் மட்ட துணை இராணுவ உத்திகளை பயன்படுத்துவது. எல்.ரீ.ரீ.ஈயிடம் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வீரர்கள் மட்டுமே உள்ளனர், களத்தில் சுமார் 20,000 - 30,000 பேர்கள் மட்டுமே. அரசாங்கப் படைகள் ஏற்கனவே 2006 நடுப்பகுதியில் ஈழப்போர் 4 ஆரம்பமாவதற்கு முன்பே பெரிய வெற்றிகளைப் பெற்றிருந்தனர்.

2004 பிற்பகுதியில் எல்.ரீ.ரீ.ஈயின் மூத்த இராணுவ தளபதியான கேணல் கருணா சுமார் 6,000 எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களுடன் அதிலிருந்து பிளவுபட்டு வெளியேறியது இலங்கையின் கிழக்குப் பகுதியில் எல்.ரீ.ரீ.ஈயின் ஆதரவுத் தளத்தை தீவிரமாகப் பாதித்திருந்தது. இந்த திரளான பிளவு எல்.ரீ.ரீ.ஈயின் ஆழ்ந்த நுண்ணறிவு பற்றிய முக்கியமான புலனாய்வுகளை வழங்கியது. முக்கியமாக முதல் தடவையாக அரசாங்க புலனாய்வு முகவர் அமைப்பில் உள்ளவர்களால் எல்.ரீ.ரீ.ஈயின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்று தகவல்களைச் சேகரித்து அறிவிக்க கூடியதாகவும் இருந்தது. இந்த பிளவின் அளவுகோல் எல்.ரீ.ரீ.ஈயின் நெறிமுறை தேய்வடைவதை தெளிவாகக் காட்டியது.

(மீதி நாளை)

# எந்தமுறையிலான தேர்தலுக்கும் தயார்

## என்கிறார் அனுரபிரியதர்சன யாப்பா



(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலை 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றி புதிய முறையில் நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இருப்பதாகவும் ஆனால் பழைய முறையில் தேர்தல் நடந்தால் அதற்கும் தாம் தயாராகவே இருப்பதாகவும் அந்த கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் வரை தற்போதைய நாடாளுமன்றத்துக்கு காலம் இருக்கின்றது. அதற்குள் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்ற முடியும். இதன்படி புதிய முறையிலேயே தேர்தல் நடக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே நாம் இருக்கின்றோம். எவ்வாறாயினும் பழைய முறைமையில் தேர்தல் நடந்தால் அதற்கு தயாராகவும் நாம். இருக்கின்றோம். என அவர் அங்கு தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றத்தை கலைக்க ஆளும், எதிர்க்கட்சிகள் அச்சம்

## சபாநாயகர் தெரிவிப்பு



(கொழும்பு)

நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தலுக்கு செல்ல அரசாங்கமும் எதிர்க்கட்சியும் அஞ்சுவதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

20ஆவது திருத்தம், பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் நாடாளுமன்றத்தைக கலைக்கும் விடயங்கள் தொடர்பாக நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையே நடைபெற்ற காரசாரமான கருத்து மோதல்களின் போதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தை கலைக்க வேண்டும் இல்லையேல் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது அதற்கு பதிலளித்த பிரதமர் 19ஆவது திருத்தத்தை நிறைவேற்றிய பின்னர் 20ஆவது திருத்தத்தை நிறைவேறும் வரை நாடாளுமன்றத்தை கலைக்க வேண்டாமென தெரிவித்து வந்த எதிர்க்கட்சி இப்போது நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு கூறுகின்றது. எமக்கு பிரச்சினையில்லை. நாடாளுமன்றத்தை கலைக்க நாமும் விரும்புகின்றோம் ஆனால் எதிர்க்கட்சி தான் விரும்பவில்லை. என தெரிவித்துள்ளார்.

இவ்வேளையில் இரண்டு தரப்புக்குமே நாடாளுமன்றத்தை கலைக்க பயம் போல்தான் எனக்கு தெரிகின்றது என சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

# மக்களின் பிரச்சினைகளை காலம் தாழ்த்தாது தீர்க்கவேண்டும்

## ஜனாதிபதி பணிப்புரை



(கொழும்பு)

மக்களுக்கான சேவையில் எவரும் பிரிந்து நின்று செயற்பட முடியாது. மக்கள் பிரச்சினைகளை காலம் தாழ்த்தாது தீர்த்து வைக்க வேண்டியது அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளின் பொறுப்பு என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலநறுவை மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அபிவிருத்திக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று குறைகளை ஆராய்ந்து உரிய அறிவுறுத்தல்களை வழங்கி மக்களின் பிரச்சினைகளுக்கு துரித தீர்வுகளை வழங்கவுள்ளோம்.இக்கலந்துரையாடலில் எடுக்கப்படுகின்ற முடிவுகள் அவ்வாறே நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். மாவட்டத்தின் சிறு மற்றும் நடுத்தர அளவிலான நீர்ப்பாசன புனரமைப்புப் பணிகளுடன் அணைகளைப் பாதுகாக்கும் கருத்திட்டம் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும். ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய பாடசாலைகளையும் அடையாளம் காணப்பட்ட சில பாடசாலைகளில் கட்டட அபிவிருத்திகளும் விரைவில் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

சுகாதார பிரச்சினைகள் சிறுநீரக நோய், சிறுநீரக நோயை தடுப்பது தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டுவதற்கு பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும்.

மக்களுக்கு மிகச் சிறந்த சுகாதார சேவை வழங்குவது அரசின் பொறுப்பாகும்.காணி உறுதிகளின் சிக்கல்களை தீர்க்கின்ற போது மாவட்ட செயலகங்களில் மக்கள் பல நாட்களை கழிக்க வேண்டியுள்ளது. அவ்வாறு நடப்பதற்கு இடமளிக்க முடியாது. அதன் போது மக்களுக்கு துரித சேவை ஒன்றை வழங்குவதற்கான செயல்முறை ஒன்றை தயாரிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# மகிந்த – ரணில் மோதல்; தேர்தல்களத்தில் நிச்சயம்

## முன்னாள் அமைச்சர் பவித்திரா



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இம்முறை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் மோத வேண்டியிருப்பதாக முன்னாள் அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கடந்த முறை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவிற்கு அஞ்சியே ரணில் போட்டியிடவில்லை.

இம்முறை ரணில் மகிந்தவுடன் போட்டிபோட வேண்டியுள்ளது.

ஜனாதிபதித்தேர்தலில் தோல்வியடைவோம் என புரிந்துகொண்ட ரணில் பின்வாங்கினாலும் இம்முறை மகிந்தவை எதிர்நோக்கியே ஆக வேண்டும். அல்லது இம்முறையும் வேறு வேட்பாளர் ஒருவரைத் தேட வேண்டியேற்படும்.

நல்லாட்சி என்ற போர்வையில் ரணில் விக்கிரமசிங்க தரப்பினர் பாரியளவு அடக்குமுறைகளை மேற்கொள்கின்றனர்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் வென்றெடுக்கப்படும். ஆதரவளிககும் அனைவரிடமும் இன்னமும் கையொப்பங்கள் திரட்டப்படவில்லை.

திட்டமிட்ட வகையில் சில காலம் அரசாங்கத்திற்குள் இருந்து செயற்பட்டோம்.

தற்போது வெளியேறி போராடுகின்றோம், எனத் தெரிவித்துள்ளார்.

# நிதிமோசடி இடம்பெறவில்லை முடிந்தால் நிரூபித்துக் காட்டுங்கள்

## முன்னாள் மத்தியவங்கி ஆளுநர் சவால்



எனது பதவிக் காலத்தில் இலங்கை மத்திய வங்கியில் நிதி மோசடிகள் இடம்பெற்றிருந்தால் அவற்றை நிரூபித்துக் காட்டுங்கள் என முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் சவால் விடுத் துள்ளார்.

இலங்கை மத்திய வங்கி ஆளுநராகத் தாம் பதவி வகித்த காலதயில் எந்த நிதி மோசடியுமே இடம்பெறவில்லை என்பதைத் என்னால் உறுதிபடக் கூற முடியும்.

திறைசேரி நிதி முறி விநியோக மோசடியை மூடி மறைக்கவே எனக்கு எதிராகப் பொய்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

நான் ஒன்பது வருடங்களுக்கு முன்னர் அதாவது 2005 இல் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டேன்.

அப்போது இந்நாட்டின் தனிநபர் வருமானம் 1350 அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது. அது ஒன்பது வருடங்கள் கழிந்த பின்னர் 3650 அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்துள்ளது.

அதேபோன்று 2005இல் 24 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக்காணப்பட்ட இந்நாட்டு பொருளாதாரம் ஒன்பது வருடங்கள் கழிந்த பின்னர் 75 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்தது.

இந்தப் பொருளாதார வளர்ச்சியை கடந்த காலத்தில் இருந்த எதிர்க்கட்சி விரும்பவில்லை. அதனால் எனக்கு எதிராகவும் மத்திய வங்கிக்கும், நிதியமைச்சுக்கும் எதிராகவும் பல்வேறு பொய்க் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. சேறு பூசும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

ஐக்கிய அமெரிக்கா பயங்கரவாதிகளுக்குப் பணம் செல்வதை தடுக்கும் சட்டத்தையும் பண மோசடி தொடர்பான சட்டத்தையும் 2002 - 2003 இன் பின்னர் கொண்டு வந்தது.


இச்சட்டங்களை உலகின் எல்லா நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. அதன் காரணத்தினால் அனைத்து வங்கிகளுமே மிகுந்த முன்னெச்சரிக்கைகளுடனேயே நிதி நடவடிக்கைகளைக் கையாள்கின்றன.

ஆகவே ரில்லியன் பில்லியன் டொலர்கள் அல்ல முடிந்தால் ஒரு இலட்சம் டொலர்களை யாவது பிரச்சினைகள் இல்லாது அனுப்பியோ அல்லது கொண்டு வந்தோ காட்டுமாறு நான் சவால் விடுக்கின்றேன்.

நாடாளுமன்ற பொதுக் கணக்குகள் குழு, இலங்கை மத்திய வங்கியின் கணக்காய்வு குழு, சர்வதேச நாணய நிதியம் என்பன மேற்கொண்ட ஆய்வுகளிலும் கூட மோசடிகள் இடம்பெற்றதாக கண்டறியப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் உடன்பாடு இல்லை

## சுசில் தகவல்



அமைச்சரவையில் கடந்த திங்கட்கிழமை நிறைவேற்றப்பட்ட தேர்தல் திருத்த யோசனையான 20ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் காணப்படும் எம்.பிக்களின் எண்ணிக்கை விடயத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்புக்கு இணக்கப்பாடு கிடையாது என அதன் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையில் நிறைவேறறப்பட்டுள்ள 20ஆவது திருத்தத்தில் உறுப்பினர் எண்ணிக்கை விடயத்தில் சிக்கல் உள்ளது. இது சிறுபான்மை இன மற்றும் சிறிய கட்சிகளுக்கு பாதிப்பானது. இது எந்தத் தரப்புக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத வகையிலேயே அமைய வேண்டும் என்ற நிலைபபாட்டிலேயே நாம்இருக்கின்றோம்.

இதன்படி 20ஆவது திருத்தத்தில் அடிப்படை விடயங்களை ஏற்றுக்கொண்டாலும் உறுப்பினர் எண்ணிக்கை விடயத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. உறுப்பினர் எண்ணிக்கை விடயத்தை எல்லை நிர்ணய ஆணைக் குழுவே தீர்மானிக்க வேண்டும். எவ்வாறாயினும் நாம் கூடி ஆராய்ந்து இன்று எமது யோசனைகளை முன்வைககவுள்ளோம். என தெரிவித்துள்ளார்.

# பிணையில் வெளியில் எடுப்பதாகக் கூறி பணம் பெற்று ஏமாற்றினார் சட்டத்தரணி

## குற்றம் சாட்டுகின்றனர் பாதிக்கப்பட்டபெற்றோர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் கைது செய்யப்பட்டவர்களை பிணையில் வெளியில் எடுத்து தருவதாக கூறி பணத்தினைப் பெற்றுச் சென்ற முஸ்லிம் இனத்தினைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் ஏமாற்றி விட்டதாக பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளார்கள்.

யாழ்.நீதிவான் நீதிமன்றில் கடந்த செவ்வாய்ச்கிழமை யாழ். நகரப்பகுதியில் கலவரத்தில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஒரு பிரிவினருக்கான வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அந்த விசாரணையின் போது, பாடசாலை மாணவர்கள் 15 போ பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஏனையோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமது பிள்ளைகளுக்கு பிணை வழங்கவில்லை என கூறி பெற்றோர்கள் கடும் ஆவேசத்துடன், சட்டத்தரணியை திட்டி அழுதார்கள். அதன்போது, தாம் ஏமாந்து விட்டதாகவும் அங்கு கூறியதுடன், தமக்கு நிகழ்ந்த கதி பற்றியும் ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்தனர்.

அதன்போது, பிரபா என்ற தரகர் ஊடாக நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் சட்டத்தரணி 11 பெற்றோரிடம் சுமார் 5 ஆயிரம் ரூபா பணத்தினை பெற்றுள்ளார். பிள்ளைகளை பிணையில் வெளியில் எடுப்பதாகவும் பணத்தினை உடனடியாக தமக்கு செலுத்துமாறும் கூறி 11 நபர்களிடம் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் பெற்றுக் கொண்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வழக்கில் சத்தியக் கடதாசி அணைத்து பிள்ளைகளை வெளியில் எடுப்பதற்கான நடவடிக்கையினை சட்டத்தரணி மேற்கொண்டிருப்பார் என்றும் தமது பிள்ளைகள் வெளியில் வரப்போகிறார்கள் என்ற ஆர்வத்துடன், நீதிமன்றில் பெற்றோர்கள் கூடினார்கள். ஆனால், பிள்ளைகள் பிணையில் விடுவிக்கப்படவில்லை.

ஏன் தமது பிள்ளைகள் விடுவிக்கப்படவில்லை என்ற கேள்வியை தமக்குள்ளே எழுப்பிய பெற்றோர் தாம் பணத்தினைக் கொடுத்த சட்டத்தரணி மன்றிற்கு வரவில்லை என்பதை புரிந்து கொண்டு, தரகர் வேலை பார்த்த நபருடன் தகராற்றில் ஈடுபட்டனர்.

தரகர் சமாளித்துக்கொண்டு தப்பி ஓட, பெற்றோர்கள் நிர்க்கதியான நிலையில், தமது பிள்ளைகளை பிணையில் எடுக்க முடியாமல் தவித்துப் போய் நின்றுள்ளனர்.

பின்னர் தமது பிள்ளைகளை பிணையில் எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, யாழ்.நீதிமன்றில் இருந்த சட்டத்தரணியிடம் கதறி அழுது தமது ஆவணங்களை சமர்ப்பித்துள்ளனர்.

இவ்வாறு குறித்த சட்டத்தரணி செய்தமையையிட்டு பெற்றோர்கள் பெரும் கவலை வெளியிட்டுள்ளனர். இவ்வாறு ஒரு சட்டத்தரணி ஏமாற்றுவார் என்று நினைக்கவில்லை என்றும் தாம் ஏமாந்து போய் விட்டதாகவும் தெரிவித்தனர்.

குறித்த 11 பேரில் பிள்ளைகளுக்குமான பிணை மனு விசாரணை எதிர்வரும் 18 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்து சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அந்த நிலையில் ஏமாற்றத்துடன், நீதிமன்றினை விட்டு பெற்றோர்கள் வெளியேறியமை பெரும் அவல நிலை. இவ்வாறான நிலைமைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வருகின்றமையும் குறிப்பிடத் தக்கது. சட்டத்தரணிகள் மட்டு மன்றி ஏனைய நபர்களும் யாழ்ப்பாணத்து மக்களை ஏமாற்றுவதிலேயே குறியாக இருக்கின்றார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (25)

# கிளி.இந்துக்கல்லூரியில் சுற்றாடல் விழிப்புணர்வு



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சுற்றாடல் விழிப்புணர்வு வாரம் கடந்த 5 ஆம் திகதி தொடக்கம் இன்று வரை கொண்டாடப்படுகின்றது.

இத்தினத்தினை வலுப்படுத்தும் முகமாக நேற்றுமுன்தினம் கிளிநொச்சி இந்துக்கல்லூரிக்கு விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், கல்வி அமைச்சர் குருகுலராஜா, கல்லூரிக்கு வருகை தந்து உலக சுற்றாடல் தினம் தொடர்பான கருத்துரைகளை வழங்கியதுடன் கல்லூரியில் இரு அமைச்சர்களும் பயன்தரு மரக்கன்றுகளையும் நாட்டினர். தொடர்ந்து மாணவர்களது நிகழ்வுகளும் இடம் பெற்றன. சுற்றாடல் வளத்தினை பாதுகாக்கும் பொறுப்பு தற்கால சந்ததியினருக்கு அவசியம் இருக்க வேண்டும் எனும் விடயம் அனைத்து மாணவர் மத்தியிலும் ஏற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்நிகழ்வில் அயற் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டிருந்தனர். (160)

# திருமறைக் கலாமன்றத்தின் ஆனித்திங்கள் பொற்தூறல்

(யாழ்ப்பாணம்)

பொன் விழா ஆண்டை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடாத்தி வருகின்ற "பொற்தூறல்" நிகழ்ச்சித்தொடரின் இம்மாதத்துக்கான நிகழ்வு "ஆனித்திங்கள் பொற்தூறல்" என்னும் பெயரில் நாளை மறுதினம் மாலை 5.30 மணிக்கு, இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக தேசிய கலை இலக்கியப் பேரவையைச் சேர்ந்த சட்டத்தரணி சோ.தேவராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்

நிகழ்ச்சிகளாக யாழ்ப்பாணம ஏழிசை மிருதங்க நர்த்தனாலயம் வழங்கும் நாட்டிய நாடகமும், கலாபூஷணம் தாவடியூர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் குழுவினர் வழங்கும் பண்ணிசைக்கச்சேரியும் நடைபெறும்.

இந்நிகழ்வில் கலையார்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

## கூட்டுறவுச் சங்க சமாசத்துக்கான

# எரிபொருள் விற்பனை நிலையம் நாகர் கோவிலில் திறப்பு




வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்திற்கான எரிபொருள் விற்பனை நிலையம் நாகர் கோவிலில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச உப தலைவர் முடியப்பு ஜோசப் ஜோன்சன் தலைமையில் இடம் பெற்றது. எரிபொருள் விற்பனை நிலையத் திறப்பு விழாவில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் மங்கள விளக்கினை ஏற்றி வைத்தார். விற்பனை நிலையத் திற்கான கடையை வாடகைக்கு வழங்கிய திருமதி அருமைலிங்கம் தவமலர் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கிராம சேவகர் சுபகுமார், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச பொது முகாமையாளர் பாலசிங்கம், நாகர் கோவில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஐங்கரன் மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி கரையோர இணைப்பாளர் பிரான்சிஸ் இரட்ணகுமார் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இவ் எரிபொருள் விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளதால் இப்பகுதி கடற்றொழிலாளர்கள் எரிபொருள் பெறுவதில் இருந்து வந்த சிரமம நீங்கியுள்ளது என கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

# திருத்தப்படும் பாலத்தில் மீண்டும் வெடிப்பு



UN HAPINET நிறுவன நிதியுதவியுடன் முள்ளியவளை வடக்கு மாதர் கிராம அபிவிருத்திசங்கத்தினரால் ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியில் திருத்தப்பட்டுவரும் முள்ளியவளை நாவற்காடு பிரதான வீதியில் அமைக்கப்பட்டுள்ள பாலம் ஒன்று வீதி வேலை முடிவதற்கு முன்பாகவே வெடித்து பிளந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. (125)

## முரசின் இன்றைய பலன்

(12.06.2015 வெள்ளிக்கிழமை)

மன்மத வருஷம் வைகாசி மாதம் 29 ஆம் திகதி.
ஏகாதசி - திதி. அமிர்த்த யோகம்.
ரேவதி நட்சத்திரம் மு.ப 09.54 வரை. பின் அஸ்வினி.
இராகுகாலம் 10.22-11.52 வரை சுபநேரம் 05.52-11.22 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
நிலுவையில் ஒரு பகுதிகிடைத்தமையினால் மகிழ்வடைதல்.

**ரிஷபம்**
வெளியூர் பயணம் இடைத்தங்கல் நாட்டில் இறக்கிவிடலாம்.

**மிதுனம்**
தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில் ரகளை ஏற்படல்.

**கடகம்**
பேதம் காரணமாக விவாக முயற்சியைக் கைவிடல்.

**சிம்மம்**
புதிய நட்பு ஏற்படும் பட்சத்தில் தொடர்பை உடன் துண்டித்துவிடல்.

**மீனம்**
புதிய இணைப்புக்கள் பொருத்தும் நிலைப்பாடு ஏற்படல்.

**கன்னி**
வருமானத்தின் ஒரு பகுதியை வைத்தியத்திற்கு செலவு செய்தல்.

**கும்பம்**
நோயைக்குணப்படுத்த தெய்வதலத்தை நாடமுற்படல்.

**மகரம்**
அரசுப்பணி பரீட்சைச் சித்தியினால் கிட்டும் நம்பகம் ஏற்படல்.

**தனுசு**
மறைப்புச் செய்து கொண்டுவரப்பட்ட பொருட்கள் பிழபட்டுவிடல்.

**விருச்சிகம்**
சட்டவிரோத மின்பாவனை தண்டத்தை ஏற்படுத்தல்.

**துலாம்**
துணையின்றித் தனித்துச் செலவதைக்கைவிட்டால்துயர்விலகும்.

## ஊழல் குற்றச்சாட்டு எதிரொலி

# 2026 உலக கால்பந்தாட்டத்திற்கான உரிமம் கோரல் ஒத்திவைப்பு

(மொஸ்கோ)

2018ஆம் ஆண்டு உலக கோப்பை கால்பந்து போட்டியை நடாத்தும் வாய்ப்பை ரஷ்யாவும், 2022ஆம் ஆண்டு உலக கோப்பை கால்பந்து போட்டியை நடாத்தும் வாய்ப்பை கட்டாரும் பெற்றுள்ளன. ஆனால் உரிமம் பெற்றதில் முறைகேடு நடந்திருப்பதாக பல்வேறு நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன.


இதுபற்றி விசாரணை நடந்து வரும் நிலையில், உரிமம் பெறுவதற்காக இலஞ்சம் கொடுக்கப்பட்டிருப்பதற்கான ஆதாரம் ஏதேனும் சிக்கினால் இந்த நாடுகளிடம் இருந்து உலக கோப்பையை நடாத்தும் வாய்ப்பு பறிக்கப்படும் என்று சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிபா) கூறியுள்ளது. இதற்கிடையே, 2026ஆம் ஆண்டு உலக கோப்பையை நடாத்தும் வாய்ப்பை எந்த நாட்டுக்கு வழங்குவது என்பது 2017ஆம் ஆண்டு மே மாதம் கோலாலம்பூரில் வாக்கெடுப்பு மூலம் முடிவு செய்யப்பட உள்ளது.

இதற்கான நடைமுறைப் பணிகளைத் தொடங்குவது திடீரென தள்ளிவைக்கப் பட்டுள்ளது. ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள இந்த சூழலில், உரிமம் வழங்குவதற்கான நடைமுறையை இப்போது தொடங்குவது முட்டாள்தனமாக இருக்கும் என்று பிபா தலைமைச் செயலாளர் ஜெரோம் வால்க்கே ரஷ்யாவில் தெரிவித்தார்.

2026 ஆம் ஆண்டு உலக கோப்பையை நடத்த அமெரிக்கா, கனடா, கொலம்பியா, மெக்சிக்கோ நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன. இந்த நிலையில் பதவி விலகிய பிபா தலைவர் செப் பிளாட்டருக்கு பதிலாக புதிய தலைவரை தேர்வு செய்வதற்கான அவசர கூட்டம் டிசம்பர் 16ஆம் திகதி நடாத்தப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

## பெண்கள் உலக கிண்ணம்

## வரலாறு படைத்த மார்ட்டா



பெண்களுக்கான உலக கோப்பை கால்பந்து போட்டி கனடாவில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் பிரேசில் அணி 2-0 என்ற கோல் கணக்கில் தென்கொரியாவை வீழ்த்தியது. இதில் 2ஆவது கோலை பிரேசில் முன்னணி வீராங்கனை 29 வயதான மார்ட்டா பெனால்டி வாய்ப்பில் அடித்தார்.

உலக கோப்பையில் இது மார்ட்டாவின் 15ஆவது கோலாகும். இதன் மூலம் பெண்கள் உலக கோப்பை வரலாற்றில் அதிக கோல்கள் அடித்தவரான ஜேர்மனியின் பிர்ஜிட் பிரின்சின் சாதனையை மார்ட்டா (14 கோல்) தகர்த்தார்.

## துணைத்தலைவர் பதவி தந்தால் பிபாவை சுத்தப்படுத்த தயார்

### மரடோனா அறிவிப்பு



(பியுனஸ் ஏர்ஸ்)

துணைத் தலைவர் பதவி கிடைத்தால் பிபா அமைப்பை சுத்தப்படுத்தத் தயார், என, கால்பந்து ஜாம்பவான் மரடோனா தெரிவித்தார்.

சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு பிபா சுவிட்சர்லாந்தில் உள்ளது. இதன் தலைவர் தேர்தல் அண்மையில் நடைபெற்று இதன் முதல் சுற்றில் செப் பிளாட்டர் 133, ஜோர்டான் இளவரசர் அலி பின் அல் ஹுசைன் 73 வாக்குகள் (மொத்தம் 209) பெற்றனர். வெற்றிக்கு 140 வாக்குகள் தேவை என்பதால், இரண்டாவது சுற்று வாக்கெடுப்பு நடக்க இருந்தது.

இந்நிலையில் அலி பின் அல் ஹுசைன் விலகிக் கொள்ள செப் பிளாட்டர் 5ஆவது முறையாக தலைவர் ஆனார். இதைத் தொடர்ந்து பல்வேறு ஊழல் செய்திகள் வெளியாக, செப் பிளாட்டர் இராஜினாமாச் செய்தார்.

இந்த ஆண்டு கடைசியில் மீண்டும் தலைவர் தேர்தல் நடக்கவுள்ளது. இதில் அலி பின் அல்ஹுஹசைன் வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் ஆர்ஜென்ரீனாவின் கால்பந்து ஜாம்பவான் மரடோனா கூறியதாவது,

அமெரிக்க புலனாய்வுத் துறை (எப்.பி.ஐ.,) மற்றும் சுவிட்சர்லாந்து பொலிஸார் இணைந்து தன்னை பிபா தலைமையகத்தில் வைத்து கைது செய்து விடுவர் என பிளாட்டர் பயந்து விட்டார் என்று நினைக்கிறேன். இதனால் தான் இராஜினாமா செய்து விட்டார்.

எதிர்வரும் தேர்தலில் ஒரு வேளை அலி பின் அல்ஹுஹுசைன் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டால், நான் துணைத் தலைவர் ஆகி விடுவேன். இது மட்டும் சரியாக நடந்தால் பிபா மீதான அனைத்து களங்கத்தையும சுத்தப்படுத்தி விடுவேன் என மரடோனா கூறினார்.

விளையாட்டு செய்திகள்

## ஜொன்டி ரோட்ஸ் பயிற்சி திருப்தியடையும் வெத்தமுனி



(கொழும்பு)

தென்னாபிரிக்க அணியின் நட்சத்திர வீரர் ஜொன்டி ரோட்ஸ் இலங்கை வீரர்களுக்கு பயிற்சியளித்தது திருப்தி அளிக்கும் விதமாக இருந்ததாக இடைக்கால சபைத் தலைவர் சிதாத் வெத்தமுனி தெரிவித்துள்ளார்.

இலங்கை- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான தொடரைத் தொடர்ந்து குறுகிய கால பயிற்சியாளராக இருக்குமாறு இலங்கை சார்பில், ஜொன்டி ரோட்ஸுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனை ஏற்ற ஜொன்டி ரோட்ஸ் இலங்கை அணி வீரர்களுக்கு களத்தடுப்பு பயிற்சி வழங்கினார்.

இது பற்றி இலங்கை கிரிக்கெட் இடைக்கால சபைத் தலைவர் சிதாத் வெத்தமுனி கூறுகையில், இலங்கை வீரர்களுக்கு பயிற்சியளிக்க வந்தமைக்கு ஜொன்டி ரோட்ஸுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும், அவரது பயிற்சியின் கீழ் புதிய அனுபவங்களை இலங்கை வீரர்கள் பெற்றதாகவும் தெரிவித்துள்ளார்.

## பங்களாதேஷை அடுத்து சிம்பாவேக்கு

பங்களாதேஷ் தொடரைத் தொடர்ந்து இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் சிம்பாப்வேக்கு சுற்றுப் பயணம் செய்து விளையாடவுள்ளது

அங்கு மூன்று ஒருநாள் போட்டி மற்றும் 2 ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

யூலை 10, 12, 14 ஆகிய திகதிகளில் ஒருநாள் போட்டியும், யூலை 17, 19ஆம் திகதிகளில் ரி20 போட்டியும் நடைபெறும் என்று இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அதே சமயம் இந்திய அணி யு,லை 7 ஆம் திகதி சிம்பாப்வே வருவதாகவும், இந்தப் போட்டிகள் அனைத்தும் ஹராரேவில் நடைபெற உள்ளதாகவும் சிம்பாப்வே கிரிக்கெட் சபை நிர்வாக இயக்குனர் அலஸ்டயர் கேம்பெல் தெரிவித்துள்ளார்.

## ரோஸ் பட்லருக்கு ரோல்மொடல்

(லண்டன்)

இங்கிலாந்து ஒரு நாள் அணியின் துணைக்கப்டன் ரோஸ் பட்லர் தன்னுடைய ரோல்மொடல் டி வில்லியர்ஸ் என தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து நியூசிலாந்து அணிகள் மோதிய முதலாவது 50 ஓவர் கிரிக்கெட்போட்டியில் இங்கிலாந்து அணியின் விக்கெட் கீப்பர் ஜோஸ் பட்லர் அதிரடியாக விளையாடி சதம் அடித்தார். அவர் 77 பந்தில் 129 ஓட்டங்களைக் குவித்தார்.

இதன் பின் செய்தியாளர்களிடம் பேசிய ஜோஸ் பட்லர் நீண்ட காலமாக டி வில்லியர்ஸ் தான் என் ரோல் மொடல். அவர் துடுப்பாட்டத்தின் இலக்கணத்தையே மாற்றியமைத்து வருகிறார்.

எல்லோரும் அவரைப் போல விளையாட முயற்சித்து வருக்கிறார்கள் எனத் தெரிவித்தார்.

## 40 ஆண்டுகால கிரிக்கெட்டில் சாதனை படைத்த இங்கிலாந்து



(லண்டன்)

நியூசிலாந்து அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடந்த முதல் ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து 408 ஓட்டங்கள் குவித்து புதிய சாதனை படைத்துள்ளது.

மேலும் இந்த ஆட்டத்தில் 210 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. கடந்த 40 ஆண்டுகால கிரிக்கெட் வரலாற்றில் இது மிகப் பெரிய வெற்றியாகும்.

2005ஆம் ஆண்டு பங்களாதேஷுக்கு எதிராக 4 விக்கெட் இழப்புக்கு 391 ஓட்டங்கள் குவித்ததே இங்கிலாந்து அணியின் அதிக பட்சமாக இருந்தது.

மேலும், இதற்கு முன் கடந்த 1975 ஆம் ஆண்டு லோர்ட்ஸ் மைதானத்தில் இந்தியாவுக்கு எதிராக 202 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதே சிறந்த வெற்றியாக இருந்தது.

அதுமட்டுமல்லாது இப்போட்டியில் இங்கிலாந்தின் பட்லர், ரஷித் ஜோடி இணைந்து 7ஆவது விக்கெட்டுக்கு 177 ஓட்டங்கள் சேர்த்து, புதிய உலக சாதனை படைத்தது.

இதற்கு முன் சிம்பாப்வேயின் அன்டி பிளவர், ஹீத் ஸ்ரீக் ஜோடி 130 ஓட்டங்கள் (இங்கிலாந்துக்கு எதிராக) சேர்த்ததே அதிகமாக இருந்தது.

இதேவேளை இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து 408 ஓட்டங்களைக்குவித்தது.

பதிலளித்து ஆடிய 31.1 ஓவரில் 198 ஓட்டங்களை மட்டுமே எடுத்து 210 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

# மாகாண மட்ட கால்பந்து போட்டி

# யாழ்.மாவட்ட பாடசாலைகள் முன்னிலை

























(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டப் போட்டியின் 15,17,19 வயதுப் பிரிவுகளில் ஆண்களுக்கான போட்டிகளில் யாழ்.மாவட்ட பாடசாலை அணிகள் முதலிடம் பெற்றுள்ளன.

15 வயதுப் பிரிவில் ஆண்களுக்கான போட்டியின் இறுதிப் போட்டியில் கொற்றாவத்தை அ.த.க.பாடசாலை அணியும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதின.

இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என மோதிக்கொண்டதில் முதல் சுற்று ஆட்டத்தில் இரு அணிகளுமே தலா ஒவ்வொரு கோல்கள் வீதம் பெற்று சமநிலையில் இருந்தன.

இதனால் தண்ட உதை மூலம் வெற்றியைத் தீர்மானிப்பது என முடிவு செய்யப்பட்டது.

தண்ட உதையில் கொற்றாவத்தை அ.த.க.பாடசாலை அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மாகாண சம்பியனானது.

இப்பிரிவில் மூன்றாம் இடத்தினை மன்னார் செ்ன்.லூசியா மகா வித்தியா லயம் பெற்றுக்கொண்டதுடன் 4 ஆம் இடத்தை சென்.பற்றிக்ஸ் கல்லூரி பெற்றுக் கொண்டது.

மேற்படி போட்டி கடந்த சனி ஞாயிற்றுக்கிழமைகளில் வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் நடைபெற்றது.

17 வயதுப் .பிரிவினருக்கான கால் பந்தாட்ட இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மன்னார் புனிதாசவேரியார் ஆண்கள் கல்லூரியும் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் இரு அணிகளும் மாறிமாறி கோல்கள் போட்ட வண்ணம் இருந்தன. ஆட்டநேர முடிவில் யாழ்.மத்திய கல்லூரி 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று மாகாண சம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றது.

இப்போட்டியின் 3 ஆம் இடத்தினை யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி பெற்றுக்கொண்டது.

19 வயதுப் பிரிவினருக்கான கால் பந்தாட்ட இறுதிப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின.

இதில் இரு அணிகளுமே ஒன்றுக் கொன்று சளைத்தவை அல்ல என் ஆக்ரோசமாக போட்டி போட்டதில் இரு அணி வீரர்களும் மற்றைய அணி கோல் பெறமுயற்சிப்பதை தடுத்து வந்தனர். இதனால் ஆட்ட நேர முடிவு வரை இரு அணிகளாலும் கோல்கள் எதனையும் பெற முடியவில்லை. இதனால் வெற்றியைத் தண்ட உதை மூலம் தீர்மானிப்பது என முடிவு செய்யப்பட்டது.

தண்ட உதையில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றியைப் பெற்று வடமாகாண சம்பியனாகியது.

இப்போட்டியில் மூன்றாம் இடத்தினை மன்னார் முருங்கன் வித்தியாலயம் பெற்றுக்கொண்டது.

மேற்படி போட்டிகள் கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றன.

(93)

## பாகிஸ்தான் தொடருக்கான இலங்கை அணி அறிவிப்பு


நடைபெறவுள்ள இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் தொடர்களில் கடந்த இரண்டு வருடங்களாக பிரகாசித்து வரும் ஜெஹான் முபாரக் 8 வருடங்களின் பின்னர் டெஸ்ட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். 10 டெஸ்ட் போட்டிகளில் 254 ஓட்டங்களை மாத்திரமே இவர் பெற்றுள்ளார். அதிகூடிய ஓட்டங்களாக 48 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அத்துடன் தரிந்து கௌஷால், குஷால் பெரேரா ஆகியோரும் அணியில் இணைக்கப்பட்டுள்ளனர். வேகப்பந்து வீச்சாளர் துஸ்மாந்த சமீரவும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அணி விபரம்

அஞ்சலோ மத்தியூஸ், லஹிறு திரிமன்னே, கௌஷால் சில்வா, திமுத் கருணாரத்ன, குமார் சங்கக்கார, தினேஷ் சந்திமால், கித்ருவான் விதானகே, ஜெஹான் முபாரக், குஷால் பெரேரா, ரங்கன ஹேரத், டில்ருவான் பெரேரா, தரிந்து கௌஷால், நுவான் பிரதீப், தம்மிக்க பிரசாத், துஸ்மாந்த சமீர, சுரங்க லக்மால்(உபாதையில் இருந்து குணமடைந்தால் அணியில் இணைக்கப்படுவார்)

# மானுட இயல்பையொட்டி அற விழுமியங்களைப் பேச வேண்டும்




5

கிறிஸ்டினா மக்ரோரி - தமிழில்: அ. சதானந்தன்

மொத்தத்தில் இந்த இரு தளங்கள் - மனிதன், சமூகம் - இவை இரண்டுமே ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை என்று கண்டார் ஸ்மித். அவர் வாழும் காலத்தில் மானுட இயல்பு குறித்து எதிரெதிர் நம்பிக்கைகள் இருந்தன. “த தியரி ஒப் மோரல் செண்டிமெண்ட்ஸி”ல் இரண்டையும் அவரால் கணக்கில் எடுத்துக் கொள்ள முடிந்த காரணத்தால்தான் பின்னர் “த வெல்த் ஒப் நேஷன்ஸி”ல், வர்த்தக சமூகத்தைப் பரந்துபட்ட பார்வையுடன் அணுக முடிந்தது. அந்த அணுகலில் ஒரு யதார்த்தம் இருந்தது. சந்தையின் நன்மைகள், நடைமுறைப் பயன்களைப் பேசும்போதே அவரால், சந்தை மனித இயல்பைச் சீரழிக்கிறது, மனித வாழ்வில் எதிர்மறை விளைவுகளை உருவாக்குகிறது என்று அங்கலாய்க்கவும் முடிந்தது. ஆனால் மறந்தும் முந்தைய முடியாட்சி.்.சர்ச் ஆட்சிக்குத் திரும்புவதை அவர் ஒரு விடையாக முன்வைக்கவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். திரும்பத் திரும்ப ஜனநாயகத்தைச் செழுமைப்படுத்துவது பற்றித்தான் பேசுகிறார்.

### மானுட விரிவை மீட்டெடுத்தல்

ஆடம் ஸ்மித்தின் பொருளாதாரச் சிந்தனைகளின் அறப்பரிமாணத்தை அங்கீகரித்து என்ன ஆகப் போகிறது? அவரைச் சரியாக புரிந்து கொள்கிறோம் என்பது மட்டும்தானா? சுயநலனை வலியுறுத்தியவர் என்ற ஒரு பிம்பம் மாறி அவரைக் குறித்த செறிவான புரிதலுக்கு அது உதவும்தான். ஆனால், பொருட்பாலுக்கும் அறத்துப்பாலுக்கும் இடையே தத்துவ தளத்தில் ஓர் உரையாடல் நடைபெற்றாக வேண்டும். இன்று இந்த இரண்டுக்கும் இடையே ஒரு தொடர்பும் இல்லாதது போல் இருக்கிறது, முற்றிலும் முரண்பட்ட அடிப்படைகளையும் ஆய்வு முறைகளையும் கொண்ட துறைகளாக அறியப்படுகின்றன.

ஆனால் இதற்கெல்லாம் காரணம் ஸ்மித் தான் என்று சொன்னால் விநோதமாக இருக்கும். முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஜோர்ஜ் ஸ்டிக்லர், “போட்டி நிறைந்த சூழலில் தன்னலம் பாராட்டும் தனிமனித விழைவை,” கண்டறிந்த ஆடம் ஸ்மித்தின் நியூட்டனிய கண்டுபிடிப்பின் அடித்தளத்தில்தான் நியோகிளாசிகல் பொருளாதாரம் எழுப்பப்பட்டிருக்கிறது என்று கூறினார். ஏறத்தாழ அனைவரும் அதை ஒப்புக் கொண்டது போலிருந்தது. இன்றும் அந்த நிலைதான் நிலவுகிறது. பொருளாதாரம் இன்று ஒரு அறிவியல் போல் தோற்றம் பெற்றுள்ளது என்றால் அதற்குக் காரணம் ஸ்மித்தின் சிந்தனைதான். அதனாலேயே தத்துவத்துறையும் பொருளாதாரத் துறையும் உரையாட வேண்டிய தேவையில்லை, அது சாத்தியமுமல்ல என்று தோன்றுகிறது.

மனிதனின் அற இயல்பு என்னவென்று ஸ்மித் கொண்டிருப்பதாக நான் எழுதியது ஏற்றுக்கொள்ளத் தக்கது என்றால், தனிமனித சுயநலமே அவர் பொருளாதாரத் துறைக்கு அளித்த பெருங்கொடை என்று சொல்வது மிகப்பெரிய பிழையான வாசிப்பாக இருக்கும். ஸ்மித் என்னவோ பொருளாதாரத் துறை உருவாவதற்கு முன் அது குறித்த ஆயத்த ஆய்வுகள் செய்து கொண்டிருந்தார் என்பதல்ல. அவர் பல துறைகளிலும் ஆர்வம் கொண்டிருந்தார், அவற்றுக்கிடையே இருந்தே வேலிகளைத் தாண்டி சர்வசாதாரணமாகப் புழங்கிக் கொண்டிருந்தார். அறம் குறித்த தத்துவ ஆய்வில் சமூகவியலும் பொருளாதாரமும் பேசுவதற்கான உற்சாகம் அளிக்கக்கூடிய விஷயங்களாகவே இருந்தன. எனவே, மனிதனின் இயல்பு என்ன என்று அக்காலத்தவர்கள் வகுத்திருந்த வரையறைகளை ஆதாரமாகக் கொண்டதாகவே அவரது பொருளாதாரச் சிந்தனைகளும் இருந்தன.

இதை எல்லாம் பிரித்துப் பார்க்கும்போது நாம் ஸ்மித் சொன்னதை தவறாகப் புரிந்து கொள்வோம் என்பது மட்டுமல்ல, விவாதம் துவங்குவதற்கு முன்பே அதற்கு முற்றுப்புள்ளி வைத்து விடுவோம். எவ்வளவுதான் மோசமாக ஸ்மித் கூறியதைப் புரிந்து கொண்டாலும்கூட அதுவும் அற மானுடவியலைக் கணக்கில் எடுத்துக் கொண்டாக வேண்டும். கட்டுப்பாடுகளற்ற சந்தைப் பொருளாதாரத்தை ஸ்மித் வலியுறுத்தினார் என்று சொல்பவர்களும்கூட, அவர் மனிதன் சுயநலம் மிகுந்தவன் என்று சொன்னதாகவே புரிந்து கொண்டாக வேண்டும். எது எப்படியானாலும் மானுட தர்மம் என்ன என்பதைப் பேசாமல் இருக்க முடியாது.

பொருளாதாரத் துறையின் மையத்தில் ஸ்மித் இருக்கிறார் என்கையில், இது அறிவுப்புல வரலாற்றோடு நிற்கும் விஷயமல்ல. அரசியல் பொருளாதாரம் பற்றிய அறிவுலகம் ஸ்மித்தால் உருவாக்கப்பட்டது, அவரது வழித்தோன்றல்களால் நிறைந்தது, அது முழுக்க முழுக்க மானுட தர்மம் குறித்த ஊகங்களால் பொத்தலாக்கப்பட்டிருக்கிறது. இது நவீன பொருளாதார ஆய்வாளர்களுக்குப் பிடிபடாத விஷயமாக இருக்கிறது.

மானுட தர்மம் குறித்து ஸ்மித் என்ன சொன்னார் என்பதில் அக்கறை இல்லாத பொருளாதார வல்லுநர்களும்கூட, அதை அடிப்படையாய்க் கொண்ட உலகின் கேள்விகளைத் தவிர்க்க முடியாது. பொருளாதாரத்தின் டிஎன்ஏவில் மானுட தர்மம் குறித்த தத்துவங்கள் பொதிந்திருக்கின்றன. இதை கவனிக்க மறுப்பவர்கள், பொருளாதாரம் குறித்த விவாதங்களில் எது விலை பேசப்படுகிறது என்பது குறித்து முழுமையாய் புரிந்து கொள்ளாதவர்கள்.

மனிதர்கள் அனைவரும் சுயநலமிகள்தானா? அப்படியானால், தானாகவோ அல்லது தெய்வ சித்தத்தின் படியோ இது பொதுநலனாக மாறுகிறதா? தமக்கு வாய்த்த நலன்களை அறிவுபூர்வமாக பெருக்கிக் கொள்பவர்கள் மட்டும்தானா நாம்? அல்லது, நம் அகத்தின் சிக்கலான தர்மத்தையும், நம் நடத்தையின் புரிந்து கொள்ள சிக்கலான வெளிப்பாட்டையும் இது கைப்பற்றத் தவறுகிறதா? இது எல்லாவற்றையும்விட மனிதர்களுக்கிடையே உள்ள பயன்பாடுகளை ஒப்பிடுவது அசாத்தியமானதும் அர்த்தமற்றதுமானது என்று சொல்ல முடியுமா?

இந்தக் கேள்விகளைப் புறக்கணிக்க முடியாது. அதற்கான அவசியமும் இல்லை. சந்தையின் ஒழுங்கு, செல்வ ஏற்றத்தாழ்வுகள், முதலியத்தின் எதிர்காலம் என்றெல்லாம் பேசும்போது இவையனைத்தும் நம் முன்னும் பின்னும் நம்மைச் சூழவும் மிதந்து கொண்டிருக்கின்றன. ஆடம் ஸ்மித் இறந்து நூறாண்டுகளுக்குப் பின்னரும் இது குறித்த ஆழமான புரிதல் இருக்கவில்லை. 1890ஆம் ஆண்டு அல்.்.பிரட் மார்ஷல் தன் பொருளாதாரத்தின் அடிப்படைகள் என்ற பாடநூலை இவ்வாறு துவக்கினார்-

“பொருளாதாரம் என்பது மனிதனின் அன்றாட வாழ்க்கை விவகாரங்களில் அவனை அறிந்து கொள்வது; நலவாழ்வுக்குத் தேவையான பொருளாதாரத் தேவைகளை அடைவதிலும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதிலும் மிகவும் நெருக்கமான தனிமனித, சமூகச் செயற்பாடுகளை அது ஆய்வு செய்கிறது. ஒரு புறம் அது செல்வத்தை ஆய்வு செய்கிறது என்றால், மறுபுறம், அதைக் காட்டிலும் முக்கியமான பக்கம், மனிதனை ஆய்வு செய்கிறது.”

இப்படிப்பட்ட ஆய்வுகளில் கேட்க வேண்டிய பெருங்கேள்விகளை இன்றைய பொருளாதாரத் துறை புறக்கணிக்கிறது. இதனால் அதன் மையத்தில், இத்தனைக்கும் என்ன அர்த்தம், என்பது குறித்து ஒரு மிகப்பெரிய வெறுமை இருக்கிறது. நிஜ மனிதர்களின் வாழ்வில் உள்ள மிகப் பெரும் கேள்விகளை நோக்கி நம் கவனத்தைத் திருப்ப முற்படும் பிக்கெட்டியின் நூல் இந்த வெறுமையை நிறைக்கத் தொடங்கியிருக்கிறது. ஆனால் அதுவும் கூட துவக்க காலப் பொருளாதார ஆய்வுகளில் இருந்த அளவுக்கு மானுட விரிவை முழுமையாய் மீட்டெடுப்பதில்லை. பொதுநலம் என்றும் நம் பொருளாதார ஏற்பாடுகளின் எதிர்காலம் என்ன என்றும் நாம் பேசத் துவங்கியிருக்கிறோம், இப்போதுதான் இந்த விரிவு மிகவும் அவசியப்படுகிறது.

# இளையராஜா எனும் BRAND

- அதிஷா -



“வியாபார நோக்கில் தன்னுடைய பெயரை, புகைப்படத்தை” தன்னுடைய அனுமதியில்லாமல் யாரும் பயன்படுத்தக்கூடாது என்று மீண்டும் அறிவித்துள்ளார் இளையராஜா. மீறினால் சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன் என்றும் கூறியிருக்கிறார். இளையராஜாவின் இந்த அறிவிப்பை அடுத்து இணையத்தில் ஆளாளுக்கு அவரைப் போட்டு சுட்டு பொசுக்கி சுக்கா வறுவலாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இளையராஜாவின் இந்த அறிவிப்பு நேர்மையானது. எந்த ஒரு படைப்பாளிக்கும் உரிய நியாயமான உரிமையையே இளையராஜா கோருகிறார்.

இளையராஜா யாரோ ரயிலில் பிச்சை எடுக்கிற ஒருவர் தன்னுடைய பாடலை பாடக்கூடாது என்று கூறவில்லை. தேநீர்க்கடைகளில் தன்னுடைய பாடலை ஓடவிடுவதை குற்றஞ்சொல்லவில்லை. பெரிய ஊடக நிறுவனங்களை “என்னை வைத்து சம்பாதிப்பதாக இருந்தால் என்னிடம் சொல்லிவிட்டு செய்” என்கிறார்! அவ்வளவுதான். தன்னுடைய பெயரை இசையை பயன்படுத்தி கோடிக்கணக்கில் காசு சம்பாதிப்பவர்கள் தன்னிடம் அனுமதி பெற்றுவிட்டு வியாபாரம் செய்துகொள்ளட்டும் என்கிறார்.

இன்றைய தேதியில் “இளையராஜா” என்பது வெறும் பெயரல்ல, அது ஒரு BRAND. தமிழறிந்த பல கோடி மக்களிடையே நன்கு விற்கவல்ல ஒரு பிராண்ட். அவருடைய பெயரைப் பயன்படுத்தி விளம்பரதாரர்களை ஈர்க்க முடியும். கோடிக்கணக்கில் சம்பாதிக்க முடியும். அதனாலேயே பெப்ஸி, மைக்ரோ சொ.்.ப்ட், அப்பிள் போல” அப்பெயரையும் புகைப்படத்தையும் யாரும் இஷ்டப்படி வியாபார நோக்கங்ளுக்காக பயன்படுத்தக் கூடாது என்கிறார் ராஜா. தன்னுடைய பெயரால் பரப்பப்படுகிற வியாபாரசந்தையை கட்டுப்படுத்த விளைகிறார்! (கடந்த ஆண்டுகளில் அவர் இசையமைத்த படங்கள் தொடர் தோல்விகளைத் தழுவிய போதும் அவர் இசையமைத்த பழைய பாடல்களுக்கான வரவேற்பு கொஞ்சம் கூட குறையவில்லை என்பது இங்கே கவனிக்கத்தக்கது)

நடிகர் ரஜினிகாந்த் இதை கடந்த சில ஆண்டுகளாக வெற்றிகரமாக செய்துவருகிறார். அவருடைய படத்தை, குரலை, அவரைப்போன்ற உருவத்தை, பெயரை வியாபார நோக்கில் பயன்படுத்துவதாக இருந்தால் அவருடைய குடும்பத்தாரிடமிருந்து உரிய அனுமதி பெறவேண்டும். இல்லையென்றால் சட்டப்படி எப்படிப்பட்ட படைப்புக்கும் எப்படிப்பட்ட நிறுவனத்திற்கும் தடைதான்! மே ஹூன் ரஜினிகாந்த் என்கிற படத்திற்கு தடை வாங்கியதும் இவ்வகையில்தான். டண்டனக்கா பாடலுக்காக டிஆர் கோர்ட் படி ஏறியதும் இவ்வகையில்தான். அதைத்தான் இப்போது இளையராஜாவும் செய்திருக்கிறார்.

பக்திப்பாடல்கள், தனியான இசைத் தொகுப்புக்கள் இல்லாமல், திரைப்பாடல்களாக 4500 பாடல்களுக்கு இசை அமைத்திருக்கிறார் இளையராஜா. ஆனால் அவற்றின் மூலம் அவருக்குக் கிடைத்திருக்க வேண்டிய அளவிற்குப் பொருளர்தாரப் பலன்கள் கிடைக்கவில்லை, ஒரு படைப்பின் மீது ஒரு படைப்பாளிக்கு உள்ள படைப்புரிமையை மதிக்காமல் பலரும் ஆற்றுத் தண்ணீரை அள்ளிக்கொள்வது போல

# புதிய கிரகம் - விஷ்யானந்த் 4538



இந்திய செஸ் வீரர் விஸ்வநாதன் ஆனந்தின் பெயர் சிறிய கிரகம் ஒன்றிற்கு சூட்டப்பட்டுள்ளது. புதியதாக கண்டு பிடிக்கப்படும் சிறிய கிரகங்களுக்கு புகழ்பெற்ற நபர்களின் பெயர்கள் வைக்கப்படுகின்றன.

ஏற்கனவே ரென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர், அமெரிக்க தடகள வீரர் ஜெஸ்ஸி ஓவன், கிரிக்கெட் வீரர் டொனால்ட் பிராட்மென் ஆகியோரின் பெயர்கள் சிறிய கிரகங்களுக்கு வைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் 1988ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10 ஆம் திகதி ஜப்பானைச் சேர்ந்த கென்சோசுசுகி என்பவரால் சிறிய கிரகம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. இந்தக் கிரகம் செவ்வாய் மற்றும் வியாழன் கிரகங்களுக்கு இடையில் அமைந்துள்ளது. இதுவரை எண்களை வைத்து மட்டும் அழைக்கப்பட்டு வந்த அந்த கிரகத்திற்கு இப்போது விஷ்யானந்த் 4538 என்னும் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

# மலர்களில் இத்தனை பயன்களா?

★ வீட்டில் சூரியகாந்திச் செடிகளை வளர்த்தால் வீட்டில் யாருக்கும் சளி தடுமன் எட்டிப் பார்க்காது.

★ காய்ந்த வேப்பம்பூவை தேங்காய் எண்ணெய்யில் போட்டு நன்கு காய்ச்சி அதை வடிகட்டி கூந்தலுக்கு தடவி வந்தால் பொடுகு நீங்குவதுடன் கூந்தலும் நன்கு வளரும். நல்லெண்ணெயிலும் இப்படிக் காய்ச்சலாம்.

★ மல்லிகை, முல்லை, ரோஜா போன்ற மலர்களை உலரவைத்து தூளாக்கிக் கடலைமாவுடன் கலந்து உடம்புக்குத் தேய்த்துக் குளிக்கலாம்.

★ செம்பருத்திப் பூவின் சிவந்த இதழ்களைப் பறித்து இடித்துச் சாறு எடுத்து ஒரு வேளைக்கு ஒரு அவுன்ஸ் என மூன்று வேளை குடித்து வந்தால் எரிச்சலோடு அடிக்கடி சிறுநீர் கழித்தல், உடல் உஷ்ணம், சளி தொந்தரவுகள் குறையும்.

★ செம்பருத்தி, ஜாதிமல்லி, தாழம்பூ போன்றவற்றைப் பொடியாக நறுக்கி தேங்காய் எண்ணெய்யுடன் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டி கூந்தலுக்கு தடவிவந்தால் வாசனையாக இருக்கும்.

★ தாழம்பூ, சம்பங்கி போன்ற வாசனைப் பூக்களை உலரவைத்துத் துணியில் கட்டி அலுமாரியில் வைக்க வாசனையாக இருக்கும்.

**(தெரிந்து கொள்ளுங்கள் நூலில்)**



அவரவர் சக்திக்குட்பட்ட வகையில் இலவசமாக அள்ளிச் சென்று கொண்டிருந்தனர். அதனால்தான் சில மாதங்களுக்கு முன்பு தான் இசையமைத்த பாடல்களை சில நிறுவனங்கள் தன்னுடைய அனுமதி பெறாமல் ஒலிப்பதிவு செய்யவோ, (குறுந்தகடுகளாகவோ, இணையத்திலோ) வெளியிடவோ கூடாது என்று தடை பெற்றது பரபரப்பாக பேசப்பட்டது.

“எனக்கு கிடைக்கவேண்டிய ரோயல்டி மட்டும் ஒழுங்காக கிடைத்திருந்தால் இந்நேரம் நான் பில்கேட்ஸ் ஆகியிருப்பேன்” என்று சமீபத்தில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் பேசியிருக்கிறார் இளையராஜா.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே பாடகர் ஜேசுதாஸ் தன்னுடைய பாடல்களுக்கான உரிமைகளை இதுபோல் பெற்றுள்ளார். மேடைகளில் இனி என்னுடைய பாடல்களைப் பாட என் அனுமதி வாங்க வேண்டும் என்று போராடினார். இவ்விவகாரம் அக்காலகட்டத்தில் கேரளாவில் பெரிய சர்ச்சையை உருவாக்கியது..

இன்றைய இசையமைப்பாளர்கள் எல்லோருமே இந்த கொப்பிரைட் விஷயத்தில் மிகவும் கறாராக இருக்கின்றனர். ஒப்பந்தம் போடும்போதே பல விஷயங்களை கவனித்து கையெழுத்துப் போடுகின்றனர். ஆனால் இளையராஜா இந்த விஷயத்தில் ரொம்ப லேட்! 2010 இல்தான் அவருக்கு ஞானமே வந்தது. தனக்கான உரிமைகளைக் காத்துக் கொள்வது குறித்து யோசிக்கவே தொடங்கினார்.

ராம்கோபால்வர்மா இயக்கிய பொலிவுட் திரைப்படமான “டிபார்ட்மென்ட்”இல் அவரது “ஆசை நூறுவகை” என்கிற பாடல் பயன் படுத்தப்பட்டிருந்ததை எதிர்த்து, உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தொடர்ந்து அப்பாடலுக்கு தடைவாங்கினார் இளையராஜா.

பொலிவுட்டில் மட்டுமல்ல கோலிவுட்டிலும் “சுப்ரமணியபுரம்” தொடங்கி வைத்த ட்ரெண்டில் பல படங்களிலும் அவருடைய பின்னணி இசையும் பாடல்களும் எவ்வித அனுமதியுமின்றி பயன்படுத்தப்பட்டன. கடந்த ஜனவரி வரைக்குமே இப்படி இளையராஜாவின் பாடல்களை அனுமதியின்றி உபயோகிப்பது தொடர்ந்து கொண்டிருந்தது. அதற்குப் பிறகே தன்னுடைய பாடல்கள் வெவ்வேறு புதிய ஊடகங்களில் குறிப்பாக மொபைல் போன் சார்ந்த விஷயங்களிலும் எ.ஃப் எம்களிலும் எப்படியெல்லாம் பயன்படுத்தப்படுகிறது என்பதை கண்காணித்து கட்டுப்படுத்தவும் தொடங்கினார். 2012இல் வெளியான மிஸ் லவ்லி திரைப்படத்தில் அவர் இசையமைத்த பாயும்புலி படத்தின் டைட்டில் இசையும் அதே படத்தில் இன்னொரு பாடலும் பயன்படுத்தப்பட்டது. ஆனால் இம்முறை முறையாக அனுமதிபெற்று பயன்படுத்தினர்.

அதற்குப் பிறகு இயக்குநர் ஷங்கர் வெளியிட்ட “கப்பல்” திரைப்படத்தில் இளையராஜா இசையமைத்த ஊரு விட்டு ஊரு வந்து என்ற பாடல் அனுமதியின்றி பயன்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறி அப்பாடலை நீக்கக்கோரி நீதிமன்றத்திற்கு சென்றார் இளையராஜா. ஆனால் அங்கே தயாரிப்பாளர் தரப்பு “நாங்கள் சம்பந்தப்பட்ட பாடலை வெளியிட்ட கசட் நிறுவனத்திடம் (அகிமியூசிக்) அனுமதி வாங்கிவிட்டோம்” என்று கூற அப்பாடல் எத்தடையுமின்றி திரைப்படத்தில் இடம்பெற்றது.


இதனால் மிகுந்த மனவருத்தங்களுக்கு ஆளான இளையராஜா இவ்விஷயங்களை கண்காணிக்கத் தொடங்கினார். நான்கு ஓடியோ நிறுவனங்கள் அவருடைய பாடல்களுக்கான உரிமைகளை வைத்துக்கொண்டு வெவ்வேறு ஊடகங்களுக்கும் வெவ்வேறு விதமாக அனுமதி கொடுத்து வந்ததை கண்டறிந்தார். கடந்த 2014 செப்ரெம்பரில் நான்கு நிறுவனங்கள் மீதும் வழக்குத் தொடர்ந்தார். ஆனாலும் தொடர்ந்து அத்துமீறல்கள் நிகழ்ந்தவண்ணமே இருந்தன.

அதற்குப் பிறகு ஒரு நீண்ட போராட்டத்திற்குப் பிறகே நீதிமன்றத்தின் வழி தன்னுடைய உரிமைகளை பெற்றுள்ளார் இளையராஜா. இனி இளையராஜாவின் இசையை அவருடைய அனுமதி பெற்றுத்தான் பயன்படுத்த முடியும். தன்னுடைய பாடல்களின் வழி கிடைக்கும் ரோயல்டியில் தயாரிப்பாளர், பாடலாசிரியர் மற்றும் பாடகருக்கும் உரிய பங்கினை கொடுக்கவிருப்பதாகவும் இளையராஜா பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இளையராஜாவின் அரசியலில் நமக்கு ஒப்புதல் இல்லாமலிருக்கலாம் (அவருக்கு ஏது அரசியல் என்று கேட்கக்கூடாது). அவருடைய பாடல்கள் நமக்கு பிடிக்காமலிருக்கலாம். அவற்றை விமர்சிக்கலாம். ஒரு படைப்பாளியாக இந்தத் தள்ளாத வயதிலும் தன் படைப்புகளுக்கான நியாயமான உரிமைகளுக்காக போராடும் போது அவர் பக்கமாகத்தான் நாம் நிற்கவேண்டும்.

# ஊரும் உலகமும்

## பிறேஸ் கேடில் விவகாரம்



ஜீ.ஜீ. பொன்னம்பலம்

பதின்ம வயதுகளில் இங்கிலாந்திலிருந்து அவுஸ்ரேலியாவுக்குச் சென்ற ஆங்கிலேயரான மார்க் அன்ரனி லெஸ்ரர் பிறேஸ் கேடில் அவுஸ்ரேலிய கம்யூனிஸ்ட் கட்சியின் இளைஞர் அணியில் உறுப்பினரானார். இவர் 1936 மார்ச் மாதத்தில் இலங்கைக்கு வந்து மடுல்கலையிலுள்ள றெலுக்காஸ் தோட்டத்தில் தேயிலைப் பயிர்ச்செய்கை பற்றிப் படிப்பதற்காக இணைந்தார். அங்கு தொழிலாளரின் உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டதால் ஆங்கிலேயரான தோட்டத்துரை இவரைத் தோட்டத்திலிருந்து வெளியேற்றினார்.

தோட்டத்திலிருந்து வெளியேறிய பிறேஸ் கேடில் லங்கா சமசமாஜக் கட்சியில் இணைந்து செயற்படத் தொடங்கினார். நாவலப்பிட்டியில் லங்கா சமசமாஜக் கட்சி ஏற்பாடு செய்த தொழிலாளருக்கான கூட்டமொன்றில் உரையாற்றிய பிறேஸ் கேடில் ஆங்கிலேய தோட்டத்துரைமாரைக் காரசாரமாகத் தாக்கிப் பேசினார். இதனால் ஆத்திரமடைந்த தோட்டத்துரைமார் பிறேஸ் கேடில் தங்களுக்கு எதிராகத் தொழிலாளரைத் துண்டியிருக்கிறார் என்று முறைப்பாடு செய்ததன் பேரில் ஆளுநர் 1896 ஆம் ஆண்டின் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியேற்ற உத்தரவு பிறப்பித்தார். 1937 ஏப்ரல் 24ஆம் திகதி பி.ப. 6.00 மணிக்கு முன் பிறேஸ் கேடில் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்பதே அந்த உத்தரவு. பிறேஸ் கேடில் தலைமறைவாகினார்.

1896 ஆம் ஆண்டின் கட்டளைச் சட்டம் செல்லுபடியற்றது என்றும் வெளியேற்ற உத்தரவை ஆளுநர் திரும்பப்பெற வேண்டும் என்றும் ஒரு பிரேரணை சட்டசபையில் விவாதத்துக்கு வந்தது. ஏழு பேரின் எதிர்ப்புடன் பிரேரணை நிறைவேறியது. எதிர்த்தவர்களில் ஆறு பேர் நியமன உறுப்பினர்கள் மற்றவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம். இதேநேரம் ஆளுநரின் உத்தரவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.


மே மாதம் 5ஆம் திகதி காலிமுகத்திடலில் லங்கா சமசமாஜக் கட்சி ஏற்பாடு செய்த ஒரு கூட்டத்தில் பிறேஸ் கேடில் உரையாற்றினார் பொலிஸார் அவரைக் கைது செய்வதற்கு முன் கூட்டத்திலிருந்து தப்பிச் சென்றுவிட்டார். இரண்டு நாட்களின் பின் அவரைக் கைது செய்தனர். 1896 ஆம் ஆண்டின் கட்டளைச்சட்டம் அவசர கால நிலையிலேயே செல்லுபடியாகும் என்றும் அதன்கீழ் பிறப்பிக்கப்பட்ட வெளியேற்ற உத்தரவு செல்லுபடியற்றது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து பிறேஸ் கேடில் விடுதலையானார். சிறிது காலம் இலங்கையில் தங்கியிருந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பின் இங்கிலாந்துக்குச் சென்றார்.

## தி.மு.க. பிரிவினையைக் கைவிட்டது



1963 மார்ச் மாதத்தில் இந்தியப் பாராளுமன்றம் நிறைவேற்றிய பதினாறாவது அரசியலமைப்புத் திருத்தம் பிரிவினைக்கு எதிரானது. இந்தியாவில் பிரிவினை கோரும் அரசியல் கட்சிகளைத் தடை செய்வதற்கு இத்திருத்தம் அதிகாரமளிக்கின்றது. திராவிட நாடு என்ற தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து வந்த திராவிட முன்னேற்றக் கழகம் இத்திருத்தம் நிறைவேறியதும் அக் கோரிக்கையைக் கைவிட்டது. அப்போது கழகத்தின் தலைவராக இருந்தவர் சி.என்.அண்ணாத்துரை.

## சகோதரப் போட்டி



1952 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் லங்கா சமசமாஜக் கட்சி வேட்பாளராக தெகியோவிட்ட தொகுதியில் போட்டியிட்ட எட்மன்ட் சமரக்கொடி 82 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றார். இத்தேர்தலில் அவரது சகோதரியான திருமதி ஜயதிலக தொழிற்கட்சி . வேட்பாளராகத் தனது சகோதரனை எதிர்த்துப் போட்டியிட்டு 882 வாக்குகள் மாத்திரம் பெற்றார்.

# இறைசேவையோடிணைந்து கல்விப்பணியாற்றும் கார்மேல் முன்பள்ளி

இப் பாலர் பாடசாலை யாழ்ப்பாணத்தில் கோவில் வீதியில் அமைந்துள்ளது. இங்கு சுமார் 240 மாணவர்கள் வரையில் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். 110 மாணவர்கள் மூன்று வயதினை பூர்த்தி செய்தவர்களாவர் ஏனைய மாணவர்கள் நான்கு வயதைப் பூர்த்தி செய்தவர்கள் இப்பாடசாலையின் பொறுப்பாசிரியர் அருட்சகோதரி மரியஅருள்சீலி (அ.கா) இவருடன் 12 ஆசிரியர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளார்கள் கடந்த யூன் மாதம் 2ஆம் திகதி இப்பாடசாலையின் விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக அருட்தந்தை றெஜிராஜேஸ்வரனும் (O.L.R பங்குத்தந்தை) விசேட விருந்தினராக P.தயானந்தன் (வடமாகாண காணி ஆணையாளர்) கௌரவ விருநதினராக ஞானபண்டிதன் (செலான் வங்கி முகாமையாளர்) கலந்து சிறப்பித்தார்கள் பல்துறை ஆற்றல்களை விருத்தி செய்து பண்பான சமூக ஆளணிகளை வழங்கும் களமாக கார்மேல் முன்பள்ளி விளங்கி வருகின்றது.

(தரவு பாடசாலை நிர்வாகம்)



மாணவர்களிற்கான வருடாந்த விளையாட்டுப்போட்டி 2015



விருந்தினரை வரவேற்கும் முன்பள்ளி மழலைகள்





முன்பள்ளியின்பான்ட் அணி



முன்பள்ளி மாணவர்கள்



முன்பள்ளி மாணவர்கள்



பொறுப்பாசிரியருடன் ஆசிரியர்கள்

# தமிழ் மக்களது பிரச்சினைகள் தேர்தலுக்கு முன் தீராதா?

## கேள்வி எழுப்பியுள்ளது ஈ.பி.டி.பி.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஏன் இப்போது தீர்க்கக் கூடாது? அடுத்த வருடம் ஜூன் மாதத்திற்குப் பின்னர்தான் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய நல்ல நாள் உள்ளதா என்ற கேள்வி எமது மக்களிடையே எழுந்துள்ளது. என ஈ.பி.டி.பி. கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

அடுத்த வருடம் ஜூன் மாதத்திற்கு முன் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதியுடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசியுள்ளதாகவும், அழுத்தம் கொடுத்துள்ளதாகவும், சர்வதேச சமூகத்துடன் பேசி வந்துள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கடந்த 06ஆம் திகதி திருகோண மலையில் வைத்து தெரிவித்திருந்தார்.

மேலும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு முயற்சிகள் அனைத்தும் கடந்த காலங்களில் எதிர்க்கப்பட்டதாகக் கூறும் சம்பந்தன் இன்று அந்நிலை இல்லையென்றும், அதற்கு தற்போது இடமில்லை என்றும் கூறியிருக்கிறார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இப்போது எதிர்ப்புக்கள் இல்லை என்றால், இப்போதே அதுவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த நாட்டின் கொள்கை வகுப்பு தொடர்பிலான உயர்நிலை அமைப்பான தேசிய நிறைவேற்றுச் சபையில் பங்கெடுத்துவரும் நிலையில் - தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஏன் தீர்க்க முடியாது? எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியாவிட்டாலும், ஓரிரு பிரச்சினைகளையாவது தீர்க்கலாம் தானே?

எனவே, அதற்குரிய நேர்மையும், அவசியமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இல்லை என்பதையே சம்பந்தன் போன்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் கருத்துக்களில் இருந்து தெரியவருகின்றது.

மேலும், தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது என்ன என்பதை தமது தேர்தல் பிரகடனம் தெளிவாகக் கூறும் என்றும் சம்பந்தன் கூறியிருக்கிறார். உண்மை. ஒவ்வொரு தேர்தல்களின்போதும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரகடனங்கள் கூறினாலும், தேர்தல்களுக்குப் பின்னர் அவற்றுக்கு என்ன நடக்கும்? என்பதையும் சம்பந்தன் எமது மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

இப்படியே தொடர்ந்தும் எமது மக்களின் பிரச்சினைகளை முன்வைத்து, தேர்தல் வியாபாரம் நடாத்தி, அதனை வைத்து தமது வயிற்றுப் பிழைப்புக்கான சுயலாப அரசியலில் மட்டும் ஈடுபட்டுவரும் நிலையை மாற்றி, எமது மக்களுக்கு எதையாவது செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போது முன்வரும் என்ற கேள்வியே எமது மக்களின் முன்பாக நீண்ட காலமாக இருந்துவருகிறது.

இந்த நிலையில், தாங்களும் செய்யாமல், செய்யக் கூடியவர்களையும் செய்ய விடாமல் முட்டுக்கட்டையாக இருந்துவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் இத்தகைய செயற்பாடுகள் எப்போது இல்லாதொழிக்கப் படுமோ, அப்போதுதான் எமது மக்களுக்கு உண்மையான விடிவு கிட்டும் என்பது மட்டும் உறுதியாகும்.

# கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலைய ஆண்டுவிழா


கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையத்தின் ஆண்டு விழா இன்று வெள்ளிக்கிழமை நல்லூர் கல்வியங்காடு அருளம்பலம் வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் முற்பகல்10..00 மணிக்கு சமூகவள நிலையத் தலைவர் க.தர்மசேகரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூரி பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகனும் சிறப்பு விருந்தினராக இலங்கை மன்றக் கல்லூரியைச் சேர்ந்த ஐங்கரனும் கல்ந்து கொள்ளவுள்ளார்கள்.

வரவேற்புரையை சமூகவள நிலைய செயலாளர் து.ஜசிந்தன் நிகழ்த்துவார் ஆசியுரைகளை யாழ். பல்கலைக்கழக நல்லாயன் நிலையத்தைச் சேர்ந்த அருட் திரு ஆர்.ஸ்ரலின் யாழ்ப் பாணம் சின்மய மிஷனைச் சேர்ந்த ஜாக்கிரத சைத்தன்ய சுவாமிகளும் நிகழ்த்தவுள்ளார்கள். இந் நிகழ்வில் மாற்றுத் திறனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படவுள்ளன.

சமூகவள நிலைய அங்கத்தவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## வெள்ளி நற்சிந்தனை...



# ஒரு கிளியின் உபதேசம்

இந்திரன் "நீ ஏன் இப்படிக் கஷடப்படவேண்டும்? உடனடியாக நல்ல மரத்திற்குச் சென்றுவிடு;; என்று கூறியதைக் கேட்ட கிளி அவனை உரிய முறைப்படி வணங்கிவிட்டு இனிய குரலில் கூறியது. தேவேந்திரா! தங்களுக்கு என்மனமார்ந்த நல்வரவைத் தெரிவித்துக்கொள்கிறேன். மனித உருவத்தில் தாங்கள் இங்கு எழுந்தருளிய போதிலும் தவம் காரணமாகத் தங்களை இன்னார் என்று தெரிந்து கொண்டேன். தேவர்களுக்கு அரசே! நான் இந்த மரத்தில்தான் பிறந்தேன் இம்மரம் என்னைக் காப்பாற்றி வளர்த்து ஆளாக்கியது.

இதே மரம்தான் நல்ல நிலையில் இருந்தபோது எனக்கு ஆதரவு அளித்து நான் உண்பதற்கு வேண்டிய பழங்களைக் கொடுத்தது. எதிரிகள் பிடிக்க முயன்ற காலங்களில் எல்லாம் எனக்கு அடைக்கலம் தந்து என்னை இந்த மரம்தான் பாதுகாத்தது. மரம் நலிவுற்று வாடும் நிலையில் இருக்கும்பொழுது நான் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்ற என் சுயநலத்தை முன்னிட்டு இதைவிட்டு நான் எப்படி வேறு இடத்திற்குப் போவேன்? இந்த மரம் நல்ல நிலையில் இருந்தபொழுது நானும் இதனுடன் மகிழ்ச்சியாக இருந்தேன். இப்போது மரம் வாடிச் சாகும் நிலையில் இருக்கும்போது இதைவிட்டு நான் நீங்குவது சரியல்ல.

காலமெல்லாம் இதனோடு வாழந்த நான் இதன் துன்பத்திலும் பங்குகொண்டு இதனுடனேயே இறந்து போவேன். இந்த மரம் தான் செழிப்பாக இருந்தகாலத்தில் என்னை வளமாக வாழவைத்தது. இப்போது அவலநிலை ஏற்பட்டு இது துன்புறும் காலத்தல் நானும் இதனுடன் இருந்து துன்பத்தைச் சகித்துக் கொள்வதுதான் நியாயமானது. உதவி செய்தவர்களிடம் பரிவும் பாசமும் கொண்டு நடந்துகொள்வதுதான் சரியானது. பிறரிடம் பரிவோடு நடந்துகொள்வதுதான் சான்றோருக்கு எப்போதும் மனநிறைவைத் தரும் . இவை அனைத்தும் தாங்கள் அறிந்ததே . பிறந்து வளர்ந்த மரத்தின் மீது அன்புகொண்டு இங்கேயே இருக்கும் என்னிடம் தேவர்களுக்கு அரசராக உயர்ந்த நிலையில் இருக்கும் தாங்கள் பரிவுகொள்வதற்கு மாறாக" மரத்தைவிட்டுப் போ !" என்று உபதேசிப்பது எப்படிச் சரியாகும்? தாங்கள் தரும் புத்திமதி எனது நல்ல விரதத்தைக் கலைப்பதுதாக அல்லவா இருக்கின்றது? என்று கேட்டது.

மரத்திடம் அன்பும் நன்றியுணர்ச்சியும் கொண்ட கிளியின் பதிலைக் கேட்டு இந்திரன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.

பெற்றோரை தனியேவிட்டு தாம் மட்டும் உல்லாச வாழ்வு வாழ நினைக்கும் இன்றைய சமூகத்திற்கு இந்தக் கிளியின் உபதேசம் பயன்படுமா?

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

தேசிய உணர்வை மையப்படுத்தி மக்கள் எழுச்சிகளை உருவாக்கி விடுதலை பெற்ற நாடுகள் எந்த அளவிற்கு சனநாயகத் தன்மையுடைய, ஏற்றத் தாழ்வுகளற்ற, சமூக அமைப்புகளை நடைமுறையாக்கின? வியட்நாம், கியூபா போன்ற நாடுகள் சோசலிசப் பாதையில் காலடி வைக்க முடிந்ததெனினும், இந்நாடுகளில் பெரும்பாலானவை ஜனநாயகமற்ற சர்வாதிகாரங்களாகவும் மோசமான முதலாளிய நாடுகளாகவும் மாறியுள்ளன என்பதே வரலாறு.

புகழ்பெற்ற ஆபிரிக்கப் புரட்சி எழுத்தாளரான பிரான்ஸ்பனான புரட்சிக்குப் பிந்திய அல்ஜீரியாவைப் பற்றிப் பேச வரும்போது, "அனைத்து மக்களின் உள்ளார்ந்த நம்பிக்கைகளின் வெளிப்பாடாக அமைய வேண்டிய தேசிய உணர்வு ஒரு வெற்றுக் குடுவையாகவே இருந்தது" எனக் குறிப்பிட்டார். தேசியம் என்பது தீவிர தேசியம் ஆகவும், தேசிய வெறியாகவும், இறுதியில் இன வெறியாகவும் மாறியது எனக் குறிப்பிட்ட அவர், தேசியம் நம்மை "ஒரு குருட்டுச் சந்திற்கே இட்டுச் செல்லும்" என்றார். பொன்னான எதிர்காலத்தைக் கூட்டாகக் கட்டமைப்பது என்பதற்குப் பதிலாக கடும் ஒடுக்குமுறை, வறுமை, இனக்குழுவாதத்தின் புத்துயிர்ப்பு ஆகியவையே காலனிக்குப் பிந்திய ஆபிரிக்க வரலாறாக இருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தன்சானியா நாட்டுச் சிந்தனையாளர் இஸ்ஸா ஷில்கி, "சகோதரத்துவம் எனக் குட்டி முதலாளிகள் எழுப்பிய தேசிய இன முழக்கங்கள் நகரப் பெரு முதலாளிகளின் கருத்தியலையே விடுதலைக்குப் பின் எதிரொலித்தன" என்றார். ஏகாதிபத்திய எதிர்ப்புக் காலத்தில் முற்போக்கான பாத்திரத்தை வகித்த தேசிய இன உணர்வு, விடுதலைக்குப் பின்னர் வர்க்கப் போராட்டங்களை மறுத்தது. அங்கோலா, மொஸாம்பிக் போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகள்.

மொத்தத்தில் ஏகாதிபத்தியங்களைச் சார்ந்து புதுக்காலனியமான, ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்ட, கொடூரமாக அதிகார வர்க்க மயமான ஏற்றத் தாழ்வு மிக்க, வறுமை நிறைந்த நாடுகளாகவே தேசிய உணர்வை முன்வைத்து 'விடுதலை' தேடிய மூன்றாம் உலக நாடுகள் அனைத்தும் மாறின. ரொனால்டோ மங்க் சொன்னது போல "லத்தீன் அமெரிக்காவில் தேசியம என்பது சோசலிசப் போராட்டத்திற்கான அவசியமான காரணியாக இருந்திருக்கலாம். ஆனால் அதுவே போதுமான காரணியாக இல்லை".

**– அ.மார்க்ஸ் (ஒழுங்கவிழ்ப்பின் தேவைகள் சாத்தியங்கள்)**

தன் பண்பாடு மீதான மிதமிஞ்சிய பற்றும் உயர்வு நோக்கும் மனித மனங்களை வன்முறைக்கே இட்டுச் செல்வதைப் பார்த்து வருகிறோம். எந்தப் பண்பாட்டையும் இழிவாக நோக்கும் பார்வையை நாம் முதலில் விட்டொழித்தாக வேண்டும்.

**– உம்பர்ட்டோ எக்கோ**

இதுகாறும் மதம் சார்ந்தும் தத்துவம் சார்ந்தும் உருவாக்கப்பட்டு புழக்கத்தில் உள்ள விழுமியங்களும் சமூக அமைப்புகளும் மனித உடலை ஒடுக்குவதன் மூலம் உருவானவை. மானுட உடலின் வேட்கையும் விடுதலையும் அடக்கப்படுகின்றன. பல வகையில் அது வதைக்கப்படுகிறது. உடலுக்குள் சாராம்சமாக ஆத்மா உள்ளது அல்லது மனம் உள்ளது என்று உருவகிக்கப்பட்டது. அவை உடலில் இருந்து வேறானவை என்றும், உடல் தூய்மையற்றது அவை தூய்மையானவை என்றும் சொல்லப்பட்டது. உடல் அழியும்போது ஆத்மாவும் மனமும் விடுதலை பெறுவதாக கற்பனை செய்யப்பட்டதும்.... அக்கற்பனையே போர்களில் பல்லாயிரம் பேர் அழிவதை வெற்றியாக எண்ணச் செய்தது. உடல் மீதான இவ்வன்முறையை வென்று உடலின் விடுதலையை முன்வைப்பதும் உடல் சார்ந்து வரலாறையும் வாழ்க்கையையும் பார்ப்பதும் இன்றைய தேவை.

**– பிரேம் ரமேஷ்**

குடிமக்களின் பாதுகாவலின் பாற்பட்டதாக ஒரு செயல் காண்பிக்கப்படுகிற போது அறச் சட்டகத்தின் பொதுவான தர்க்கம் தலைகீழாகிறது. வன்முறை வடு அல்ல; நன்மையே என்றாகிறது – அரச அறத்தில்! இவ்வாறு பொதுநலனை முன்னிட்டுச் செய்யப்படுகிற வன்முறைகள் அறத்தகுதி பெற்றுவிடுகின்றன. "பொதுவான நலன்" என்பது ஓர் அரசியல் சொற்றொடர். இங்கே, யாருக்குப் பொதுவானது என்ற கேள்வி காணாமற் போய்விடும். **– ராஜ்கௌதமன்**

இந்த பூமித் தோலின் மீது நோய்கள் பல உள்ளன. அந்நோய்களில் ஒன்று "மனிதன்" என்றழைக்கப்படுகிறது. – நீட்சே

# சட்டத்தின் துணையுடன் அடாவடிகள் ஒழிக்கப்படும்

## வடமாகாண மேல்நீதிமன்ற நீதிபதி உறுதி

யாழ்ப்பாணத்தில் குற்றச் செயல்கள் திடீரென அதிகரித்துள்ளன. சட்டத்தின் துணையுடன் அடாவடிகள் ஒழிக்கப்படும் என வடமாகாண மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன், தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்று வருகின்ற அனைத்து சட்டவிரோதச் செயற்பாடுகளும் ஒரு மாத காலத்தில் சட்டத்தின துணைகொண்டு ஒழிக்கப்பட வேண்டும் என வட மாகாணம் மற்றும் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளிடம் அவர் அறிவுறுத்தியுள்ளார்.


வீதிகளில் சண்டித்தனம் செய்வோர், ரவுடித்தனத்தில் ஈடுபடுவோர், கோஸ்டிகளாக மோதிக்கொள்பவர்கள், வாள் வெட்டுக்களில் ஈடுபடுபவர்கள் என, பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கின்ற அனைத்து நபர்களையும், உடனடியாகக் கைது செய்து நீதிவான் நீதிமன்றங்களில் முற்படுத்துமாறு உயரதிகாரிகளுக்கு நீதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

வீதிகளில் பெண்கள், மாணவிகளைப் பின்தொடர்ந்து இம்சிப்பவர்கள், சந்திகளில் கூடிநின்று, பெண்களுக்கு தொல்லை கொடுப்பவர்களை, தண்டனை சட்டக் கோவையின் கீழாக அலைந்து திரிபவர்களைக் கட்டுப்படுத்தும் சட்டத்தின் கீழ் கைது செய்வதுடன், பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலும், பொதுமக்களுக்கு இடையூறு கொடுக்கும் வகையிலும் வீதிகளில் கூடி நின்று அடாவடித்தனம் செய்பவர்களை தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் கைது செய்து நீதிவான் நீதிமன்றங்களில் முற்படுத்துமாறும் நீதிபதி பொலிஸ் உயரதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கி அறிவுறுத்தியுள்ளார்.



மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் போதைப் பழக்கத்தைத் தூண்டுகின்ற பான்பராக், மதன மோகனம், லேகியம் போன்ற போதையூட்டுகின்ற சிற்றுண்டிகளை விற்பனை செய்யும் வியாபாரிகளை மிகவும் அவதானத்துடன் கண்காணிக்குமாறும், அவர்கள் விறபனை செய்யும் பொருட்களை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி, அவசியம் ஏற்படின் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நீதிபதி பொலிஸாருக்கு வழிகாட்டியுள்ளார். மாலை 6 மணிக்குப் பின்னர் பெண்கள் வேலைக்கு அனுமதிக்கப்படுவதில்லை.

தாதியர் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றார்கள். இந்த நிலையில் 6 மணிக்குப் பின்னர் பிரத்தியேக வகுப்புக்களை நடத்துகின்ற அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களின் உரிமையாளர்களையும் அழைத்து, உரிய சட்ட ரீதியான விளக்கங்களை வழங்கி, மாலை 6 மணிக்குப் பின்னர் மாணவ மாணவிகளுக்கு பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்துவதைத் தவிர்க்குமாறும், அதனையும் மீறிச் செயற்பட்டு, ஏதாவது அசம்பாவித சம்பவங்கள் இடம்பெறுமானால், அதற்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும் என்பதை வலியுறுத்துமாறும் நீதிபதி பொலிஸ் உயரதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். யாழ். நகர்ப் பகுதிகளில் உள்ள மதுபான சாலைகள் நேரம் கெட்ட நேரத்தில் திறந்து, நேரம் பிந்தி பூட்டுவதும், அடாவடித்தனங்களில் ஈடுபடுபவர்களுக்கு முக்கிய இடமாகவும், முக்கிய காரணமாகவும் இருக்கின்றது. மதுபான சாலைகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றார்.. (25)



## பரமர் சங்கமம்

'தீயினால் சுட்டவடு மாறினாலும் மாறாது நாவினால் சுட்ட வடு' எண்டது போலை நம்ம முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும் மைத்திரியருக்கும் அவரது நல்லாட்சிக்கும் வேட்டு வைக்க தன்னுடைய ஆதரவாளர்களைப் பல வழிகளாலும் தூண்டி விட்டுக்கூத்துப் பாக்கமுனைவது சாடைமாடையாக விளங்குது.

அதிலை ஒண்டுதான் சில வாரங்களுக்கு முன் யாழ்.நீதிமன்றம் தாக்கிச் சேதப்படுத்தியதை மையமாக வைத்து முன்னாள் ஜனாதிபதி மாவனெல்லையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவரால் சொல்லப்பட்ட கருத்து தொக்கி நிக்குது.

அக்கூட்டத்தில் அவர் சொல்லியிருந்தார் நீதி ,நீதிமன்ற நடவழக்கையள் யாழ்ப்பாணத்துக்கொன்றும் கொழும்புக்கொன்றும் பிறமாவட்டங்களுக்கு ஒவ்வொன்றுமாக இல்லை. முழு நாட்டுக்குமே உரித்தான ஒன்றென்று இதை அவரேன் சொல்லிக்காட்ட வேணும் அது சம்பந்தப்பட்டவர்களுக்கு விளங்காமலா அல்லது மறந்து விட்டார்களென்றா?

சோழியன் குடும்பி சும்மா ஆடாதெண்டும் சொல்லுவார்கள். அவரது சகோதரர் பசில், மகன் நாமல் மனைவி சிராணி மற்றொரு சகோதரர் கோத்தா அடுத்தடுத்து தன்னையும் நீதிமன்றுக்கு இழுக்கும் வலைகள் விரிக்கப்பட்டுள்ளதை வடிவாக அறிஞ்சவர் சும்மாவா இருப்பார்? குளத்தைக் கலக்கி மீன்பிடிக்கும் உபாயத்திலொன்றாகவே அதைக்கருத இடமுண்டு.

யாழ்ப்பாண நீதிமன்றுக்கு கடந்த 20 ஆம் திகதியில் இருந்து பொலிஸ், அதிரடிப் பொலிஸ், இராணுவக்காவல் நீடிக்கப்பட்டுக்கொண்டிருக்கு . அதேவேளை பவள் கனரக வாகனங்களும் நகரவீதிகளில் உலாவருவதுடன் குறிப்பிட்ட இடங்களிலும் தரித்து நிற்கின்றன. இந்தளவுக்கு மாற்றத்தைக் கொண்டுவந்த தார்ப்பரியம் அவராக ஏன் இருக்க முடியாது .

அந்த 20 ஆம் திகதி நகரவீதிகளில் மோட்டார் சைக்கிளில் ஹெல்மெட்டுக்கள் அணிந்து மும்மூன்று பேர்களாக கூட்டம் கூட்டமாக வலம் வந்ததுகளைப் பார்த்ததும் பரமரின் மூளையில் தேர்தலுக்கு முன்பாக நீலப்படையணி சென்றவைதான் ஞாபகம் தட்டிச்சு. அந்நிகழ்வு பொலிஸ் இராணுவப் படையினரால் அடக்கப்பட்டதும் அப்பாவிகள் அகப்பட்டதும் உண்மைப் பேர்வழிகள் தப்பிக் கொண்டதும் வழமையானதே.

அம்முயற்சியால் நல்லாட்சியை குழப்ப முடியாமல் போனதும் மகிந்த அனுபவசாலியல்லவா மாவனெல்லையில் அப்படிக்கூறிப்பார்த்தார். அதுவும் சப்பெண்டு கிடக்கு. அந்தச் சொல்லின் ஆழத்தைக் கொஞ்சம் யோசிச்சுப் பாத்தியளெண்டால் 'அடேயப்பா' எண்டவரை மெச்சுவீங்க

இலங்கை பூராகவும் ஒரே நீதியெண்டால் இலங்கேலை உள்ள நீதிமன்றுகளுக்கெல்லாம் கல்லெறியலாம் சேதப்படுத்தலாமெண்டெல்லே யோசிக்க வேணும் அதையேன் செய்யச் சொல்லுறார்? மைத்திரியாரை வீட்டுக்கனுப்பத்தானோ? தீயினால் சுட்டவடு ஆறும் நாவினால் சுட்டவடு ஆறாது பாருங்கோ நமக்கேன் இந்த வம்புதும்பெல்லாம் சொல்லுங்க பாப்பம்...

# காணாமற்போனோர் விசாரணை அடுத்த கட்டம் திருமலையில்

(கொழும்பு)

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அடுத்தகட்ட சாட்சி விசாரணைகள் திருகோணமலை மாவட்டத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் நான்கு நாட்களுக்கு திருகோணமலையில் சாட்சி விசாரணைகளை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டப்ளியூ. குணதாச தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மூதூர் வெலிஓயா மற்றும் பதவியா ஆகிய பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து கிடைத்துள்ள முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் நடாத்தப் படவுள்ள விசாரணைகளில்



கந்தளாய் மற்றும் மொறவெவ பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து கிடைத்துள்ள முறைப்பாடுகளையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நுண்பாகக் கடன் சட்ட மூலம்; பொதுமக்கள் கருத்துக் கூற சந்தர்ப்பம்

100 நாள் வேலைத் திட்டத்தின் மற்றுமொரு வாக் குறுதியினை நிறைவேற்றுமுகமாக நுண்பாகக்கடன் கட்டுப்பாடு மற்றும் மேம்பாட்டுக்கான சுயாதீன அதிகாரசபையொன்றை நிறுவுவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இது சம்பந்தமான சட்டமூலம் தற்போது நுண்பாகக்கடன் சட்ட மூலம் என செயற்றிட்ட முகாமைத்துவ ஆய்வுத் திணைக்கள இணையத்தளத்தில் பிரசுரிக் கப்பட்டுள்ளது.

இச்சட்டமூலம் சம்பந்தமாக பொதுமக்களின் அவதானிப்புக்கள், கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளைப் பெற்றுக் கொள்வது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

எனவே தமது கருத்துக்களை பதிவு செய்ய விரும்புவோர் யூ.ஜீ.ரத்னஸ்ரீ - மேலதிக செயலாளர், கொள்கை உருவாக்கம்,பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசாரஅலுவல்கள் அமைச்சு, டயிம்ஸ் கட்டடம், முதலாம் மாடி, பிரிஸ்டல்வீதி, கொழும்பு 01. எனும் முகவரியிலோ அல்லது ratnasiriudalamatta @yahoo.co.uk எனும் மின்னஞ்சல் முகவரி ஊடாகவோ பொது மக்கள் தத்தமதுகருத்துக்களைப் பதிவுசெய்யமுடியும்.

மேலும் 011-3010205 மற்றும் 077-7003849 என்ற தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்வதன் ஊடாகவும் பொது மக்கள் தத்தமது கருத்துக்களை முன்வைப்பதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட் டுள்ளன.

## முதலாம் தர அனுமதி விண்ணப்பங்கள் கோரல்

அடுத்த வருடம் அரசாங்க பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கிணங்க விண்ணப்பங்களை எதிர்வரும் ஜுலை மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சு பெற்றோர்களை கேட்டுக்கொண்டுள்ளது.

தமது பிள்ளைகளை முதலாம் தரத்துக்கு அனுமதிக்கவுள்ள பெற்றோர் சுற்று நிருபத்தில் காணப்படும் விடயங்களைப் பின்பற்றி பிழையின்றி முறையாக விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து குறிப்பிட்ட தினத்திற்குள் தமது பிள்ளையை அனுமதிக்க விரும்பும் பாடசாலையின் அதிபருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கு மாறு கல்வி அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

## மாத்தறையில் தோடைக்கிராமம்


மாத்தறை- அத்துரலிய பிரதேச செயலகப்பிரிவில் தோடை கிராமம் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட டுள்ளன.கமத்தொழில் திணைக் களத்தின் அனுசரணையில் இந் நடவடிக்கை மேற்கொள்ளப் படுகிறது.

தற்போது 1500 கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் எதிர்காலத்தில் மேலும் 1500 கன்றுகள் வீதம் 3000 கன்றுகள் நட தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கு கமத் தொழில் திணைக்களத்தால் 75000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என மாத்தறை மாவட்ட கமத் தொழில் பணிப்பாளர் சுஜாத்தா வீரசிங்க தெரிவித்தார்.


49. நான்முகி ஒன்றின் முகம், விளிம்பு, உச்சி ஆகியவற்றின் எண்ணிக்கைகள் முறையே
(01).5,6,7　(02).8,10,12　(03).4.6,4　(04).5,9,12


50. ஈசான மூலைக்கு எதிரிலுள்ள திசை எது?
(01).தென்கிழக்கு　(02).தென்மேற்கு　(03).வடமேற்கு　(04).வடகிழக்கு

51.


இவ் உபகரணத்தின் பெயர் யாது?
(01).காற்று வேகமானி
(02).காற்றுத்திசைகாட்டி
(03).மழைமானி
(04).அமுக்கமானி

(13).பின்வரும் தையல்களின் பெயரை எழுதுக

52.

..............................

53.

..............................

54. ஊர் ஒன்றில் அதிகமாக இருக்கவேண்டியது எது?
(01).வீதிகள்　(02).ஆறுகள்　(03).வீடுகள்　(04).மாணவர்கள்

55. ரமணன் காலை 7மணிக்கு வீதியால் நடந்து சென்றபோது அவனது நிழல் அவனின் இடப்புறமாகத் தெரிந்தது. ஆகவே, ரமணன் சென்ற திசைக்கு எதிர்த்திசை எது?
(01).வடக்கு　(02).கிழக்கு　(03).தெற்கு　(04).மேற்கு

56. அறுபதாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா
1) மணிவிழா　2) அமுதவிழா　3) பொன்விழா

57. சிற்பம் செதுக்குபவன்
1) சிற்பி　2) ஓவியன்　3) கல்லுஞன்

58. ஒரே தடவையில் எட்டு விடயங்களினை அவதானிப்பவன்
1) அட்டவதானி　2) சதாவதானி　3) தசாவதானி

59. ஒரே வகுப்பில் ஒன்றாகப் படித்தவன்
1) சகபாடி　2) கூட்டான்　3) பெரியவன்

60. இலங்கையில் எல்லா இனமக்களும் கொண்டாடப்படும் விழா எது?
1) சுதந்திரதினம்　2) தைப்பொங்கல்
3) சித்திரை　4) ரம்ழான்

### நேற்றுமுன்தினம் பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (01)01.1 | 02.1 | 03.3 | 04.2 | 05.3 | (02)06.1 | 07.3 |
| 08.1 | 09.3 | 10.2 | 11.1 | 12.3 | 13.3 | 14.1 |
| 15.2 | (03)16.1 | 17.3 | 18.1 | 19.1 | 20.1 | 21.3 |
| 22.2 | 23.2 | 24.1 | 25.1 | 26.3 | 27.2 | 28.3 |
| 29.2 | 30.1 | 31.2 | (04)32.1 | 33.3 | (05)34.3 | 35.3 |
| 36.2 | 37.3 | (06)38.4 | 39.6 | 40.3 | 41.5 | (07)42.6 |
| 43.5 | 44.வெண்டி | | | | | |

**பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 4 பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 30 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

(01).01,02 ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் குறிப்பிடப்படும் விடயத்தை எழுதுக

01. மாணவர்களால் என்னை இலகுவாகச் செய்ய முடியும். பொருளின் விம்பத்தை நான் காட்டுவேன். நான் காட்டும் விம்பம் தலைகிழானதாகவும் உருச்சிறுத்ததாகவும் இருக்கும்
..............................

02. நான் பல்வேறு நிறங்களைக் கொண்டுள்ளேன். ஆனால் என்னில் கறுப்பு நிறம் இல்லை. நான் அழகாக இருப்பேன். சிறுவர்கள் என்னைப் பார்த்து இரசித்து மகிழ்வார்கள். என்னில் வில்லுண்டு.
..............................

(02).பின்வரும் இரு கவிதைகளையும் கொண்டு 03,04 ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக

மின்னி மின்னி ஒளிரும் அது
மின்மினிப் பூச்சி அல்ல
மஞ்சள் நிறத்தில் இருக்கும் அது
மங்கையர் சூடும் பூவும் அல்ல

சின்னச்சின்ன வண்டு
சிறகு அடிக்கும் தேனை
கமகம மலரில் தேனை
களிப்புடன் அருந்தும் வண்டு

03.1. முதலாவது பாடல் எதைப்பற்றிக் கூறுகின்றது? ..............................
2. இரண்டாவது பாடலில் களிப்புடன் என்பதன் கருத்து யாது? ..............................
04.1. இரண்டாவது பாடலில் இரட்டைக்கிளவி எது? ..............................
2. புஷ்பம் என்பதன் ஒத்தசொற்கள் இரண்டும் எவை? ..............................

(03).பின்வரும் பந்தியிலுள்ள வெற்றிடங்களுக்கு மிகவும் பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து வெற்றிடங்களை நிரப்புக.

05. வேட்டைக்குச் சென்ற அவன் தனித்து விடப்பட்டான்.01. .............................. (நல்லிரவு, நள்ளிரவு, நழ்ளிரவு) வேளை புலியின் உறுமலும் சிங்கத்தின் 02. .............................. (கர்ச்சனையும், உறுமலும், சீறலும்) காட்டை அதிரவைத்தன.

(04).கீழ்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

ஊக்கமும் விடாமுயற்சியும் வெற்றிக்கு ஏணிப்படிகள் இன்று நம் வீடுகளில் மின்விளக்குகள் எரிகின்றன. ஒன்றரை நூற்றாண்டுக்குமுன் இந்த மின்விளக்குகள் நம்மிடையே இல்லை. தோமஸ் அல்வா எடிசன் என்பவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மின்விளக்கைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்தார். தமது முதல் முயற்சியிலே தோல்வி கண்டார். சளைக்காது தனது ஆய்வைத் தொடர்ந்தார். பலமுறை தோல்வியைக் கண்ட அவர் இறுதியிலே தம் ஆராய்ச்சியில் வெற்றி கண்டார். மின்விளக்கு எரியத் தொடங்கியது. "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கு இணங்க வெற்றி பெற்றார். அல்லும் பகலும் முயற்சி செய்ததமையாலேயே இவர் வெற்றி பெற்றார். இன்று இல்லங்களிலே மின்விளக்குகள் எரிய முன்னோடியாகத் திகழ்ந்த அறிவியல் மேதை தோமஸ்அல்வா எடிசன் ஆவார்.

06. யாருடைய சாதனை பற்றி இங்கு கூறப்பட்டுள்ளது? ..............................
07. வெற்றிக்கு ஏணிப்படிகள் எவை? ..............................
08. மின்விளக்கு கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி எப்போது தொடங்கப்பட்டது? ..............................
09. பலமுறைகள் தோல்வியைக் கண்டாலும் இறுதியில் வெற்றிகான உதவியது எது? ..............................
10. இங்கு இடம்பெற்ற மேற்கோளாக அமையும் கூற்றி யாது? ..............................
11. இங்கு இடம்பெற்றுள்ள இணைமொழிச் சொல் எது? ..............................

(05).ஒத்தசொல் தருக
12. இரவு:- ..............................　13. வீடு:- ..............................

(06).எதிர்ச்சொல் தருக

14.வெற்றி:-.............................. 15.ஊக்கம்:-..............................

16. "முயற்சி திருவினையாக்கும்" இதன் கருத்து யாது? ..............................

17. இங்கு இடம்பெற்றுள்ள உயர்திணை, ஆண்பால், பெயர்ச்சொல் ஒன்று எழுதுக? ..............................

(07).பின்வரும் தொடர்கள் ஒவ்வொன்றும் வெளிப்படுத்தும் கருத்தை எழுதுக

18. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் ..............................

19. தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும் ..............................

(08).பொருத்தமான இடத்தில் நிறுத்தற்குறிகளை இடுக.

20. ஆந்தைக்கு இரவில் கண் தெரியுமா என்று கேட்டார்

21. உங்களது சொர்க்கத்துக்குப் போக விரும்புகிறவர்கள் எழுந்து நில்லுங்கள் என்றார்

(09).அடைப்பினுள் இருக்கும் சொற்களை மாத்திரம் பயன்படுத்தி சரியான கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்கள் இடம்பெற வேண்டும். ஒரு சொல்லை ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்துக.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| தம்பி | வானில் | பாடங்களைப் | மரம் | சூரியன் | உதித்தது |
| தொடங்கினான் | மெல்ல | மாலைக் | கிழக்கு | படிக்கத் | இருந்தது |
| மிகவும் | காட்சி | அழகாக | அழகிய | | |

22. ..............................

23. ..............................

24. ..............................

25.1. This is a ..............................



2.காலை வணக்கம் என்பதற்குரிய ஆங்கிலச்சொல் எழுதுக?

..............................

(10) வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக

26. "தயவுசெய்து உங்கள் புத்தகத்தை எனக்குத் தாருங்கள"

..............................

(11).27,28,29 ஆகிய வினாக்களில் உள்ள வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக

27. I will bring stamps? ..............................

28. அம்மா உயல இவறத? ..............................

29. பிரகஸ்பதின்தா ..............................

(12).30 - 51 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடு இடுக.

30. நீருடன் நன்கு கலக்கக் கூடியது திரவம் எது?
(01).மண்ணெண்ணெய் (02).வினாகிரி (03).பெற்றோல் (04).தேங்காயெண்ணெய்

31. நெத்தலியை உண்பதால் உடலுக்குக் கிடைக்கும் போசணைப்பொருள் எது?
(01).புரதம் (02).கொழுப்பு (03).விற்றமின் A (04).கல்சியம்

32. பின்வருவனவற்றுள் இரவில் இலை சுருங்கும் தாவரம் எது?
(01).முருங்கை (02).தாமரை (03).கறிவேப்பிலை (04).அகத்தி

33. தொல்பொருள் பெறுமதி மிக்கதாகவும் கலைத்துவப் பெறுமதி மிக்கதாகவும் உள்ள இடம் எது?
(01).நீரிழிவு (02).கண்டமாலை
(03).யானைக்கால் (04).தொண்டைக்கரப்பான்

34. பூக்களின் உட்பாகங்கள் நிரப்பப்பயன்படும் தையல் எது?
(01).அடைப்புத்தையல் (02).நரம்புத்தையல் (03).சோம்தையல் (04).சங்கிலித்தையல்



35. மஞ்சள் நிறத்தையும் நீலநிறத்தையும் கலக்கும் போது உருவாகும் நிறம் என்ன?
(01).பச்சை (02).சிவப்பு (03).மஞ்சள் (04).கறுப்பு

36. இலங்கை சுதந்திரமடைந்த ஆண்டு எது?
(01).1.2.1948 (02).4.2.1948 (03).3.5.1972 (04).4.6.1976

37. நாடளுமன்றத்தில் சுற்றி ஓடும் ஆறு எது?
(01).மகாவலி கங்கை (02).களு கங்கை (03).மாணிக்க கங்கை (04).தியவன்ன

38. தாதுசேனன் கட்டுவித்த குளத்தின் பெயர் என்ன?
(01). மின்னேரியாக்குளம் (02).பராக்கிரமபாகு (03).கலாவாவி (04).திஸாவாவி

39. இலங்கையை சுனாமி தாக்கிய ஆண்டு எது?
(01).2006.12.26 (02).2004.12.20 (03).2004.10.24 (04).2004.12.26

40. பின்வருவனவற்றுள் விலங்கால் பரவும் வித்து எது?
(01).துத்திரிப்புல் (02).முருங்கை (03).வேங்கை (04).அல்லி

41. ஆடையிற் படிந்த தார்க்கறையை நீக்குவதற்கு உகந்தது எது?
(01).வெந்நீர் (02).மதுசாரம்
(03).எலுமிச்சம்பழச்சாறு (04).மண்ணெண்ணெய்


42. தாய்ப்பூனை குட்டியை வாயால் தூக்கிச் செல்லக் கௌவுவது குட்டியின்
(01).பாதங்களை (02).காதுகளை (03).கழுத்துப்பகுதியை (04).கால்களை

43.




இக்குறியீடு குறித்து நிற்பது
(01).வாகனங்களை மறுக்க வேண்டாம்
(02).பாதுகாப்பற்ற புகையிரதக்கடவை
(03).பாதசாரிகளுக்கான கடவை
(04).முன்னே வலப்பக்க வளைவு உண்டு

44. தரப்பட்டுள்ள உருவில் உள்ள காந்தத்தின் பெயர் யாது?
(01).சட்டகாந்தம் (02).பரியிலாடக் காந்தம்
(03).ஊசிவடிவக்காந்தம் (04).குண்டுமுனைக்காந்தம்




45. துருப்பிடித்த ஆணி குத்தியவருக்கு தாமதமின்றிக் கொடுக்கக்கூடிய மருந்து எது?
(01).கொத்தமல்லி (02).மரமஞ்சள் (03).வில்வம்பூ (04).ஆவரசம் பூ


46.



இவ் உபகரணத்தின் பெயர் யாது?
(01).மின்குமிழ்
(02).மின்காந்தம்
(03).மின் இணைப்பு
(04).தொடர்இணைப்பு

47.பௌர்ணமி தினம் தோன்றி 8ஆம் நாள் வருவது?
(01).அட்டமி (02).பௌர்ணமி (03).அமாவாசை (04).தசமி

48.



இங்கு சூரியஒளி உள்ள வேளையில் கிளையைப் பொலித்தீன் உறை ஒன்றினுள் இட்டு அதன் வாயைக் கயிற்றினால் இறுக்கட்டிவைத்துச் சில மணித்தியாலங்களின் பின் உறையினை அவதானிக்கும் போது பின்வரும் செயற்பாடு நடைபெற்றது. இங்கு நடைபெற்ற செயற்பாடு
(01).ஒளிமுறிவு
(02).ஒளித்தொகுப்பு
(03).ஒளிகடத்தல்
(04).ஒளித்தெறிப்பு

# பிரதமருக்கு எதிரான பிரேரணை தோல்வியை தழுவிக்கொள்ளும்

## - நிதியமைச்சர் நம்பிக்கை -

-பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை தோல்வியடையும் என நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

CNBC ஊடகத்திற்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நாட்டின் துரித பொருளாதார வளர்ச்சி நம்பிக்கையில்லா பிரேரணையில் இருந்து தங்களை மீட்கும் எனினும் நிலையற்ற அரசியல் தன்மை பங்குச்சந்தையின் குறியீட்டெண் மீது அழிவை தோற்றுவித்துள்ளது பெரும்பான்மை அற்ற மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் நம்பிக்கையில்லா பிரேரணையால் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றது

நம்பிக்கையில்லாப் பிரேரணையின் பின்னணியில் தோல்வியடைந்த முன்னாள் ஜனாதிபதி இருக்கின்றார் ஆனால் மக்கள் எதிர்பார்த்த அளவு



நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து வருகின்றது

தற்போதைய அரசாங்கம் இந்தியா மற்றும் மேற்குலகுடன் சிறந்த உறவைப் பேணி வருவதால் பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைந்து செல்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மகிந்தவின் சூழ்ச்சிப்பொறியில் நாட்டை சிக்கவைக்கக் கூடாது

## - சோமவன்ச அமரசிங்க வேண்டுகோள் -

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சூழ்ச்சிப் பொறியில் நாட்டை மீளவும் சிக்கவைக்கக் கூடாது என ஜே.வி.பி கட்சியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவி வரும் ஸ்திரமற்ற தன்மையை நீக்குவதற்கு முற்போக்கு சக்திகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இந்த முற்போக்கு சக்திகள், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மகிந்தவை தூக்கிச் செல்லும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்கமற்ற தரப்பை தோற்கடிக்க வேண்டும்.

அரசியலமைப்பு திருத்தங்களின் ஊடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் முயற்சிகளுக்கு தோல்வியடைந்த தரப்



புக்கள் எவ்வளவு அழுத்தங்களை பிரயோகித்தன என்பது வெட்ட வெளிச்சமாகியிருந்தது.

ராஜபக்ஷவின் சூழ்ச்சிகளில் நாடு சிக்குவதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

போராட்டத்தை முன்னெடுக்கக் கூடிய முற்போக்கு சக்திகளை ஒன்றிணைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

# மகிந்த ராஜபக்ஷவுக்கு விசேட பாதுகாப்பு அவசியம்

## - ஊடக பிரதியமைச்சர் வலியுறுத்து -

(கொழும்பு)

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் தலைமைத்துவம் வழங்கியமையைக் கருத்தில் கொண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என ஊடகத்துறை பிரதியமைச்சர் சாந்த பண்டார கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். முன்னாள் அரச தலைவர்களைவிட மகிந்த ராஜபக்ஷவுக்கு அச்சுறுத்தல் அதிகமாக இருப்பதால் அவருடைய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்

நாட்டில் நிலவிய பயங்கரவாதத்தை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டுவந்தவர் என்பதால் பல தரப்புக்களிலிருந்து அவருக்கு அச்சுறுத்தல் உள்ளது. எனவே அரசாங்கத்தின் பாதுகாப்புப் பிரிவு அவருடைய பாதுகாப்புத் தொடர்பில் கூடுதல கவனம் செலுத்த வேண்டும் என்றும் பிரதியமைச்சர் கோரிக்கை விடுத்தார்.

# பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறைப்பு பிரதமர் ரணிலின் திட்டமே

## - மனோகணேசன் குற்றச்சாட்டு -

(கொழும்பு)

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் குறைத்தது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டமே என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

125 தொகுதிகள், 75 மாவட்ட விகிதாசாரம், 25 தேசிய விகிதாசாரம் என்ற அடிப்படையில் 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனும் நிலையை முற்றாக நிராகரிக்கின்றோம் மனோகணேசன் கடந்த திங்கட்கிழமை மாலை வரை கூறப்பட்ட கணக்கு வேறாக அமைந்திருந்தது

அத்துடன், நுவரெலியா மாவட்டத்திற்கு 4 தனித் தொகுதிகள் தேவை என்றும் கொழும்பு, பதுளை, கண்டி, இரத்தினபுரி, கம்பஹா மாவட்டங்களில் வாழக்கூடிய தமிழ் மற்றும் முஸ்லிம்களுக்குத் தேவையான பல்அங்கத்தவர் தேர்தல் தொகுதி




தேவை என்றும் தாம் கோரியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நண்பகலில் 255 பிரதிநிதிகள் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருந்தபோதும் மாலை வேளையில் 225 ஆகக் குறைக்கப்பட்டமை பிரதமரின் யோசனை ஆகும் அதுபற்றிய ஆட்சேபனையைத் நாம் ஏற்கனவே தெரிவித்திருந்தோம் என்றார்

# மக்களின் கனவை புதிய ஆட்சி தவிடுபொடியாக்கி விட்டது

## - செல்வம் அடைக்கலநாதன் புலம்பல் -



(கொழும்பு)

புதிய ஆட்சியில் எமது மக்களின் கனவும் தவிடுபொடியாகிவிட்டது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தின அமர்வின்போது இடம்பெற்ற அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின் மீதான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாம் மகிந்த அரசாங்கத்தையும் வெளிப்படையாக விமர்சித்திருந்தோம். புதிய ஆட்சி மலர்ந்திருக்கின்ற போதிலும் எமது மக்களுக்கு எந்த நன்மையும் கிட்டவில்லை. அதேபோன்று புதிய அரசாங்கத்தின் வெற்றிக்கு காரணமானவர்கள் என்ற வகையில் எமக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாய் மூடியதாகவும் வல்லமையற்றும் இருந்துவிடப் போவதில்லை.

இன்றைய ஆட்சி குறித்து இன்று பேசுகின்றவர்கள் அனுராதபுரச் சிறைச்சாலையில் ஒருவர் கொல்லப்பட்டார். அந்தத் தருணத்திலும் போரின்போது இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் காணாமற்போன போதும் இவர்கள் எதுவும் பேசவில்லை. ஆனால் நாம் அன்றும் எமது மக்களுக்காக குரல் கொடுத்தோம் இன்றும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

காணாமற்போனோர் தொடர்பில் எமது உறவுகள் ஒரு வேளை உணவைக்கூட நிம்மதியாக உண்பதற்கு முடியாதவர்களாக உள்ளனர். இன்றும் சிறைச்சாலைகளுக்குச் சென்று தமது உறவுகளைத் தேடி வருகின்றனர். இவ்வாறு தேடப்படுபவர்கள் இருக்கின்றனரா இல்லையா என்பது குறித்து அரசாங்கம் கூறவேண்டும். காணாமற்போனவர்கள் தொடர்பில் முன்னைய அரசாங்கத்திலும நியாயம் கிடைக்கவில்லை. புதிய அரசாங்கத்திலும் கனவு தவிடு பொடியாகிவிட்டது. என்றார்.

# போதைப்பொருள் வைத்திருந்த மூதாட்டிக்கு கடூழிய ஆயுள்சிறை

போதைப்பொருள் வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்ட 76 வயது மூதாட்டிக்கு மேல் மாகாண மேல் நீதிமன்றம் கடூழிய ஆயுள் தண்டனை விதித்து நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தது.

4 கிராம் 77 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த மூதாட்டி கைது செய்யப்பட்டதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

2009ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட மூதாட்டி, ஒரு வருடமும் எட்டு மாதமும் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

தொடர்ந்து இடம்பெற்று வந்த வழக்கு விசாரணையின் தீர்ப்பு மேல் நீதிமன்ற நீதியரசர் லலித் ஜயசூரியவினால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

இதன்போதே மூதாட்டிக்கு கடூழிய ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

மாளிகாவத்தை, கெத்தாராம பிரதேசத்தைச் சேர்ந்த சம்சூதீன் சம்சூன் நைமா என்ற மூதாட்டிக்கே ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கும் மூதாட்டிக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென மூதாட்டியின் தங்கையின் மகள் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

வழக்கு விசாரணை நிறைவின் பின்னர் ஊடகவியலாளர்களுடன் பேசிக்கொண்டிருந்த குறித்த மூதாட்டியின் தங்கையின் மகள் குறிப்பிடுகையில்-

“எமது எதிர வீட்டார் வெளியே செல்லும்போது சாவியை எமது வீட்டில் கொடுத்து விட்டுச் சென்றுள்ளனர். அந்தச் சந்தர்ப்பத்தில பெரியம்மா மட்டுமே வீட்டில் இருந்தார். இதன்போது வந்த பொலிஸார முன்வீட்டில் யார் இருக்கின்றனர் என்று விசாரித்துள்ளனர். அவர் யாருமே இல்லையெனக் கூறியுள்ளார். எனினும் சாவி இருப்பதாகக் கூறியுள்ளார்.

சாவியை எடுத்துச் சென்ற பொலிஸார் முன் வீட்டை சோதனையிட்டுள்ளனர். இதன் போதே போதைப்பொருள் மீட்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.





முன்னாள் பிரதமர்களான டீ.எம்.ஜயரத்ன மற்றும் ரத்னசிறி விக்ரமநாயக்க ஆகிய இருவரும், அரசியல் விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால், நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டன.

# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

**FACULTY OF ENGINEERING**

**Senior Professor/Professor** in Electrical & Electronic Engineering

**Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary)** in Electrical & Electronic Engineering/Computer Engineering/ Engineering Mathematics/Mechanical Engineering/ Civil Engineering

**Temporary Instructor** in Civil Engineering / Computer Engineering / Electrical and Electronic Engineering / Mechanical Engineering / Engineering Mathematics

Note:

1. The candidates for Temporary Instructor are expected to conduct the engineering laboratories covering all specializations of Civil and Environmental Engineering, Electrical and Computer Engineering, Mechanical and Process Engineering.
2. Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the post of Temporary Instructor.

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.67,100 - 11x1425 - 82775/-p.m |
| Professor | Rs.56,505 - 13x1310 - 73535/-p.m |
| Senior Lecturer Grade I | Rs.45,545 - 7x1050 - 52895/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.39,755 - 11x790 - 48445/-p.m |
| Lecturer (Probationary) | Rs.27,775 - 10x645 - 34225/-p.m |
| Temporary Instructor | Rs. 21,370/- fixed per month |

Note:

In addition to the above salary, the following allowances will also be paid for academic staff:

i. Academic allowance - Senior Professor -135% of the basic salary
Professor - 130% of the basic salary
Senior Lecturer Gr. I /Gr. II - 120% of the basic salary
Lecturer (Probationary) - 85% of the basic salary

ii. Further 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff

iii. Special allowance -20% of the basic salary

iv. Additional Monthly Allowance-20% of the basic salary and Interim Allowance- Rs.10,000/- p.m (other than Temporary Instructor )

v. Cost of living allowance - Rs.7,800/-p.m

(2)

**Statutory benefits:**

i) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
iii) Gratuity payments
iv) Employees' Trust Fund benefits
v) Free Medical Services.

**Closing Date:**

| | |
|---|---|
| **Temporary Instructor** | : 26.06.2015 |
| **Post of Senior Professor/Professor** | : 10.09.2015 |
| **Other Posts** | : 10.07.2015 |

Applications and other documents for the Post of Senior Professor/ Professor shall be sent to the **Vice-Chancellor** with the covering letter. Applications for the other posts shall be sent to the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Thirunelvely, Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order for Rs.100/- drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self - addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
**11.06.2015**

(C/3869)

# மியான்மார் அல்ல பாகிஸ்தான் பகல்கனவுகாண்பதை நிறுத்துங்கள்

## இந்தியாவுக்கு எச்சரிக்கை

(மணிப்பூர்)

மணிப்பூரில் இந்திய இராணுவத்தினர் மீது பயங்கரவாதிகள் நடாத்திய தாக்குதலில் இராணுவ வீரர்கள் 18 பேர் கொல்லப்பட்டனர். அந்த பயங்கரவாதிகள் மியான்மார் எல்லையில் பதுங்கி இருப்பதை அறிந்த இந்திய இராணுவம், மியான்மார் எல்லைக்குள் புகுந்து பயங்கரவாதிகள் முகாம் மீது அதிரடித் தாக்குதல் நடாத்தியது. இதில் 100 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.


மியான்மாரில் நடாத்தப்பட்ட தாக்குதல் குறித்து இந்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சர் ராஜ்யவர்தன் சிங் ரத்தோர் கூறுகையில், மணிப்பூரில் இந்திய இராணுவத்தினர் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியே மியான்மாரில் பயங்கரவாத முகாம் மீது இந்தியா வின் தாக்குதல். இது மற்ற நாடுகளுக்கு இந்தியா வீடுக்கும் எச்சரிக்கை என தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்துள்ள பாகிஸ்தான் அமைச்சர் நிசார் அலிகான் : மியான்மாரில் நடந்ததைப் போல பாகிஸ்தானிலும நடத்தலாம் என இந்தியா பகல் கனவு காணக்கூடாது. இது பாகிஸ்தான். மியான்மார் அல்ல. பாகிஸ்தானை இந்திய மியான்மார் என்று நினைத்து விடக் கூடாது. எல்லை தாண்டி எந்தப் படை வந்தாலும் பாகிஸ்தான் படைகள் தக்க பதிலடி கொடுக்கும். எனவே இது தொடர்பாக இந்தியாவும், இந்தியர்களும் பகல் கனவு காண்பதை நிறுத்த வேண்டும்.

பாகிஸ்தானுக்கு எதிராக வெறுப்பை பரப்புவோர் தங்களது கண்களையும், காதுகளையும் நன்றாகத் திறந்து வைத்துக் கொள்ள வேண்டும். பாகிஸ்தான் இராணுவம் எத்தகைய சூழ்நிலைக்கும் தயாராகவே உள்ளது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். பாகிஸ்தான் அமைதியை விரும்புகிறது என்பதை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும். அதேசமயம் இந்தியா ஆதிக்கம் செலுத்துவதை பாகிஸ்தான் ஒருபோதும் ஏற்காது என்றார்.

உலகச் செய்திகள்

# சிறார் மீதான துஷ்பிரயோகங்களை உதறித்தள்ளினால் நடவடிக்கை
## ஆயர்களை விசாரிக்க குழு



கத்தோலிக்க திருச்சபையில் சிறார்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களை மூடி மறைக்கவோ அல்லது தடுக்கவோ தவறும் ஆயர்கள் மீதான புகார்களை விசாரிக்க புதிய பிரிவு ஒன்றை போப் பிரான்சிஸ் ஏற்படுத்துகிறார்.

இந்த சீர்திருத்தத்தை நீண்ட காலமாகவே பாதிக்கப்பட்டவர்களின் சார்பான குழுக்கள் கோரி வந்தன.

அதுமட்டுமன்றி சிறார் மீதான பாலியல் துஷ்பிரயோகம் குறித்து விசாரித்த குழுவும் அதை பரிந்துரைந்திருந்தது.

தமது கடமைகளைச் செய்யத் தவறும் ஆயர்கள் மீது நடவடிக்கை எடுக்க, கத்தோலிக்கத் திருச்சபையின் சட்டங்களில் இடமுள்ளது.

எனினும் பாலியல் துஷ்பிரயோகத்தை மூடி மறைத்தவர்கள் எவரையும் இது வரை வத்திக்கான் தண்டித்தது இல்லை.

இனி சிறார்கள் மீதான துஷ்பிரயோகங்கள் குறித்த வழக்குகளை உதாசீனம் செய்யும் ஆயர்கள் மீது நடவடிக்கை எடுக்க சிறப்பான வழிமுறை ஒன்று உள்ளது என்று போப்பின் பேச்சாளர் பெட்ரிக்கோ லொம்பார்டி தெரிவித்துளார்.

# நிர்வாண புகைப்படமா நில நடுக்கத்திற்கு காரணம்
## கைதானார் இங்கிலாந்து பெண்



மலேசியாவில் ஏற்பட்ட நில நடுக்கத்திற்கு இங்கிலாந்து பெண்ணின் நிர்வாண புகைப்படம் தான் காரணம் என கூறி அவர் கைது செய்யப்பட்டுள்ளது கடும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

24 வயது சவுத்தாம்ப்டன் பல்கலைக்கழக பட்டதாரியான எலினார் ஹாக்கின்ஸ் ஜனவரி மாதம் முதல் தனியாக தாய்லாந்து, கம்போடியா, லாவோஸ், வியட்நாம் ஆகியநாடுகளுக்கு பயணம் செய்து வருகிறார். இனிமையான இந்தப் பயணத்தின் ஒரு பகுதியாக மே மாதம் 30ஆம் திகதி மலேசியாவில் உள்ள மிக உயரமான கிணபாழு சிகரத்தில் ஏறினார். உச்சியை அடைந்ததும் தன்னுடன் வந்த குழு "வினருடன் சேர்ந்து உடைகளை களைந்துவிட்டு நிர்வாண மாக புகைப்படம் எடுத்துக் கொண்டுள்ளனர்.

ஆனால் தற்போது அதுவே அவருக்கு பெரிய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. கடந்த வாரம் கிணபாழு சிகரத்தில் சக்திவாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. இதில் பலர் உயிரிழந்தனர். இந்த நில நடுக்கத்திற்கு இங்கிலாந்து பெண் நிர்வாணமாக புகைப்படம் எடுத்தமையே காரணம் என பொலிசில் புகார் கொடுக்கப்பட்டதை அடுத்து அவர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். அவருடன் இன்னும் 3 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# புகைத்தல் எதிர்ப்பு நடவடிக்கை கிளிநொச்சியில் போராட்டம்

புகைத்தல் மற்றும் மதுபான ஒழிப்பு நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்து, நேற்று கிளிநொச்சியில் கவன ஈர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி முருகானந்தா கல்லூரி மாணவர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்ட கவன ஈர்ப்பு போராட்டத்தில் பாடசாலை சமூகம் இணைந்து கொண்டது. காலை 9 மணியளவில் முன்னெடுக்கப் பட்ட குறித்த கவன ஈர்பு நடவடிக்கையில் புகைத்தல் மற்றும் மதுபான பாவணையை கட்டுப்படுத்தும் வகையில் மாணவர்களால் பரந்தன் முல்லைத்தீவு வீதியில் கவன ஈர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது, கவன ஈர்ப்பு நடவடிக்கையினை தொடர்ந்து பாடசாலை மாணவர்கள் பாடசாலை சுற்றிலும் உள்ள வீடுகளிற்கு சென்று புகைத்தல் மதுபான பாவனையால் ஏற்படும் விளைவுகள் தொடர்பிலும், அவற்றை கட்டுப்படுத்துவது தொடர்பிலும் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் வீடு சந்திப்புக்களை மேற்கொண்டனர். (29)

# ஆட் கடத்தல் காரருக்கு பணம் வழங்கவில்லை

## ஆஸி. அரசு மறுப்பு

சட்டவிரோத ஆட்கடத்தல்காராகளுக்கு பணம் வழங்கவில்லை என அவுஸ்ரேலியா அறிவித்துள்ளது. அவுஸ்ரேலிய வெளி விவகார அமைச்சர் ஜூலி பிசொப் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

புகலிடக் கோரிக்கையாளர்களை திருப்பி அனுப்பி வைப்பதற்காக சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களுக்கு சுங்கத் திணைக்கள அதிகாரிகள் ஆயிரக் கணக்கான டொலர்களை வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

படகில் பணியாற்றியவர்கள்க்கு தலா 5000 அமெரிக்க டொலர் வழங்கப்பட்டதாகவும், புகலிடக் கோரிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறெனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை எனவும் சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களுடன் தொடர்பு பேணவில்லை எனவும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### ஈரானிடம்...

டொலர் பெறுமதியான ஒரு மில்லியன் பரல் எண்ணெயை ஏற்றிய பனாமா கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்துக்கு வந்திருப்பதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றில் செய்தி வெளியாகியிருந்தது.

இதற்கு அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்த நிலையில், கப்பலில் இருந்து எண்ணெய் இறக்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், அதில் கூறப்பட்டிருந்தது.

இந்தநிலையில் கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில், இந்தச் செய்தியை முற்றாக நிராகரித்துள்ளார் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹேஷினி கொலன்னே.

இதுகுறித்து அவரிடம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், நாளிதழ் ஒன்றில் இந்தச் செய்தியை பார்வையிட்டோம். இது முற்றிலும் தவறானது.

இலங்கை எப்போதுமே தடைகளை மதித்து நடந்து வருகிறது. பனாமா கொடி தாங்கிய எவ்-வேல் என்ற கப்பல், கடந்த 5 ஆம் திகதி எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக கொழும்புத் துறைமுகத்துக்குள் பிரவேசித்தது.

இந்தக் கப்பல் ஈரானிய எண்ணெயை ஏற்றி வுந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. ஆனால், இந்தக் கப்பல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு எண்ணெய் ஏற்றி வரவில்லை என்பதை உறுதிப்படுத்த முடியும்.

இந்தச் செய்தி தவறாக வழிநடத்தும் நோக்கம் கொண்டது. அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் பிரச்சினையை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

### சிறிய...

தமிழ், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மற்றும் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த சில கட்சிகள் உள்ளிட்ட 18 கட்சிகள் பங்கேற்ற விசேட கலந்துரையாடல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்யும் புதிய தேர்தல் முறைமைக்கு எதிர்ப்பு வெளியிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்பின்னர், இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அரசாங்கம் கொண்டுவரவுள்ள புதிய தேர்தல் முறைமைக்கு எதிர்ப்பினை வெளியிடுவதாக 18 கட்சிகளும் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளன.

மேலும், இந்தக் கலந்துரையாடலில் ஒரு வாக்காளர் இரு வாக்குகளை அளிப்பதற்கான முறைமையை அறிமுகப்படுத்துமாறும் அரசாங்கத்திற்கு குறித்த கட்சிகள் ஆலோசனை வழங்கியுள்ளன.


அதேவேளை, அரசியல் கட்சிகள் பொதுவாக உடன்பட்டுக் கொண்ட யோசனைகளுக்குப் புறம்பாக, வேறு ஒரு யோசனையைக் கொண்டு வந்து அமைச்சரவையில் நிறைவேற்றிக் கொள்ள அரசாங்கத்துக்குள்ள உண்மையான தேவை என்ன? என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் நேற்று கேள்வி எழுப்பின.

20 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் கட்சிகள் உடன்பட்ட யோசனைக்குப் புறம்பாக வேறு ஒரு யோசனைக்கு அமைச்சரவை கடந்த 8 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கியது. அரசாங்கத்துக்கு இவ்வாறு கொண்டுவருவதற்குள்ள மறைமுகத் தேவை என்ன? என்பதை யோசிக்க வேண்டியுள்ளது.

அமைச்சரவை நிறைவேற்றியுள்ள யோசனையை ஏற்றுக் கொள்ள முடியாது. அது பிரச்சினைக்குரியது. ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பல குழுக்களாக பிரிந்துள்ள நிலையில் கொண்டுவரும் யோசனை என்ன வகையானது என்பது தெளிவில்லாதுள்ளது.

சகல கட்சிகளினதும் கருத்துக்களையும் யோசனைகளையும் கருத்தில்கொண்டு அனைத்துக் கட்சிகளும் உடன்படுகின்ற, மக்கள் விரும்பும் ஜனநாயகத் தன்மை வாய்ந்த நீதியான ஒரு புதிய தேர்தல் முறைமையை கொண்டுவர வேண்டும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# அம்பாறையில் மாணவர்கள் போராட்டம்




அம்பாறை - பெரிய நீலாவணை பாடசாலையின் விளையாட்டு மைதானமாக பயன்படுத்தப்பட்டுவரும் காணியை அபகரித்து அத்துமீறி குடியேறும் நோக்குடன் முஸ்லிம்கள் எடுக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டனப் பேரணியொன்று நடைபெற்றது.

நேற்றுக் காலை பாடசாலைக்கு முன்னால் இந்தக் கண்டனப் பேரணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இக்கண்டனப் பேரணியில் பெரியநீலாவணையிலுள்ள ஆலயங்களின் உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், விளையாட்டுக் கழகங்கள், பொது அமைப்புக்கள், மற்றும் ஏனைய சமூகமட்ட அமைப்புக்கள் எனப் பல அமைப்புக்களும் கலந்து கொண்டன.

இங்கு பேரணியாக சென்றவர்கள் தங்களது கைகளில் பாடசாலை காணியை அபகரிக்காதே, மைதானம் ஒன்றை பெற்றுத் தாருங்கள், பாடசாலை காணியை வேற்று அமைப்பு ஆக்கிரமிப்பதனை தடுத்து நிறுத்து, போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு பேரணியில் கலந்து கொண்டனர்.

### முன்னாள்...

மூத்த தலைவர்களான இவர்கள், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பக்கம் சாய்வதைத் தடுக்கும் ஒரு நகர்வாகவே, இவர்களை தனது ஆலோசகர்களாக நியமித்துள்ளதாக கருதப்படுகிறது.

### கைது...

லையில் எடுத்துக்கொள்ளப் பட்டது. இதன்போதே மேற்படி தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நிதி மோசடி தொடர்பில் டிரான் அலஸ் தொடர்புபட்டிருக்கிறார் எனத் தெரிவித்து அது தொடர்பாக நீதிமன்றில் விசாரணை நடைபெற்று வருகின்றமை தெரிந்ததே.

### இறுதி..

இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அரசாங்க தரப்பிற்குள் பல கருத்துக்கள் காணப்படுவதாகவும் கடந்த ஆட்சியிலும் இதே நிலை இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றம் இன்றோ இல்லை நாளையோ கலைக்கப்பட மாட்டதெனவும் அதற்குள் மேலும் பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்பட மாட்டார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

### ஓய்வூதிய...

ஓய்வுபெற்ற ஊழியர்களது ஓய்வூதியத்தை அந்தத் திகதியிலிருந்து அமுலாக்கப்பட்ட 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் படியான அடிப்படையில் மீளாய்வு செய்வதை வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் உள்ளடக்கப்படவேண்டும் என்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு முன்னாள் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டது.

2015ஆம் ஆண்டி புதிய சம்பளக் கட்டமைப்பின் அடிப்படையில் முரண்பாடுகளை முழுமையாக நீக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தமது வரவு செலவுத் திட்ட உரையில் தெரிவித்திருந்தார். எனினும் புதிய சம்பளக் கட்டமைப்பு 2015 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்படாமையால் ஓய்வூதிய முரண்பாடுகளைத் தீர்க்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தற்போதைய அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஓய்வூதிய முரண்பாடுகள் தீர்க்கப்படும் வரை அவர்களுக்கு ஓர் இடைக் காலப் படியாக 3 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டது. குறிப்பிட்டபடி இடைக்கால படியொன்றை வழங்கியமைக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எனினும் முரண்பாடுகளை நீக்குவதற்கு எந்தவித நடடிவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஆகவே நீண்டகாலமாக தொடர்ந்திருக்கும் ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்குவதற்கு தாங்கள் எடுக்கும் துரித நடடிவடிக்கை நாடுபூராகவும் உள் சகல ஓய்வூதியர்களும் நன்றி பாராட்டுவார்கள் என்றுள்ளது.

இதேவேளை, இந்தக் கடிதத்திற்கு 03.06.2015 ஆம் திகதி கடிதம் மூலம் பதிலெழுதிய பொது நிர்வாக உள்ளூராட்சி மற்றும் உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக ஆட்சிமுறை அமைச்சர் கரு ஜெயசூரிய இந்த விடயம் தற்போதைய அரசின் கவனத்தில் இருப்பதாகவும் காலப்போக்கில் இது பற்றிய அறிவித்தல் வெளியிடப்படும் எனத் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### அரசின்...

இங்கு எடுக்கும் முக்கியத்துவம், இந்தத் தென்னிலங்கை அரசியலிலே காட்டப்படும் முக்கியத்துவம் வடக்குக் கிழக்குத் தமிழர்களுக்குக் காட்டப்படாது புறக்கணிக்கப்பட்டிருக்கின்றார்கள். நேற்று நாடாளுமன்றில் நடைபெற்ற அரசின் 100 நாள் வேலைத்திட்டம் தொடர்பான ஒத்திவைப்புப் பிரேரணையில் உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


மேலும் அவர் உரை நிகழ்த்தும் போது.

அரசின் 100 நாள் வேலைத்திட்டம் தொடர்பான இன்றைய ஒத்திவைப்புப் பிரேரணையில் பேசுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தமைக்காக நான் மகிழ்ச்சியடைகின்றேன். கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இந்த நாட்டிலே ஓர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதற்கு நல்லாட்சி என்று பெயர் சூட்டப்பட்டது. இந்த ஆட்சி மாற்றம் தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தைத்தான் தந்திருக்கின்றதெனக் குறிப்பிட வேண்டும். இந்த மாற்றம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை சிதைத்திருக்கின்றது. கடந்த ஆட்சியில் கிடைக்காததெல்லாம் இந்த மாற்றத்தினூடாக தமிழ் மக்களுக்கு கிடைக்கப்போகின்றதென்ற பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த மாற்றத்திற்காக தமிழ் மக்களை வாக்களிக்கும்படி கேட்டது. ஓர் ஆட்சி மாற்றத்திற்கூடாக தங்களது தீராத பல பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கப்போகின்றதென்று தமிழ் மக்களும் நம்பினார்கள். ஆனால், இன்று ஐந்து மாதங்களைக் கடந்த நிலையிலும் தமிழ் மக்களுக்கு ஏமாற்றமான நிலைமைதான் காணப்படுகின்றது. இதை நான் மட்டும் சொல்லவில்லை. எனக்கு முன்பு பேசிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரே - ஆட்சி மாற்றத்தை ஆதரித்தவரே - தங்கள் தவறை உணர்ந்து பேசியிருக்கிறார். இந்த ஆட்சி மாற்றத்திற்கூடாக பிரதான பல விடயங்களுக்கு தீர்வு கிடைக்குமென்று தமிழ் மக்கள் நம்பினார்கள். குறிப்பாக, அரசியல் கைதிகளின் விடுதலையைக் குறிப்பிடலாம். நீண்டகாலமாக - 10 வருடங்களுக்கும் மேலாக - சிறு சிறு குற்றங்களுக்காக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளுக்கு இந்த ஆட்சியில் விடுதலை பெற்றுத் தரப்படுமென்று கூறப்பட்டது. அந்த நம்பிக்கை அவரகளுக்கு கொடுக்கப்பட்டது. ஆனால், இன்றுவரை அவர்களுக்கு எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. அவரகள் தொடர்பாக எந்த கரிசனையும் காட்டப்படவில்லை எந்த நம்பிக்கையும் ஊட்டப்படவில்லை.

இரண்டு மாதங்களுக்கு முன்பு நான் இந்த அவையிலே அரசியல் கைதிகள் விடயம் தொடர்பாகப் பேசியபோது, நீதி அமைச்சர் இடையிலே குறுக்கீடு செய்து, இவர்களுக்கான தீர்வு இரண்டு வாரங்களில் எட்டப்படுமென்று பதிலளித்தார் - உறுதியளித்தார். ஆனால், இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. எந்தவிதமான நம்பிக்கையும் அற்ற நிலைமையில்தான் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் இன்னும் சிறைகளில் வாடிக்கொண்டிருக்கின்றார்கள். காணாமற் போனவர்களின் உறவுகளுக்கு நிவாரணம் அல்லது ஏதோ நீதி கிடைக்குமென்ற நம்பிக்கை ஊட்டப்பட்டது. ஆனால், அவர்கள் இன்னும் கண்ணீருடன்தான் இருக்கின்றார்கள். குறைந்தபட்சம் அவர்களை அழைத்து - இந்த ஆட்சியில் அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கக்கூடிய எந்த விடயமும் கருத்தில் எடுக்கப்படவில்லை.

# சிறுவர் உரிமைகள் மீறப்பட்டால் அரசு பார்த்துக்கொண்டு இருக்காது

## பிரதமர் ரணில் சொல்கிறார்



சிறுவர்களே நாட்டின் எதிர்காலம், அவர்களது வாழ்க்கையை சிறந்தாக மாற்றியமைப்பது ஒவ்வொரு பெற்றோர்களுடைய தலையாய கடமை என்பதை போலவே நாட்டினதும் கடமையாகவே இருக்கின்றது.

சிறுவர்களை பாதுகாக்கவும் அவர்களின் எதிர்காலத்தை கட்டியெழுப்பவும் தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிறுவர் ஊழியத்தை இல்லாது ஒழித்தல் தினம் இன்று நினைவு கூரப்படுகின்றது.

இதனை முன்னிட்டு, பிரதமரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது நாடானது சிறுவர்கள் விடயத்தில் மிகவும் பொறுப்புடனும் அவர்களை ஊழியத்தில் ஈடுபடுத்துவதற்கு எதிராக குரலெழுப்பும் நாடுகளிடையே முன்னணியில் இருப்பதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பு சுட்டிக் காட்டியிருப்பதானது மகிழ்ச்சிக்குரியதோர் விடயமாகும்.

மேலும் சர்வதேச நாடுகளிலுள்ள சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுவதற்கான 14 வயதைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். ஆனாலும் இலங்கையில் 18 வயது வரை பிள்ளைகளுக்கு சிறுவர் உலகில் சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமை உண்டு. 12 வயதிலும் குறைந்த சிறுவர்களை தொழில்களில் ஈடுபடுத்தாமல் இருப்பதற்கு 2010 ஆம் ஆண்டு முதல் நாம் இணக்கம் தெரிவித்துள்ளோம்.

அத்துடன் 12 - 18 இடைப்பட்ட வயதையுடைய சிறுவர்களை ஆபத்தான கைத்தொழில்களில் ஈடுபடுத்துவது சட்டவிரோதமான செயலாக இருப்பதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சிறுவர்களால் தாங்கிக் கொள்ள முடியாதவாறு வன்முறையைப் பிரயோகித்து அவர்களை எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடுத்துவது பாரியதோர் குற்றமாகும்.

ஆனாலும், வறுமை மற்றும் குடும்ப உறவில் ஏற்படும் வீழ்ச்சி, அறியாமை போன்ற காரணங்களே பிள்ளைகளை தொழில்களில் அமர்த்துவதற்கான காரணிகளாக அறியப்பட்டுள்ளன. இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தல், சிறுவர்களை அதிலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் மற்றும் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்றவை பிரஜைகளாகிய எம் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.

சிறுவர்கள் மீது அன்பு செலுத்தி, பாராட்டி, பாதுகாப்பு வழங்கி, அவர்களுக்கு தரமான கல்வியைப் பெற்றுக்கொடுத்து எதிர்கால உலகத்துக்குப் பொருத்தமான பிரஜைகளாக அவர்களை உருவாக்குவதற்கு சிறுவர் ஊழியத் தொழில் முறை ஒழிப்பு தினத்தில் விசேடமாக திடசங்கற்பம் பூணுவோம் என பிரதமர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

# 20 ஆம் திருத்தச் சட்டமூலம் எதிர்த்து வாக்களிக்க முடிவு

சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

20 ஆவது திருத்தச் சட்ட மூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டால் அதனை எதிர்த்து வாக்களிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

இந்த விடயத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் எடுத்துரைக்கவும் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது என அக்கட்சியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழு கொழும்பில் நேற்று முன்தினம் கூடி இது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தத் திருத்தச் சட்டமூலத்தில் தேர்தல் முறைமை மறுசீரமைப்பில், தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் குறைவடையக்கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த சிறுபான்மையினர், சிறு கட்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இந்த 20 ஆவது திருத்தச் சட்ட மூலம் அமைக்கப்பட்டுள்ளதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

## விபத்தில் இருவர் பலி

அம்பாலாங்கொடையில் முச்சக்கரவண்டியும் லொறியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் பலியானதுடன் தந்தையும் பிள்ளையும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## முங்கோடை முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி தெற்கு முங்கோடை முருகமூர்த்தி ஆலய மகோற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பத்து நாட்கள் உற்சவம் நடைபெறவுள்ளதோடு 22 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

அனைத்து பக்தர்களும் உற்சவ காலத்தில் முருகனைத் தரிசிக்க ஆசார சீலர்களாக ஆலயத்திற்கு வருமாறு நிர்வாகிகள் கேட்டுக் கொள்கின்றனர்.

# மடு தேவாலய வருடாந்த திருவிழா முன்னேற்பாடுகள் மும்முரம்



(மன்னார்)

மடு திருத்தலத்தின் வருடாந்த ஆடித்திருவிழா தொடர்பான முதற்கட்ட கலந்துரையாடல் மன்னாரில் இடம்பெற்றிருக்கின்றது. மன்னார் மாவட்ட அரச அதிபரின் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் M.Y.S.தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் திருவிழா தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருக்கின்றது.

இதில் மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, மடுத் திருத்தல பரிபாலகர் அருட்தந்தை எமிலியான்ஸ் பிள்ளை, மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டிமெல ஆகியோர் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் ஆடி மாதம் இரண்டாம் திகதி இடம்பெறவிருக்கும் மடுத்திருத்தலத்தின் திருவிழாவிற்குத் தேவையான முன்னேற்பாடுகள் குறித்து இதில் விரிவாக ஆராயப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக தேவாலய சூழலின் பாதுகாப்பு, வீதி ஒழுங்கமைப்பு, போக்குவரத்து, மின்சாரம், குடிநீர், சுகாதாரம், உள்ளடங்கலாக ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன் போது விரிவாக ஆராயப்பட்டிருக்கின்றது.

அதேவேளை மதவிவகார அமைச்சின் கீழ் இயங்கும் கிறிஸ்தவ விவகார திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட ஏனைய அரச திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் மன்னார் அரச தனியார் போக்குவரத்து துறையினரும் கலந்து கொண்டனர்.

மடு திருத்தலத்தின் வருடாந்த ஆடித்திருவிழாவிற்கான முன்னாயத்தங்கள் தொடர்பான மீளாய்வுக் கலந்துரையாடல் சில தினங்களில் மடு தேவாலயத்தில் இடம்பெறும்.

இதனிடையே உடல் நலக்குறைவு காரணமாக கொழும்பில் சிகிச்சை பெற்று வரும் மன்னார் ஆயர் அருட்கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகைக்காக விசேட பிரார்த்தனையும் இதன் போது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சந்திரிகாவுடன் ரவி இன்று முக்கிய சந்திப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோருக்கு இடையில் இன்று முக்கிய சந்திப்பொன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிதி அமைச்சுக் கட்டடத்தின் இரண்டாவது மாடியில் மு.ப. 10.30 மணிக்கு இச்சந்திப்பு இடம் பெறவுள்ளது.

# மனித உருவ மரச்சிலை மீட்பு



மன்னார் பியர் பகுதிக் கடற்கரையில் மரத்தினால் உருவாக்கப்பட்ட மனித உருவிலான சிலை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

தலைமன்னார் பியர் பகுதியில் பழைய பாலத்தை அண்டிய கடற்கரையில் நேற்று முன்தினம் மாலை மரத்தால் உருவாக்கப்பட்ட மனித உருவிலான 5 அடி உயரமுள்ள சிலை ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

இதனை அவதானித்த கிராம மக்கள் குறித்த விடயம் தொடர்பாக தலைமன்னார் கிராம அலுவலரின் கவனத்திற்கு கொண்டு சென்றதை அடுத்து நேற்றுக் காலை இந்தச் சிலை மீட்கப்பட்டு கிராம அலுவலரின் அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இவ் விடயம் தொடர்பாக மன்னார் பிரதேச செயலருக்கு கிராம அலுவலர் தகவல் வழங்கியுள்ளார்.

# கிழக்கு முதலமைச்சரின் வாகனம் மோதி இருவர் காயம்

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற கிழக்கு மாகாண முதலமைச்சரின் வாகனத் தொடரணி விபத்துக்குள்ளானதில் ஐந்து பேர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை புணானையில் நடைபெற்ற விபத்தில் கிரான் பிரதேசத்திற்குச் செல்வதற்காக பேருந்து தரிப்பிடத்தில் காத்திருந்த ஒரு தாயும் ஆறு மாதக் குழந்தையும் படுகாயமடைந்துள்ளனர்.

முதலமைச்சரின் வாகனத் தொடரணியில் பயணம் செய்த மூன்று உத்தியோகத்தர்களும் படுகாயமடைந்திருந்த நிலையிலேயே இவ்வாறு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்தில் புணானையைச் சேர்ந்த 35 வயதுடைய பெண் ஒருவரும் அவரது குழந்தையும் ஆபத்தான நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு- மட்டக்களப்பு வீதியால் பயணம் செய்த முதலமைச்சரின் வாகன தொடரணி புணானைப் பகுதியில் மிகவும் வேகமாக சென்ற சமயத்தில் ஒரு வாகனத்தின் டயர் வெடித்துள்ளது.

இதன்காரணமாக வேகத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையில் பேருந்து நிலையத்தில் காத்திருந்த குழந்தை, தாயின் மீதும் மோதியுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூன் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.